
நீலவண்ணன்




# களம் பல கண்ட யாழ் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ். கோட்டை

(யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு)

"நீலவண்ணன்"

கமலம் பதிப்பகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: பெப்ரவரி, 1995.
''நீலவண்ணன்''
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு: டினேஷ் அச்சகம்,
புதியசெம்மணி வீதி, கல்வியங்காடு.

அட்டைப்படம்: 'ரமணி'

வெளியீடு: கமலம் பதிப்பகம்,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

விலை:

*

KALAM PALA KANDA YARL KŌDDAI —
A HISTORICAL DESCRIPTION OF JAFFNA FORT—

AUTHOR: "*NEELAVANNAN*"

FIRST EDITION: *Februery, 1995.*

PRINTED by: *Denes Press,*
*New Chemmany Road, Kalviyankadu.*

COVER: *Ramani.*

Price Rs:

விற்பனையாளர்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம் – கொழும்பு.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் – கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

05, ஒக்டோபர், 1990.

நீண்ட காலத்திற்குப் பின்னர் கோட்டை வாயிலில் எனது மகளுடன் நின்றிருந்தேன். கோட்டைக்குள் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் நுழைகின்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கோட்டை முற்றுகைக் காலத்தில் கோட்டைக்குள்ளிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் எனது வீட்டிற்கு மேலாகக் கூவிச்சென்றன. விமானங்கள் யாழ் நகர் எங்கும் பரவலாகக் குண்டுகளை வீசின. ஹெலிகள் பிப்ரிகலிவரால் வீதிகளையும் வீடுகளையும் துளையிட்டன. அதனால் அடிக்கடி அகதிகளாக மாறி, இடம் பெயர்ந்து கந்தரோடையிலுள்ள எனது மைத்துனர் இ. கதிர்காமநாதன் வீட்டில் தங்கி வாழ நேர்ந்தது. கனத்துக்கிடந்த மனம் இன்று கோட்டை வாயிலில் நிற்கும்போது இலேசாகிச் சுதந்திரக் காற்றில் மிதப்பது போன்ற உணர்வு.

கோட்டைக்கதவுகள் திறந்து கிடந்தன. கோட்டை முற்றத்தில் பிரவேசித்து, சதுரங்க வடிவத் தேவாலயத்தைக் கடந்து, கோட்டையின் கிழக்கு மதிலிற்குச் செல்கின்ற படிகளில் ஏறினோம். முனியப்பர் கோயில் எதிரில் தெரிந்தது.

முனியப்பர் கோயிலிற்கு எதிரேயுள்ள மதிலின் உச்சியிலிருந்து வடக்குப்பக்கமாக நடக்கில் வடகிழக்குக் கொத்தளம் வரும். சிறியதொரு விளையாட்டு மைதானத்தின் பரப்பினைப் பொதுவாகக் கொத்தளங்கள் உள்ளடக்கியிருந்தன. இந்த வடகிழக்குக் கொத்தளத்தில் பெரியதொரு ஆலமரம் வளர்ந்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இக் கொத்தளத்தின் மூன்று காவலரண் கூடுகளில் இரண்டு விடுதலைப்புலிகளினால் தகர்க்கப்பட்டிருக்கின்றன. ஒன்று வீரசிங்கம் மண்டபத்தினை நோக்கியபடி ஓரளவு சிதைந்து நிற்கின்றது. இக்கொத்தளத்திலிருந்து பார்க்கும்போது முற்ற வெளிக்கு அப்பால் உயர்ந்து காணப்படும் கட்டிடங்கள், விமானக்குண்டுவீச்சுக்களால் அவை எவ்வளவு தூரம் சிதைக்கப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. யாழ்ப்பாண நூல்நிலையத்தின் கோள வடிவ உச்சிக்கோபுரத்தில் மூன்று நான்கிடங்களில் ஏவுணைகள் தாக்கியதால் ஏற்பட்ட துவாரங்கள் தெரிகின்றன.

''அந்த நூல்நிலைய உச்சிக்கோளத்தினுள் இருந்து கொண்டு நமது வீரர்கள் இந்தக்கொத்தளத்தில் நடமாடுகின்ற பல ஸ்ரீ லங்கா இராணுவ வீரர்களைச் சினைப்பர் மூலம் தாக்கிச் சரித்திருக்கிறார்கள்... இங்கிருந்து ஏவப்பட்ட சினைப்பர் தாக்கி அந்த உச்சியிலிருந்து தாக்குதல் செய்து கொண்டிருந்த விடுதலைப் புலி வீரன் ஜெயராஜ் முதன்முதல் களப்பலியானார்...'' என்றார் நமக்கு வழிகாட்டி அழைத்து வந்த வீரர்.

வடகிழக்குக் கொத்தளத்தில் மழைவெயிலிற்காகச் சிறிய பந்தல்கள் சுவரோடு இடப்பட்டிருந்தன. உடைந்த அஸ்பெற்றர் தகடுகளால் கூரையிடப்பட்டிருந்தன. அப்பந்தல்களுள் நான்கு கட்டில்கள் காணப்பட்டன. ஒருபக்கத்தில் அடுப்பு மூட்டிய அடையாளம் காணப்பட்டது. தலைக்கவசத்தை வைத்து நீர் கொதிக்க வைத்திருப்பதும் தெரிகிறது. மைசூர் பருப்பு சிதறிக் கிடப்பதும் தெரிகிறது. பல்வேறு அளவுகளில் ரவைக்கூடுகளும் பிளாஸ்ரிக் ஷெல் உறைகளும் குவிந்து கிடக்கின்றன. அக் கொத்தளத்தில் காணப்பட்ட பாரிய பொருளின் ஒரு பகுதியை நம்முடன் வந்த வீரர் சுட்டிக்காட்டினார். ''இது தான் பசிலன் 2000 என்ற நமது குண்டின் பான்... விசிறி. நான்கரை அடி உயரம். 50 கிலோ மருந்து ..400 யார் பாயக் கூடியது. ஸ்ரீ லங்கா இராணுவத்தின் கொத்தளங்களைத் தகர்த்ததும், அவர்களைக் கிலி கொள்ளச்செய்ததும் பசிலன் தான். பசிலன் குத்தப்படுகின்ற சத்தம் கேட்டதும் 'கோட்டைக்குள் இருந்து. அம்மே அம்மே' என்ற அலறல் எழும்...கோட்டையின் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடங்களிலும் நீங்கள் பார்க்கலாம், பசிலன் குண்டு செய்திருக்கின்ற காரியத்தை ..''

மதில் பாதையில் பங்கர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பலகைகளையும் கோட்டைக்கட்டிடத் திராந்திகளையும் பயன்படுத்தி அமைத்திருந்தார்கள். பலமானவையாகக் காணப்படவில்லை. அத்துடன் மதில் பாதையில் அத்திவாரம் போல பங்கர்களை நெடுக வெட்டியிருந்தார்கள்.

''கோட்டையில் ஸ்ரீ லங்கா இராணுவம் சுப்மாநடந்தால் அவர்கள் தப்பமுடியாது. தலை வெளியில் தெரிந்தால் எங்கள் வீரர்களின் கரங்களிலிருந்து விடுபடுகின்ற சினைப்பர்கள் வீழ்த்திவிடும். அதனால், அவர்கள் இடம் மாறும்போது குவிந்தும், ஆழவெட்டிய இந்தப் பங்கர்கள் மூலமும் நடந்தனர்...''

நாங்கள் வடக்குப்புற மதிலில் நடந்தோம். ஒவ்வொரு பீரங்கித்துவாரங்களும் துப்பாக்கித் துவாரங்களாக்கப்பட்டிருந்தன. மண்மூடைகளை அடுக்கி அரண் செய்திருந்தனர். மதில் பாதையில் நடப்பதைவிடுத்து, வெளிச்சுவரில் ஏறிப்பார்க்க விரும்பினோம். மதில் பாதையிலிருந்து மூன்று நான்கடி உயரமாக வெளிச்சுவர் இருந்தது.

''கவனம்... கவனம்... மிதிவெடிகள்...''என விடுதலைப்புலி வீரர் எச்சரித்தார்: ''விழுந்தால் உட்பக்கமாகச் சரியுங்கள். முற்பக்கமாகச் சரிந்தால் நிச்சயம் மிதிவெடி மீதுதான் சரிவீர்கள்...''

கவனமாக ஏறி நின்று பார்த்தோம். எலும்புக்கூடுகளாகச் சிதைந்து எஞ்சிநிற்கும் கட்டிடங்கள் தெரிகின்றன. தபாற் கந்தோர், வீரசிங்கம் மண்டபம், றீகல் தியேட்டர் அனைத்தும் தெரிகின்றன. எவ்வளவு விமானக்குண்டுகளையும், கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகளையும், ரவைகளையும் தாங்கிக் கொண்டு அவை நிற்கின்றன? அப்பக்க முற்றவெளியில் இரண்டு புல்டோசர்கள் நின்றிருந்தன. மதிலிற்கும் அகழிக்கும் அப்பால் வடக்குப்புறத்தாழ் கொத்தளத்தை அண்மி அவை நின்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்தக்கோட்டைக் கைப்பற்ற நாங்கள் எடுத்த முயற்சிகளில் ஒன்று அந்த வாகனங்கள், புல்டோசர்களையும் கிறேயின்களையும் கவசங்களாக்கி கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டோம். அம்முயற்சி வெற்றி தரவில்லை. புல்டோசர்களின் காற்றடைந்த ரயர்கள் இலகுவில் எதிரியின் தாக்குதலிற்குள்ளாகி நகரமுடியாது போய்விட்டன... அவற்றில் இரண்டு அவை. பண்ணைக்கரைவீதியில் இப்படியான வேறிரு வாகனங்களைக் காண்பீர்கள். அவை பாரிய கிறேயின்கள். வீரர்களை அப்படியே தூக்கி மதிலின் மேல் ஏற்றிவிடக்கூடியன. அவை விமானக்குண்டுகள் தாக்கிய பாரிய குழிகளில் தவறி இறங்கிவிட்டதால், செயலிழந்துவிட்டன. முனியப்பர் கோயிலில் அருகிலும் ஒரு வாகனம் நிற்கின்றது.''

தமது முயற்சிகளின் தோல்விகளை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். தமது பலத்தை அவர்கள் சரிவர மதிப்பிட்டிருக்கிறார்கள்.

அப்படியே நடந்து வட மேற்குக் கொத்தளத்திற்கு வந்தோம். அக்கொத்தளத்தில் கப்பி பிணைப்பதற்குரிய தூண்களுடன் சேர்ந்த ஒரு கிணறு காணப்பட்டது. நிலமட்டத்திலிருந்து உயர்த்தப்பட்ட உயர் கொத்தளத்தில் இப்படியொரு கிணறு இருக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. ரவைகள் வரும் இரும்புப் பெட்டியை வாளியாகப் பாவித்து, வயர் துண்டுகளை முடிந்து செய்திருந்த கயிற்றின் மூலம் தண்ணீர் அள்ளியிருந்தார்கள். அவை அவ்வாறேயிருந்தன. நாமும் ஒரு பெட்டி தண்ணீர் அள்ளி நாக்கில் விட்டுப்பார்க்க முயற்சித்தோம்.

''கவனம்... அதில் சயனைட் கலந்திருக்கலாம்...'' என எச்சரிக்கை விடுதலைப்புலிவீரரிடமிருந்து வந்தது. நாக்கில் இட்ட நீரை வழித்துத் துப்பினோம்.

அந்தக் கொத்தளத்தில் நான்கு சிம்னிகள் வெளித்தெரிந்தன. காற்று உள்ளே செல்வதற்குரிய வழிகள் அவையென நான் எண்ணமிட்டேன். உண்மையில் அந்தக்கொத்தளத்தின் கீழ் இருட்டறைகள் இருந்தன. சிறைச்சாலையின் இருட்டறைகள் அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தளத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் அதற்குள் சென்று பார்த்தோம். வசதியான படுக்கைகளுடனும், தளபாடங்களுடனும், விசிறிகளுடனும் அந்த இருட்டறைகள் காணப்பட்டன. கோட்டையிலிருந்த இராணுவ அதிகாரிகள் தம்மை விடுதலைப்புலிகளின் ஏவுகணைகளிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக அந்த இருட்டறைகளில் தம்மைச் சிறை வைத்துக் கொண்டிருந்துள்ளனர் என அனுமானிக்க முடிந்தது.

மேற்குப்புறக் கோட்டை மதிலில் நடந்தோம். அகழிக்குள் நீர் நிறைந்திருந்தது. தொலைத்தொடர்புக்கட்டிடம், பொலீஸ் விடுதிகளின் எச்சங்கள் தெரிந்தன. மேற்குப்புறச் சின்னக்கோட்டையும் (தாழ்கொத்தளம்) அகழிச்சுவரின் சிலவிடங்களில் உடைவுகளும் தெரிந்தன. கோட்டை மதிலிலிருந்து பெரியதொரு கயிறு அகழிக்குள் இறங்குவதையும் அவதானிக்க முடிந்தது. சின்னக் கோட்டைக்குள் மண்மூடைகள் அடுக்கி அரண் செய்யப்பட்டிருப்பதும் தெரிந்தது.

''மண்டைதீவிலிருந்து விசைப்படகுகள் மூலம் கோட்டைக் கரையில் கரையேற முயன்ற ஸ்ரீ லங்கா இராணுவத்தினரில் தப்பிப்பிழைத்தவர்கள் இந்தச் சின்னக்கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். அங்கிருந்து பின்னர் அகழிக்குள் நடந்து கயிற்றின் மூலம் கோட்டைக்குள் நுழைந்து கொண்டனர்... அந்தவிடம் இதுவா?'' எனக்கேட்டேன்.

''அப்படித்தான் ஸ்ரீ லங்கா அரசு கூறுகிறது...'' எனப்புலி வீரர் சிரித்தார்.

கோட்டை மதிலில் நடந்து பண்ணைக்கரை வீதிப்புற தென் மேற்குக் கொத்தளத்திற்கு வந்தோம். மேற்கில் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். அக்கொத்தளத்திலிருந்து யாழ்ப்பாணக் கடலைப் பார்ப்பது இனிமையான ஓர் அனுபவம். பண்ணைத் தாம்போதி சிலவிடங்களில் சிதைந்து கிடந்தது. தென்புறமாகச் சின்னத்தீவும் மண்டைதீவும் பசுமையாகத் தெரிந்தன. இவ்வளவு அனர்த்தங்களுக்கும் காரணமாகிவிட்ட அந்தத் தீவுகள் அமைதியாக உறங்கிக்கிடந்தன. கடலின் கரையில் சில மிதவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தன. இரண்டு தகரப்பீப்பாக்களைப் பிணைத்து,அதிலிருந்து இரு தடிகள் சமநிலையைப்பேண இன்னொரு மிதவையுடன் பிணைக்கப்பட்டிருந்தன. அந்த பீப்பாக்களின் மேல் மண்மூடைகள் நான்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"இவற்றினை கடலிற்குள் இழுத்துச்செல்வோம். பின்னர் அதனையே கவராக வைத்து கடற்புலிகள் கடலிலிருந்து தாக்குதல்களைத் செய்வார்கள்." எனப் புலிவீரர் விளக்கம் தந்தார்.

கடற்கரைவீதியில் கிரேயின் ஒன்று பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று சிதைந்து கிடந்தது. மதிலின் உச்சியிலிருந்து குனிந்து பார்த்தோம். தலைசுற்றியது. கிடுகிடு செங்குத்து. லொறி ஒன்றின் சிதைவுகள் காணப்பட்டன.

"கோட்டை மதிலைத் தாக்க நாம் எடுத்த முதல் முயற்சி. மண்மூடைகளும், வெடிமருந்துகளும் திணிக்கப்பட்ட லொறியை கோட்டை மதிலோடு மோதி தகர்க்கும் முயற்சி ஒன்றினைச் செய்து பார்த்தோம்."

குனிந்து பார்த்தோம். கொத்தளத்தின் மட்டத்திலிருந்து ஆறடி பதிவாக மதிலில் ஒரு சிறிய ஆலமரம் பலமாக வேரூன்றி முளைத்திருந்தது.

"அந்த ஆலமரத்தைப் பார்த்துக்கொண்டிருங்கள். அது நமது கோட்டைத்தாக்குதலிற்கு எவ்வாறு உதவியது என்பதைப் பின்னர் சொல்கிறேன்."

"இப்போதே சொல்லுங்கள்..." என்று ஆவலுடன் கேட்டோம்.

"பிறகு விரிவாகச் சொல்கிறேன்..."

தென்மேற்குக் கொத்தளத்திலிருந்து தென் கொத்தளத்தை இணைக்கின்ற மதிலில் நடந்தோம். நமக்கு இடது பக்கத்தில் மதிலிற்குக் கீழே சிறைச்சாலைக்கட்டிடங்கள் சிதைந்து காணப்பட்டன. கூரைகள் காணப்படவில்லை. மதில் அருகோடு பெண்கள் சிறைச்சாலைக்கட்டிடம் காணப்பட்டது. மதிலின் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிறைச்சாலைக்குக் கீழ் இறங்கும் படிவரிசை ஒன்று காணப் பட்டது. 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி தலைவர் ரோகண விஜயவீரவை இச்சிறைச்சாலையிலிருந்து தப்பிவிப்பதற்காக வந்த சிங்கள இளைஞர்கள் இந்தப்படி ஊடாகத்தான் கோட்டை மதில் மீது ஏறினார்கள். அவ்வாறு ஏறிச்செல்லும்போது ஒரு கைக் குண்டினை பெண்கள் சிறைச்சாலைக் கூரை மீது வேணு மென்றோ, தற்செயலாகவோ இட்டார்கள். அது கூரையைப் பிய்த்துக்கொண்டு கீழே விழுந்து பெண் வார்டர் செல்லம்மா என்பவரின் வலது காலைத் துண்டிக்க வைத்துவிட்டது. எறிகுண்டிற்குக் காலை இழந்த முதல் பெண்மணி யாழ்ப்பாணத் தில் இவர்தான்.

இந்தப்படிகளுக்குக் கீழ் முன்னர் கோட்டைக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்குரிய வாயில் ஒன்று இருந்தது. அது பின்னர் அகற்றப்பட்டு காங்கிரீற் கற்களினால் பலமாகக் கட்டப்பட்டது. அந்த முன்னைய வாயிலை உடைத்துக்கொண்டு தான் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் இறுதிநாளில் ஓட நேர்ந்தது. அவ்விடத்தில் ஓர் நிரந்தரமான வழியை ஏற்படுத்திவிடும் நோக் குடன் அப்பகுதிக் கோட்டை மதில், ஒரு வாயில் அளவிற்குப் போராளிகளால் தகர்க்கப்பட்டுவருவதைக் காண முடிந்தது.

அவ்விடத்தைக்கடந்ததும் யாழ்ப்பாணக் கோட்டையின் பிர தான வாயிலின் மேல் பாதையில் வந்தோம். புலிக்கொடி கம்பீர மாகப் பறந்து கொண்டிருப்பதையும் கண்டோம். கோட்டை வாயி லின் மேல் நின்று நோக்கும்போது அந்த வாயிலிற்கு இட்டுவரும் அகழிக்கு மேலிடப்பட்டிருக்கும் வீதி தெரிகின்றது. முன்னர் இங்கு ஒருதொங்கு கதவு இருந்தது. அது பிரித்தானியர் அகன் றதன் பின்னர் அகற்றப்பட்டு மதகுகள்கொண்ட வீதியாக மாற் றப்பட்டது. வாயிற்புற சின்னக்கோட்டைக்கூடாக அதாவது தாழ் கொத்தளத்தின் ஊடாக அந்தப்பாதை வருகின்றது. அங்கிருந்து பார்க்கும்போது பொலிஸ் நிலையக் கட்டிடங்கள் தகர்ந்து சரிந்திருப்பது தெரிகின்றது.

கோட்டை வாயிலின் மேல் மதிலால் நடந்து தென் கிழக் குக் கொத்தளத்திற்கு வந்தோம். துரையப்பா ஸ்ரேடியம் எதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரில் தெரிந்தது. அதனை விடுதலைப்புலிகள் தமது அரணாகப் பாவித்து வருவதும் தெரிந்தது. எவ்வளவு அருகில் அந்தக் காவலரண் இருக்கிறது எனப்பார்த்தபோது வியப்பு ஏற்படுகின் றது. கல் எறியும் தூரம்?

தென்கிழக்குக் கொத்தளத்தில் ஏராளமான சுடுகலன்களின் வெற்றுக்கள் கிடக்கின்றன. அவை இக்கொத்தளத்தி லிருந்து உக்கிரமான தாக்குதல்கள் நடந்திருப்பதைத் தெரிவிக்கின் றன. சுப்பிரமணியம் பூங்காவும் மார்பளவுச் சிலையாக இராமநா தனின் சிதைந்த உருவும் தெரிகின்றன. அந்தச் சிலையருகில் யுத்தம் தொடங்கிய இரண்டாம் நாள்,உணவு எடுத்துச்சென்ற சதீஸ்குமார் இக்கொத்தளத்திலிருந்து ஏவப்பட்ட சினைப்பரால் உயிரிழந்ததும் நினைவு வருகின்றது.

அக்கொத்தளத்திலிருந்து வடக்குப்புறம் நோக்கி நடந்தோம். முன்னர் நாம் ஏறிய படிகள் வருகின்றன. சொக்கட்டான் வடிவத் தேவாலயத்திற்கு அருகில் இறங்கினோம். படிகளின் அருகில் மூன்று வாகனங்கள் எரியூட்டப்பட்டிருக்கின்றன. பிரமாண்டமான அந்தத் தேவாலயத்தினுள் நுழைந்தோம்.

ஏறத்தாழ 600 அடி சுற்றளவு கொண்ட சொக்கட்டான் விளையாடும் பலகையின் வடிவினது. 50 அடி அகலமான வாயிலை இரண்டு பக்கங்களிலும் கொண்டிருக்கின்றது. 1706 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் இதுவென ஆலயத்தின் முகப்பில் இடப்பட்ட ஆண்டுகள் குறிப்பிடுகின்றன. 1626ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையின் இன்றைய வடிவம் ஒல்லாந்தத்தேசாதிபதி பான்ஸ்சூன்ஸ் என்ற வன்கோயனால் அல்லது யாழ்ப்பாணத்தவர் குறிப்பிடுவதுபோல பெரிய ஒல்லாந் தேசுவால் கட்டிமுடிக்கப்பட்டது. அக்கோட்டையினுள் இத் தேவாலயம் 1706 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டதாக அறியக் கிடைக்கிறது. கூரை தகர்ந்தநிலையில் அப்பிரமாண்டமான ஆலயம் காட்சி தருகின்றது. உச்சியில் புலிக்கொடி பறக்கிறது. பிரமாண்டமான நான்கு வெளிவளைவுகளையும் நான்கு உள் வளைவுகளையும் கொண்ட தேவாலயம் இதுவாகும். உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழையும்போது, கருங்கல் பதித்த தரை கிளறப்பட்டுக்காணப் படுகின்றது. இரண்டடி சதுரமான பொழியப்பட்ட கருங்கற்கள் தரையில் பதிக்கப்பட்டிருந்தன. அவை அகற்றப்பட்டிருந்தன. அத்தேவாலயத்தின் மத்தியில் கல் சவப்பெட்டியொன்றின் இடு குழி தெரிகின்றது. அதனுள் நூறாண்டுகளாக மரணித்து உறங் கிய மாமனிதனின் எலும்புக்கூடு விடுதலைப்புலிகளால் அகற்றப் பட்டு பக்குவமாகப்பேணி வைத்திருப்பதாக அறிந்தேன். யாராக இருக்கும்?

தேவாலயத்தைவிட்டு வெளியில் வந்தபோது, ஒல்லாந்தரை இந்த மண்ணிலிருந்து நீக்குவதற்காக ஒரு ஞாயிறு, இத்தேவா லயத்தினுள் வழிபாட்டிலிடுபட்டிருந்த டச்சுக்காரரை முற்றாக அழிக்க நடந்த சதியை எண்ணிக்கொண்டேன். டொன் லூயிஸ் என்பவன் தலைமையில் நிகழ்ந்த இச்சதி, மனுவல் அந்திராடே என்ற சிங்கள முதலியால் காட்டிக்கொடுக்கப்பட்டது. சதியில் ஈடுபட்ட பதினைந்துபேர் கொடூரமாகக் கொலையுண்டனர். டொன் லூயிஸ் என்பவன் நல்லூர் இராசவாசல் முதலியாராக விருந்த பூ த த் த ம் பி எனவும் சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

கோட்டையின் வடக்குப்புற மதிலோடு குயின்ஸ் ஹவுஸ்- ராணி மாளிகை காணப்படுகின்றது. 265 அடி நீளம் 132 அடி அகலமும் கொண்ட பிரமாண்டமான மாளிகை இது. இங்குதான் ஸ்ரீ லங்காவின் உயர் அதிகாரிகள் தங்கினர். அரசப்பிரதிநிதிகள், கொமுசாறிகள், இராணுவ உயர் அதிகாரிகள், நீதிபதிகள், உயர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கியுள்ளனர். அம்மாளிகை சிதைந்து காணப்படுகின்றது. அம்மாளிகையின் முன் வடபிராந் திய பன் ஒன்று உடைந்துகிடக்கின்றது. அப்படியே நடந்து சென்றால் அதிகாரிகளின் மாளிகைகள் இரண்டு வரும். அவை யும் எரியூட்டப்பட்டிருக்கின்றன. அவ்வரிசை முடக்கில் ஆயிரக் கணக்கான துப்பாக்கிகள் வைத்து எரிக்கப்பட்டிருப்பதற்கான அடையாளங்கள் தெரிகின்றன. இரண்டு இரும்புப்பெட்டிகள் வெடிவைத்துத்தகர்க்கப்பட்டு அதற்குள் இருந்த பத்திரங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு இரும்புப்பெட்டியினுள் நிறைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த ஒருசத நாணயங்கள் அத்தனையும் எரிக்கப்பட்டிருக்கின்றது.

கோட்டையின் மேற்குப்புற மதிலோடு யாழ்ப்பாணச் சிறைச்சாலை காணப்படுகின்றது. முதலில் ஜெயிலர்களின் மாளிகைகள் சிதைந்து காணப்படுகின்றன. அவற்றின் ஊடாக உட்புகில் சிறைச்சாலைக்குள் செல்லலாம். 250 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட சிறைச்சாலைக்கட்டிடத்தில் சிறிய சிறிய அறைகள் பல காணப்படுகின்றன. மூன்று கிணறுகளும் உள்ளன. அக்கட்டிடங்கள் சிதைந்துள்ளன. அவற்றினைக்கடந்து செல்லில் வடமேற்குக் கொத்தளத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் இருட்டறைகளைக் காணலாம். அவற்றிற்குள் காணப்படும் கட்டில் மெத்தைகள், அலங்காரத் தளபாடங்கள் என்பனவற்றிலிருந்து அவை இராணுவ உயர்திகாரிகளின் பதுங்குமிடங்களாக விளங்கி வந்திருப்பதைக் காணமுடிகின்றது. ராணி மாளிகையில் வசதியாக இருந்தவர்கள் இந்த இருட்டறைகளுள் எப்படித் தம்மைச் சிறைவைத்துக்கொண்டார்களோ?

அப்படியே பெண்கள் சிறைச்சாலையூடாக கோட்டை வாயிலிற்கு வந்தோம். கோட்டையின் கிழக்குப்புற மதிலோடு காணப்பட்ட கட்டிடங்கள் சிதைந்திருக்கின்றன. அவற்றினுள் உடைக்கப்பட்ட இரும்புப்பெட்டிகள், இரும்புப்பீரோக்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவை உடைத்தெடுக்கப்பட்ட பின்னர் எரியூட்டப்பட்டிருக்கின்றன. தப்பியோடும்போது ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் இவற்றினை நிறைவேற்றிவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

கோட்டையின் மத்தியில் காணப்படும் பெரும் வெளியில் பசிலன் குண்டுகளின் எச்சங்கள் காணப்படுகின்றன. பதுங்கு குழிகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. பொதுவாகக் கோட்டைக்குள் தங்குவதற்கு எந்த ஒரு கட்டிடமும் முழுமையாகவில்லை. அனைத்தும் விடுதலைப்புலிகளின் ஏவுகணைகளுக்கும் பசிலன் குண்டிற்கும் ஆட்பட்டு தகர்ந்து போயிருப்பதைக் காண முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக்கோட்டை யாழ்ப்பாணத்தை அடக்கியாளும் ஆதிக்கச் சின்னமாகக் கருதப்பட்டது. அதனை அந்த ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக நிகழ்ந்த போர்...

அந்த 107 நாட்கள்...

365 ஆண்டுகள் இந்த மண்ணின் ஆதிக்கச்சின்னமாக விளங்கிய யாழ் கோட்டை அந்த 107 நாட்போரின் பின்னர் முதற் சுதந்திரச்சின்னமாக மாறிவிட்டது.

யாழ்ப்பாணக்கோட்டையை மீண்டும் இராணுவம் ஆக்கிரமிக்காதிருப்பதற்காகக் கோட்டையின் மதில்கள் உடைத்து நீக்கப்பட்டு வருகின்றன. கோட்டையினுள் இருந்த சிதைந்த கட்டிடங்கள் அகற்றப்படுகின்றன. இந்த மண்ணிலிருந்து அடிமைச் சின்னமொன்று அகற்றப்பட வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கி இருக்கின்றது. ஆனால் நான்கு நூற்றாண்டு அடிமைத்தனத்தைச் சுதந்திர உணர்வு மிக்க இளம் சந்ததியொன்று ஒரு யுக புருஷனின் தலைமையில் வெற்றி கொண்டது என்பதற்கு இந்தக் கோட்டையின் ஒரு பகுதியாவது எஞ்சி நின்று வருங்காலச் சந்ததிக்குச் சாட்சி கூறக் கூடாதா? எதனை எஞ்ச விடலாம்?

கோட்டையின் ஐங்கோண வடிவைப் பிரதிபலிக்கும் அகழி எஞ்சிநிற்க, சமன்படுத்தப்பட்ட கோட்டை வெளியின் மத்தியில் நமது சுதந்திரச்சிலை கடலைப்பார்த்தபடி வானளாவ உயர்ந்து நிற்கில்...? இதனைக் குவி மையமாகக் கொண்டு யாழ்ப்பாணப் புதிய நகரம் நாலாதிசைகளிலும் விரிவிடையில்...? மண்டைதீவு, வேலணைத்தீவு என்பன புதிய யாழ்ப்பாண நகரின் பகுதிகளாகப் பரிமானம் எடுக்கில்...? கோட்டையை விட்டு வெளியேறும்போது எனக்கு ஏற்பட்ட உணர்வுகள் இவையே.

'களம் பல கண்ட யாழ் கோட்டை' என்ற இந்த ஆய்வு விபரணத்தின் முதற்பகுதி முரசொலிப் பத்திரிகையில் 08-07-1990 முதல் வெளிவந்தது. உண்மையில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய தொடராக இது இருந்தது. இதனை மேலும் ஆராய்ந்து முழுமையாக இந்நூலில் தந்துள்ளேன். இது ஓர் ஆவணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருங்காலச் சந்ததியினருக்குக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆவணம். இதனை ஆய்வுக்கட்டுரை வடிவில் நான் எழுதவில்லை. ஏனெனில், இலக்கியம் வாசிக்கப்படவேண்டும் என்பதில் எனக்குள்ள திடமான நம்பிக்கை.

இந்தக் கட்டுரைத் தொடரை எழுதுவதற்குக் காரணராக விளங்கிய முரசொலி சிவராசா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். களம் பல கண்ட யாழ். கோட்டையை ஓர் ஆவணத் திரைப்படமாகத் தயாரிப்பதற்குச் சரியான முறையில் எழுதித் தருமாறு என்னிடம் அன்புக்கு கோரிக்கை வைத்த புதுவைக் கவிஞர் இரத்தினதுரைக்குத் என் நன்றிகள். இப்படி ஒரு கோரிக்கையில்லாவிடில் இந்நூல் இவ்வளவு விரைவில் உருவாகியிருக்காது. இதனை ஆக்குவதற்குப்பல வகைகளிலும் பலர் உதவியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்தக் கோட்டை யுத்தத்தில் களமாடிக் காவியமாகிவிட்ட எங்கள் இளம் பிள்ளைகளை எண்ணிப்பார்க்கிறேன். நெஞ்சம் கனக்கின்றது. அவர்களுக்கே இந்நூல் காணிக்கை.

யாழ்ப்பாணம்.
10-02-1995

‘நீலவண்ணன்’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாக்கத்திற்குதவிய
# நூல்களும் கட்டுரைகளும்


1. Belamy, C.V., THE FORT OF JAFFNA.

2. Depinder Singh, Lt. Gen., IPKF IN SRI LANKA, Trishul Publications, New Delhi, 1992.

3. Dewaraja, L.S., THE KANDIAN KINGDOM, 1707-1760.

4. EMERGENCY, 1979, A MIRJE Publication, Kandy, 1980.

5. Fernao de Queyroz, S J., TEMPORAL AND SPIRITUAL CONQUEST OF CEYLON, Govt Press, Colombo, 1930.

6. Gnanaprakasar, S., THE KINGS OF JAFFNA - DURING THE PORTUGUESE PERIOD, O M.I, Jaffna, 1920.

7. MENDIS, G.C., CEYLON UNDER THE BRITISH, The Colombo Apothecaries Co. Ltd, 1948.

8. Navaratnam, C S , TAMILS AND CEYLON, Jaffna, 1958.

9. Natesan, S., THE NORTHERN KINGDOM, History of Ceylon, Vol: I. Part. II, Colombo, 1960

10. Navaratnam, C S, VANNI AND THE VANNIYAS, Manipay, Jaffna, 1960.

11. NELSON, W.A., THE DUTCH FORTS OF SRI LANKA, 1984.

12 OPERATION FORT, Sunday Observer, 16.9.90.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. Pathmanathan S., THE KINGDOM OF JAFFNA, Colombo, 1978.

14. Parker, H., ANCIENT CEYLON, LONDON - 1909.

15. Perera, S.G., HISTORY OF CEYLON, THE BRITISH PERIOD, 1795 - 1948; Lake House, Colombo, 1948.

16. Perera, S.G., HISTORY OF CEYLON, The Portuguese and The Dutch Periods, 1505 - 1796. Lake House, Colombo - 1949.

17. Pieris, P.E., THE DUTCH POWER IN CEYLON,

18. Pieris, P.E., CEYLON THE HOLLANDERS, 1658-1796. The Colombo Apothecaries Co. Ltd, Colombo.

19. Ponniah, S., SATYAGRAHA, Valvetlithurai - 1963.

20. Report of the Presidential Commission of Inquiry into the Incidents Which Took Place Between 13th August and 15th September, 1977 - Sessional Paper, No. VII, Sri Lanka - 1980.

21. REIGN OF TERROR IN JAFFNA, May - June 1981, Colombo Study Circle, 1981.

22. Rohan Gunaretna, WAR AND PEACE IN SRI LANKA, Institute of Fundamental Studies, Sri Lanka - 1987.

23. Robert Knox in the Kandyan Kingdom, Edited by: E.F.C. Ludowyk, Oxford University Press - 1948.

24. Parkar, H., ANCIENT CEYLON, London - 1909.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. Phillipus Baldeaus, A TRUE AND EXACT DESCRI--PTION OF THE GREAT ISLAND OF CEYLON, English Translation, 1952.

26. Philp, K., Crowe, DIVERSIONS OF A DIPLOMAT IN CEYLON, Macmillan & Co. Ltd, London - 1957.

27. Silva, R.K. de & Beumer, W.G.M., ILLUSTRATIONS AND VIEWS OF DUTCH CEYLON, 1602 - 1796. Serendib Publications, London - 1988.

28. Silva, C.R. de., THE PORTUGUESE IN CEYLON, 1617 - 1638. Colombo, 1972.

29. Simon Asie Chetty, ON THE HISTORY OF JAFFNA FROM THE EARLIEST PERIOD TO THE DUTCH CONQUEST, JRASCB, Vol:1, Ceylon Gazetter, Colombo, 1834.

30. Sophia Pieters, MEMORIE OF RYCLOF VAN GOENS, Jr., Colombo - 1910.

31. Sophia Pieters, MEMORIE OF LAURENS PYL, Colombo - 1910.

32. Suryanaradyana, P.S., THE PEACE TRAP, An Indo - Sri Lankan Political Crisis, New Delhi - 1988

33. TYRONNE FERNANDO, 100 DAYS IN SRI LANKA' 87 Colombo, 1988:

*34. இராசநாயகம். செ., யாழ்ப்பாணச் சரித்திரம், ஸ்ரீசண் முகநாத அச்சகம், யாழ்ப்பாணம் - 1933.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. இராசநாயகம், செ., யாழ்ப்பாணச் சரித்திரம், ஆங்கிலேயர் காலம், யாழ்ப்பாணம், 1935.

36. குணராசா, க., நல்லைநகர் நூல், பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, யாழ்ப்பாணம் - 1987.

37. குணராசா, க., யாழ்ப்பாண இராச்சியத்தின் கதை, வித்தியா சஞ்சிகை, உரிம்பிராய் இந்துக்கல்லூரிப் பவளவிழா மலர் - 1986.

38. கொடிறின்றன், H.W., இலங்கையின் சுருக்க வரலாறு, அரச கரும மொழித்திணைக்களம், கொழும்பு – 1960.

39. சதாசிவம்பிள்ளை, வே., யாழ்ப்பாண வைபவம், கோணேஸ்வர அச்சகம், திருகோணமலை - 1965.

40. சிற்றம்பலம், சி.க., யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி - 1992.

41. சிவானந்தன், யாழ்ப்பாணக்குடியேற்றம், யாழ்ப்பாணம், 1933.

42. செங்கை ஆழியான், கடல்கோட்டை, ஈழநாடு வெளியீடு, யாழ்ப்பாணம் - 1985.

43. செங்கை ஆழியான், களம் பல கண்ட யாழ். கோட்டை, முரசொலிப் பத்திரிகை - 1990.

44. மயில்வாகனம், நா., ஐரோப்பியர் பார்வையில் இலங்கை, ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம் - 1974.

45. மயில்வாகனப்புலவர், யாழ்ப்பாண வைபவமாலை, முதலியார் குல. சபாநாதன் பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம் - 1949.

46. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாணம் - 1915.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. டானியில்ஜோன், யாழ்ப்பாணச் சரித்திரம், முதலாம் பாகம், யாழ்ப்பாணம் – 1930.

48. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாண வைபவ கௌமுதி, வசாவிளான் - 1918.

49. வேலுப்பிள்ளை, சி.டி., அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம், யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை - 1984.

50. வையா, ஞா. ஞானப்பிரகாசர் பதிப்பு, அச்சுவேலி - 1921.

51. பூதத்தம்பி விலாசம், சு.க. கந்தையாப்பிள்ளைப் பதிப்பு, விவேகானந்த யந்திரசாலை, யாழ்ப்பாணம் 1931.

52. ஞானப்பிரகாசர், எஸ்., யாழ்ப்பாண வைபவ விமர்சனம், தமிழரசர் உகம், அச்சுவேலி - 1928.

53. யாழ். கோட்டையை எவ்விதம் கைப்பற்றினோம்? விடுதலைப்புலிகள், சஞ்சிகை, ஆவணி - புரட்டாதி - 1990.

54. ஜோன், எஸ்., யாழ்ப்பாணச் சரித்திரம் - 1879.

55. ஜெகந்நாதன், பொ., யாழ்ப்பாணத்தமிழரசர் வரலாறும் காலமும், யாழ் இலக்கிய வட்ட வெளியீடு - 1987.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

**பகுதி: ஒன்று** 1 - 20

*பிலிப் தே ஒலிவேறா*
(போர்த்துக்கேயர் காலம்)

**பகுதி: இரண்டு** 21 - 40

*றைக்ளோப் வன் ஹூன்ஸ்*
(ஒல்லாந்தர் காலம்)

**பகுதி: மூன்று** 41 - 49

*ஆங்கிலேயர் ஆட்சி*
(ஆங்கிலேயர் காலம்)

**பகுதி: நான்கு** 50 - 77


*ஈழயுத்தம் - 1*

**பகுதி: ஐந்து** 78 - 105

*ஈழயுத்தம் - 2*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர்த்துக்கேயர் அமைத்திருந்த யாழ்ப்பாணக்கோட்டை
(1672 இல் பால்தேயஸ் பாதிரியார் வரைந்தபடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக்கோட்டை
அதன் கிழக்குப் பாகத்தில் அமைந்துள்ள சீதாரி ( பறங்கித் தெரு நகரம்),
வடக்கே காணப்படும் பெரியகடை (நகரம்)
(வலன்ரைனின் வரைபு - 1726)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக ஒல்லாந்தப்படை பண்ணைக்கரையில் முகாமிட்டுள்ளது. பான்ஸ் வன் ஹூன்ஸ் முன் காணிக்கைப் பொருட்களை யாழ்ப்பாண மக்கள் சமர்ப்பிக்கின்றனர்.
(பால்தேயஸ் பாதிரியார் வரைபு - 1672)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒல்லாந்தர் கட்டிய யாழ்ப்பாணக் கோட்டை. யாழ்ப்பாணக் கடனீர்ஏரியிலிருந்து
பார்க்கும்போது யாழ்ப்பாணக் கோட்டையின் தோற்றம்.
( ஹெய்ட் என்பவரின் வரைபு - 1744 )




யாழ்க்கோட்டையினுள் அமைந்த மைதானத்திலிருந்து
வடக்கே நோக்கியபோது தெரிந்த கோட்டையின் உள்ளமைப்பு.
(ஸ்ரெயிகர் என்பவரின் வரைபு - 1710)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாண முற்றவெளியிலிருந்து நோக்கும்போது
யாழ்ப்பாணக் கோட்டையின் தோற்றம்.
( ஹெய்ட் என்பவரின் வரைபு - 1744)



யாழ்பபாணக் கோட்டையில் ஒல்லாந்தரைக் கவிழ்த்து கோட்டையைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை முறியடிக்கப்பட்டு சதிகாரர் தண்டனைக்குள்ளாகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்க்கோட்டைக்குள் அமைந்திருந்த ஒல்லாந்தரின் தேவாலயம்.
( ஹெய்ட் என்பவரின் வரைபு - *1744* )



ஒல்லாந்தரின் ''யாழ்ப்பாணக் கொமாண்டரி'' க்குரிய சின்னம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணக்கோட்டை நிலவளவீட்டு வரைபு
( வில்சன் என்பவரின் வரைபு - 1984 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி: ஒன்று

# பிலிப் தே ஒலிவேறா

## 1

28 ஒக்டோபர், 1591.

**யா**ழ்ப்பாணக் கடலேரி ஊடாகப் போர்த்துக்கேயப் பறங்கிகளின் போர்க்கலங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரான நல்லூரைக் குறியாகக் கொண்டு பிரவேசித்தன. சோளகக் காற்றின் வேகமான உதைப்பு, தொடர்வரிசையாகப் பிரவேசித்த 43 மரக்கலங்களையும், 250 வள்ளங்களையும் கிழக்குத்திசையில், அலையெறியும் கடல்நீரைக் கீறிக்கிழித்தபடி விரைய வைத்தது. பக்கத்திற்கு ஐந்து பீரங்கிகள் பொருத்தப்பட்ட பெரிய மரக்கலங்களிலிருந்து துவக்குகள் ஏந்திய வீரர்களைக் கொண்ட வள்ளங்கள் வரை அம்மரக்கலத் தொகுதியிலிருந்தன: பாரிய மரக்கலங்கள் பிரதான பெரும் பாயோடு ஐந்து துணைப் பாய்களைக் கொண்டிருந்தன. லிஸ்பன் நகரத்து மரக்கலத் தச்சர்கள் வடிவமைந்த அற்புதமான கலங்கள், ஆழ்சமுத்திரங்களின் அலையெறிதலைத் தாண்டி அமைதியான யாழ்ப்பாணக் கடல் நீரேரியை ஆக்கிரமிக்கும் பேராசையுடன் விரைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இது ஆக்கிரமிப்பன்று; பழிவாங்கல்' என அப்படைக்கல அணிக்குத் தலைமை தாங்கிவரும் போர்த்துக்கேயத் தளபதி அந்திரே பூர்த்தாடு டி மென்டென்சா தன்னைத்தானே சமா தானப்படுத்திக்கொண்டான். யாழ்ப்பாண இராச்சியத்தின்மீது போர்த்துக்கேயர் எடுக்கும் மூன்றாவது படையெடுப்பு இதுவாகும்.

தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்ற போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைத் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரச் சந்தர்ப்பம் பார்த்திருந்தனர். கி. பி. 1542 ஆம் ஆண்டு பிரான் சிஸ் சவேரியார் என்ற பெயர் கொண்ட ஒரு போர்த்துக்கேய மதகுரு மன்னாருக்கு வந்து 600 பேரைக் கிறிஸ்வர்களாக மதமாற்றம் செய்தார். அவ்வேளை யாழ்ப்பாண அரசின் மன்னனாக விளங்கிய சங்கிலி செகராசசேகரன் அதனைக் கேள்வியுற்றுப் படையுடன் மன்னார் சென்று மதம் மாறிய மக்களையும், மதம் மாற்றிய குருவையும் சிரச்சேதம் செய்வித் தான். மன்னாரில் நிகழ்ந்து முடிந்த இத் துயரச் சம்பவத்திற் காகப் பழிவாங்கும் பொருட்டு, கி. பி. 1543 இல் போர்த்துக் கேயரின் முதலாவது படையெடுப்பு, யாழ்ப்பாணத்தின் மீது நிகழ்ந்தது. இப்படைக்கு மாட்டின் அல்போன்சோ தே சௌதா என்பான் படைத் தலைவனாக வந்தான். அவனது மரக்கலங் கள் நெடுந்தீவில் கரையொதுங்கியபோது, சங்கிலி செகராச சேகரனால் வழங்கப்பட்ட திரவியத்தால் திருப்தியடைந்த மாட்டின் அல்போன்சோ தே சௌதா படையுடன் திரும்பிச் சென்றான்.

இரண்டாம் முறை கி. பி. 1560 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந் தீனு தே பிறகன்சா எனும் தளபதியின் தலைமையில் போர்த் துக்கேயப் படை 77 மரக்கலங்களுடன் கரையூரில் இறங்கியது. மன்னாரில் கத்தோலிக்கர்களாக மாறிய அறுநூறு பேரைத் தனது வாளுக்கிரையாக்கிய யாழ்ப்பாண மன்னனை அழித்து, யாழ்ப்பாணப் பட்டினக் கரையில் ஒரு பலமான கோட்டையை அமைத்து, போர்த்துக்கேயக் குடியேற்றமொன்றை நிறுவும் வன்மத்தோடும், விருப்போடும் அலைகடல் தாண்டி ஆவலோடு வந்த பிறகன்சா யாழ்ப்பாணக் கரையில் படைவீரர்களை அணி வகுத்தபோது ஒரு கணம் திகைத்துவிட நேர்ந்தது. 4000 வீரர் கள் அவனது படையணியிலிருப்பதாகப் பதிவேடுகள் கூறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், 1200 வீரர்களே தரையில் அணிவகுத்து நின்றால் திகைப்பு ஏற்படாது என்ன செய்யும்? கப்பித்தான்களும் (Kapitein), பிரதான மாலுமிகளான ஒப்பேஸ்ருமன்களும் (Opperstuurmen) சேர்ந்து தத்தமது அடிமைகளினதும் உறவினர்களினதும் பெயர்களைப் படைவீரர் பதிவேட்டில் பதிந்து சம்பளம் எடுத்து ஏமாற்றி வந்திருப்பது புலனாகியது.

யாழ்ப்பாணக் கரையில் படையை இறக்கியாகிவிட்டது. இனிச்சிந்தித்துப் பயனில்லை. நல்லூரை நோக்கி முன்னேறுமாறு பிறகன்சா கட்டளையிட்டான். பீரங்கிகள் குண்டுகளைத் தள்ளி வெடித்தன; துப்பாக்கிகள் சன்னங்களைப் பொழிந்தன. தமிழர் படை எவ்வளவு எதிர்த்ததும், போர்த்துக்கேயப் படை நல்லூரை நோக்கி முன்னேறுவதைத் தடுக்க முடியவில்லை. சங்கிலி செகராசசேகரன் ஈற்றில் கோப்பாய்க்குப் பின்வாங்கினான். தலைநகருட் பிரவேசித்த பறங்கிப் படை நகரைச் சூறையாடியது. பின்னர் சங்கிலி செகராசசேகரனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, ஏராளமான திரவியங்களுடன் கொன்ஸ்தாந்தீனு தே பிறகன்சா திரும்பிச் சென்றான். ஒப்பந்தப்படி மன்னாரில் போர்த்துக்கேயர் ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டனர்.

சங்கிலி செகராசசேகரனுக்குப் பின் புவிராசபண்டாரம் காசிநயினார் அல்லது குஞ்சுநயினார் (1565), பெரியபிள்ளை செகராசசேகரன் (1570), புவிராசபண்டாரம் (பரராசசேகரன்) (1582), எதிர்மன்னசிங்ககுமாரன் (1591) ஆகிய மன்னர்கள் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளர்களாக விளங்கினர். யாழ்ப்பாண இராச்சியத்தில் நிகழ்ந்த உண்ணாட்டுக் குழப்பத்தினாலும் போர்த்துக்கேயரின் அரசியற்றலையீட்டினாலும் இந்த மன்னர்கள் நிலையாகத் தொடர்ந்து ஆளமுடியாது போனது. புவிராசபண்டாரம் இரு தடவைகள் மன்னாரைத் தாக்கிப் போர்த்துக்கேயரைத் துரத்த முயன்றும் இயலாது போயிற்று.

இன்று, 1591, போர்த்துக்கேயரின் மூன்றாவது யாழ்ப்பாணப் படையெடுப்பு நிகழ்கிறது. போர்த்துக்கேயப் படைத் தளபதி அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சா 43 மரக்கலங்களுடனும் 250 வள்ளங்களுடனும் ஊர்காவற்றுறையூடாக யாழ்ப்பாணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனீரேரியுட் பிரவேசித்துள்ளான். அவனது படையில் 1400 பறங்கிகளும், 3000 லாஸ்கொறின் எனப்படும் சிங்களச் சுதேசிகளும் யுத்தத்திற்குத் தயாராகவுள்ளனர்.

பண்ணை நெருங்கியபோது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்கரையோரம் தெளிவாகத் தெரிந்தது. தென்கரையோரம் முழுவதும் ஒரே கட்டைக்காட்டு மரங்களினாலும், கண்ணா மரங்கள் நிறைந்த சதுப்பு நிலத் தாவரங்களினாலும் மூடப்பட்டிருந்தது. வானளாவி உயர்ந்து நின்றிருந்த பனைமரங்கள் காட்டின் வட விளிம்புகளில், சோளகக் காற்றுக்கு ஈடுகொடுத்து அசைந்தாடின: 'எதிரியே வராதே, இது எங்கள் சுதந்திர பூமி'

அக்காட்டுப் பரப்பிற்கு அப்பால் நாகரிகமான நல்லூர் நகரம் இருப்பதனை அவர்கள் அறிவார்கள். அக்காட்டு மரங்களுக்கிடையில் பண்ணைக் கரையில் முருகைக் கற்களாலும் களிமண்ணாலும் கட்டப்பட்டு பீலி ஓடுகளால் வேயப்பட்ட இரு சிறு கட்டிடங்கள் இருப்பதை மொன்டொன்சா கண்டான்.

அவை முஸ்லீம் வர்த்தகர்களின் வர்த்தகசாலைகள்.

ஆம், யாழ்ப்பாணக் கோட்டை கம்பீரமாக எழுந்து நின்ற இடத்தில் முதலில் முஸ்லீம் வர்த்தகர்களின் இரு வர்த்தக சாலைகள் இருந்தன. நாவாந்துறையிலிருந்து அரியாலை வரையிலான கடற்கரையோரமும், உள்வாங்கி நாவலர் வீதி வரையிலான பரப்பும் அக்காலகட்டத்தில் காட்டு மரங்கள் நிறைந்த பிரதேசமாக விளங்கின.

மனித சஞ்சாரமற்ற இப்பரப்பில் சிறு காட்டு விலங்குகள் சுதந்திரமாகச் சஞ்சரித்தன. மான்கள், முயல்கள், நரிகள் வெகு இயல்பாக அலைந்து திரிந்தன, பலவிதமான கடற் பறவைகள் சுதந்திரக் காற்றில் மிதந்து, கண்ணா மரங்களில் தங்கி இனம்பெருக்கின. எனினும் கொழும்புத்துறை, அலுப்பாந்திப் பகுதிகள் போக்குவரத்துக்குரிய துறைகளாக விளங்கியதால் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தன. அவற்றைவிட பண்ணையில், காட்டுப் பரப்பில், கரையோரமாக முஸ்லீம் வர்த்தகர்களின் இருசிறு பண்டசாலைகள் அமைந்திருந்தன. அவற்றை அமைக்க யாழ்ப்பாண மன்னன் அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தான். 'பகலில் நகரத்தில் வியாபாரம் செய்துவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு வேளைகளில் கரையோரப் பண்டகசாலைகளுக்குத் திரும்பி விடவேண்டும்' என்ற மன்னனின் கட்டளையை அராபிய முஸ்லிம்கள் ஒழுங்காகப் பேணினர். இத்தகைய முஸ்லிம் வர்த்தகசாலைகள் யாழ்ப்பாணப் பண்ணையில் மாத்திரமன்றி நீர்கொழும்பு, கொழும்பு, காலி முதலான கரையோரப்பகுதிகளிலும் காணப்பட்டன.

போர்த்துக்கேயப்படை கரையிறங்கியது: யாழ்ப்பாண மன்னன் புவிராசபண்டாரம் பரராசசேகரன் தனது வீரர்களுடன் போர்த்துக்கேய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்தான். பெரும் யுத்தம் மூண்டது சுதந்திரத்தைப் பேண, ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து அணிதிரண்ட தமிழர் படை களப்பலியாகியது. யாழ்ப்பாண அரசனைக் கைப்பற்றிய போர்த்துக்கேயத் தளபதி பூர்த்தாடு அவனது சிரசைக் கொய்து, ஈட்டியிற் குத்தி நிறுத்தி வைத்ததன் மூலம் தனது ஆதிக்கவெறியைத் தீர்த்துக்கொண்டான். கைப்பற்றிய பூமியைத் தொடர்ந்து போர்த்துக்கேயரின் கீழ் வைத்திருப்பதிலுள்ள இடர்ப்பாட்டைப் பூர்த்தாடு நன்குணர்ந்தான். அதனால் ஊர்ப் பிரமுகர்களைக் கூட்டி, எதிர்மன்னசிங்ககுமாரன் என்ற அரசகுலத்தானை யாழ்ப்பாணத்தில் மன்னனாக நியமித்து, போர்த்துக்கேயரின் மேலாதிக்கத்தை ஏற்று அரசாளும்படி பணித்துப்பெரும் திரவியத் திறைகளுடன் மரக்கலமேறினான். அவ்வாறு திரும்பும்போது தமக்கு எதிராகச் செயற்படுவார்களெனக் கருதிய எண்ணூறு வடக்கரையும், சில சோனகரையும் சிரச்சேதம் செய்துள்ளான். அத்துடன் பண்ணைக் கரையில் இருந்த முஸ்லீம்களின் வர்த்தக சாலைகளை அழித்து, அவற்றிலிருந்த 10 ஆயிரம் கண்டி நெல்லையும், 400 கண்டி அரிசியையும் கொள்ளையடித்துச் சென்றான். (கண்டி என்பது ஓர் அளவு – 500 இறாத்தல்களைக் கொண்டது.)

# 2

*1621, பெப்ரவரி மாதம், 2 ஆம் திகதி.*

யாழ்ப்பாண மன்னனுடன் ஏற்பட்ட மனக்கசப்பால், போர்த்துக்கேயர் மீண்டும் 1620 ஆம் ஆண்டு படையெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணவரசைக் கைப்பற்றிக்கொண்டனர். யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசிச் சுதந்திர மன்னன் சங்கிலி (குமாரன்) செகராசசேகரன், யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை இழந்த இறுதிப் போரில் சிறைப்பட்டு, மரணமடைய நேரிட்டது. போர்த்துக்கேயரின் இப்படையெடுப்பிற்குக் 'கப்பித்தான்மேஜர்' பிலிப் தே ஒலிவேறா (Phillip de Oliveira) என்பான் தலைமை வகித்தான் 1621 ஆம் ஆண்டு பிலிப் தே ஒலிவேறா நல்லூரைத் தன் னுறைவிடமாக்கிக்கொண்டான்.

நல்லூரில் பெரிய கோயிலாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விளங்கியது. இன்று முத்திரைச்சந்தியில் கிறிஸ்தவ தேவாலயம் இருக்குமிடத்தில் இக்கோவில் வானளாவிய ராஜ கோபுரங்களுடனும், கோட்டை போன்ற மதிற் சுவர்களுடனும், தென்னிந்தியக் கோயில்களின் பாரிய வடிவில் அமைந்திருந்தது. பிலிப் தே ஒலிவேறா அப்பெரிய கோயிலை இடித்துத் தரைமட்டமாக்குமாறு கட்டளையிட்டான் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலை அடி அத்திவாரத்தோடு கிளறிக் குவிக்குமாறு கட்டளையிட்டான். முருகைக் கற்களினாலும், சுண்ணாம்புக் கற்களினாலும் சுதை கொண்டு கட்டப்பட்டிருந்த அக்கோயிலின் கற்கள் மலைபோலக் குவிந்தன.

'இப்பெரிய கோயிலில் கிறிஸ்தவரல்லாதவர்கள் மிக்க ஈடு பாடுடையவர்களாக இருந்தனர். அவன் அதனை அழிக்காது விட்டால், அவன் விரும்பிய எல்லாவற்றையும் வழங்குவதாக யாழ்ப்பாணப் பிரமுகர்கள் அவனுக்கு வாக்குறுதி அளித்தனர். ஆனால், அவன் ஒரு மதப்பற்று மிக்க கத்தோலிக்கனாதலால், அவர்களின் நடவடிக்கை அக்கோயிலை அழிப்பதற்குக் கொண் டிருந்த விருப்பத்தினை மேலும் அதிகரிக்க வைத்தது. எனவே அதனை அத்திவாரமில்லாது அழிக்குமாறு கட்டளையிட்டான்' என குவேறோஸ் பாதிரியார் தனது நூலில் கூறுகிறார். ஒலிவேறா, யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலிருந்த சைவாலயங்கள், வைணவ ஆலயங்கள் அனைத்தையும் உடைத்துத் தள்ளுமாறு பணித்தான். கீரிமலைத் திருத்தம்பலேஸ்வரன் கோயில், பொன் னாலை வரதராசப்பெருமாள் கோயில் போன்ற பெரிய ஆலயங் களும் தரைமட்டமாக்கப்பட்டன. போர்த்துக்கேயப் பறங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கண்களிற் பட்ட சைவக் கோயில்கள் அனைத்தும் கற் குவியல்களாக்கப்பட்டன.

நல்லூரிலிருந்து போர்த்துக்கேய ஆட்சியை பிலிப் தே ஒலிவேறா நடாத்தியபோதிலும், தமிழர்களுடன் நடந்த போர் முடியவில்லை. சுதந்திர வேட்கை கொண்டு கிளர்ந்தெழுந்த தமிழ் வீரர்கள், தங்களது தாயக மண்ணிலிருந்து அந்நியரைத் துரத்திவிடும் எண்ணம் கொண்டவர்களாக இடைக்கிடையே படைதிரட்டிப் பறங்கிகளைத் தாக்கி வந்தனர். வருணகுலத் தான் என்பான் தஞ்சாவூர்ப்படையொன்றுடன் ஒலிவேறாவை எதிர்த்துத் தோல்வி கண்டான். பின்னர் சின்ன மீகாப்பிள்ளை என்பான், தமிழ்ப்படையொன்றுடன் தொண்டைமானாற்றில் இறங்கி நல்லூரை முற்றிகையிட்டு தோல்வி காண நேர்ந்தது. தஞ்சாவூர் நாயக்கன் அனுப்பிய மற்றொரு படையும் தோல்வி யுற்றுத் திரும்ப நேர்ந்தது.

நல்லூரில், சமதரையில், கிளர்ந்தெழும் தமிழர்களுக்கு மத்தியில், தங்கியிருப்பதிலுள்ள பாதுகாப்பின்மையைப் போர்த் துக்கேயத் தளபதி புரிந்துகொண்டான். தானும், தனது படை வீரர்களும், பறங்கிகளும் தங்கியிருப்பதற்குப் பாதுகாப்பான ஒரு கோட்டை இருக்கவேண்டியதன் அவசியத்தை ஒலிவேறா வுக்குத் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதல்கள் உணர்த்தின. அத னால், நல்லூரில் இடித்துக் குவிக்கப்பட்ட கற்களைப் பயன் படுத்தி, பண்ணையில் ஒரு கோட்டையைக் கட்டி முடிக்கப் பிலிப் தே ஒலிவேறா விரும்பினான்.

முஸ்லீம் வர்த்தகசாலைகள் அமைந்திருந்த இடம், கோட்டை அமைப்பதற்கான மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சாவினால் இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்ட முஸ்லீம் பண்டகசாலைகள் இருந்த இடத்தில் யாழ்ப்பாணத்தின் கோட்டையைக் கட்டத் திட்டமிடப்பட்டது. அவ்விடத்தின் அமைவிடம் பலமான கோட்டையொன்றினை அமைப்பதற்கு மிக வாய்ப்பானதாக விருந்தது.

போக்குவரத்துக்கு வாய்ப்பான கடனீரேரி, அருகிலிருந்த கொழும்புத்துறை, அலுப்பாந்தித்துறை, அகழிகளுக்கு நீர் தரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய கடல், பகைவர்களின் தாக்குல்களிலிருந்து பாதுகாப்பு வழங்கக்கூடிய இடவமைப்பு என்பன ஒலிவேறாவுக்குத் திருப்தியைத் தந்தன. தமிழ்ச் சைவர்கள் வாழும் நல்லூர் நகரிலிருந்து விலகிப் பாதுகாப்பான அரண் ஒன்றினை அமைத்துக் கொள்வதுடன், கத்தோலிக்கர்கள் மட்டும் வாழ்கின்ற 'பறங்கித் தெரு' (சீதாரி) என்ற புதியதொரு நகரினையும் உருவாக்க அவன் எண்ணம் கொண்டான்.

கோட்டை கட்டுவதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அதனைக் கட்டுவதற்கான கற்கள் அவ்விடத்தில் சேகரிக்கப்பட்டன. முதற் கட்டமாக நல்லூர் பெரிய கோயிலை இடித்ததால் குவிந்து கிடக்கும் கற்குவைகள் அவ்விடத்திற்குக் கொண்டுவரப்பட்டன. முருகைக் கற்கள், சுண்ணாம்புக் கற்கள், செங்கட்டிகள் என்பன பாரிய கூடார வண்டிகளில் முதலில் ஏற்றப்பட்டுப் பண்ணைக் கரையில் சேர்க்கப்பட்டன.

அவை காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது என்பதையுணர்ந்த ஒலிவேறா, யாழ்ப்பாண மக்களையும் தனது படைவீரர்களையும் நல்லூரிலிருந்து பண்ணை வரை மனிதச் சங்கிலியாக வரிசையாக நிற்கவைத்துக் கற்களை வேகமாகக் கரம் மாற்றி அனுப்பிப் பண்ணைக் கரையில் குவிப்பித்தான். அதே முறையில் யாழ்ப்பாணத்தில் இடித்துத் தள்ளப்பட்ட சைவ ஆலயங்களின் கற்களையும் பண்ணைக் கரையில் சேர்ப்பித்தான். குவிக்கப்பட்ட கற்கள் கோட்டை கட்டுவதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை. எனவே, எஞ்சிய கோயில்களையும் அவசியமாயின் சைவரின் பெரும் வீடுகளையும் அவன் இடித்துத் தள்ளிவிடுவான், என்ற பயத்தில் கோட்டை கட்டுவதற்குத் தேவையான முருகைக் கற்களை யாழ்ப்பாணத்திற்கு அருகில் இருக்கும் தீவுகளிலிருந்து தோணிகள் மூலம் சேகரித்துத் தருவதாக யாழ்ப்பாணத்து முதலிமார்களும், வன்னிமைகளும் வலிந்து ஒத்துக்கொண்டனர்.

அதற்குரிய செலவினைத் தருவதாக ஒலிவேறா ஒப்புக்கொண்டான். அயற் தீவுகளிருந்து முருகைக் கற்கள் தோணிகள் மூலம் கொண்டுவரப்பட்டன, ஒவ்வொரு தோணி முருகைக் கற்களுக்கும் 3 பணம் வழங்கப்பட்டது. அதனால் தோணிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடைய பலரும் இதில் ஈடுபட்டனர். வேலணை (தண்ணீர்த்தீவு), புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு முதலான தீவுகளைச் சேர்ந்தவர்கள் முருகைக் கற்களைச் சேகரித்துக் குவித்துத் தோணிகளுக்கு வழங்கினர். அதற்கு அரைப்பணம் பெற்றுக்கொண்டனர். அக்கற்களை ஏற்றிச் செல்லும் தோணி களுடன் காவலாகப் போகும் அதிகாரத்துக்கு மாதம் ஒன்றுக் குப் பதின்மூன்று பணம் சம்பளமாக வழங்கப்பட்டது.

கோட்டை கட்டுவதற்குரிய சுதை தயாரிப்பதற்கான. சுண்ணாம்புக் காளவாய்கள் யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளில் அமைக்கப்பட்டன. அவை சுண்ணாம்புக் கற்களைச் சுட்டுப் பதமாக்கிப் பண்ணைக் கரையில் சேர்த்தன அவற்றோடு கலப் பதற்காகக் கோவாவிலிருந்து சர்க்கரை மூடைகள் பெருமள விலும் எடுத்துவரப்பட்டன; களிமண்ணும் அவற்றோடு சேர்ப் பதற்காகக் குளங்களிலிருந்து அகழ்ந்தெடுத்துக் குவிக்கப்பட்டது. சுட்ட சுண்ணாம்பும், சர்க்கரையும், களிமண்ணும் சேரும்போது, முருகைக் கற்களைப் பலமாகப் பற்றும் சுதை உண்டாகிறது. இப்போது அனைத்தும் தயார்.

யாழ்ப்பாணத்திலிருந்த சைவாலயங்கள் கட்டுவதற்குப் பயன் படுத்தப்பட்ட முருகைக்கற்களும், சுண்ணாம்புக் கற்களும் நீள் சதுரக் கனங்களாகக் கல் தச்சர்களினால் பொழியப்பட்டிருந்தன. அவ்வாறு பொழியப்பட்ட கற்கள், கோட்டையை இலகுவாக அமைப்பதற்குப் போர்த்துக்கேயருக்குதவின.

கோட்டை கட்டுவதில் போர்த்துக்கேய மேசன்மாருடன் உள் ளூர் மேசன்மார்களும் பங்குகொண்டனர். தலைமை மேசன் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 1 பணமும், அவனுக்குக் கீழ் வேலைசெய்யும் மேசன்மார்களுக்கு நாளொன்றிற்கு அரைப் பணமும் கூலியாக வழங்கப்பட்டது. ஒரு தலைமை மேசனின் கீழ் நான்கு துணை மேசன்மார் வேலை பார்த்தனர். கோட்டை கட்டுவதில் சிற்றாள்களாக வேலை பார்த்த ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டிற்கு வருடம் ஒன்றுக்கு 70 கண்டி சாமி அரிசி வழங்கப்பட்டது கோட்டை கட்டும் வேலையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் மேற்பார்வை செய்தனர். அவர்களைப் பண்டாரப்பிள்ளைகள் என்றனர். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 8 பணம் சம்பளமாக வழங்கப்பட்டன.

# 3

*1622 ஆம் ஆண்டு கோடைகால இறுதி.*

போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை இன்று அழிந்துள்ள கோட்டை போன்று, நட்சத்திர வடிவத்தினை/ஐங்கோண வடிவத்தினையுடையதன்று அது ஒரு சதுர வடிவக் கோட்டையாகும். சட்டப்படவிருக்கும் கோட்டையின் மாதிரி வடிவம், பிலிப் தே ஒலிவேறாவின் முன் வைக்கப்பட்டிருந்தது. அவன் அதனை அடங்க ஆவலோடு நோக்கினான்.

சதுர வடிவமான கோட்டை உயர்ந்த அரண் சுவர்களைக் கொண்டிருந்தது. நான்கு மூலைச் சுவர்களிலும் பலமான கொத்தளங்கள் அமைந்திருந்தன. அவற்றில் வடகிழக்குக் கொத்தளமும், தென்மேற்குக் கொத்தளமும் வேலின் முனைப்பு வடிவிலும், தென்கிழக்குக் கொத்தளமும், வடமேற்குக் கொத்தளமும் முக்கால் வட்டவடிவிலும் அமைந்திருந்தன. இக்கொத்தளங்களை இணைக்கும் அரண்சுவர்கள் (RAMPART) அடித்தளத்தில் 40 அடிகள் அகலமானதாயும், மேற்புறத்தில் 20 அடிகளாக ஒடுங்கி 30 அடிகள் வரை அகழி மட்டத்திலிருந்து உயர்ந்து நின்றன. இந்த அரண்சுவர்களின் மையப்பகுதிகள் நான்கிலும் 20 அடிகள் அகலமான பகுதி வெளிப்புறமாகப் புடைத்து, மேலதிக சிறிய கொத்தளங்களாகக் காட்சி தந்தன. அவற்றில் மூன்று அரைவட்டவடிவிலும், ஒன்று 'ப' வடிவிலும் புடைத்து நின்றிருந்தன. 'ப' வடிவப் புடைப்பை, கோட்டையின் தென் அரண்சுவர் கொண்டிருந்தது. தென் அரண்சுவரின் அடி வாரத்தில், யாழ்ப்பாணக் கடலின் அலைகள் மெதுவாகத் தழுவி அலையெறிந்தன கடனீரேரி ஊடாக வரும் மரக்கலங்கள் தூரத்தில் நங்கூரமிட்டு நிற்க, சிறிய வள்ளங்கள் மூலம் கோட்டையின் தென் அரண்சுவரையடுத்துள்ள இறங்கு துறையை அடையக்கூடிய கட்டமைப்புகள் இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தளங்களும் அரண்சுவர்களும், போர்வீரர்களும் யுத்த தளபாடங்களும் இடமின்றி நகரக்கூடிய இடவசதியைக் கொண்டிருந்தன. கொத்தளங்களில் பீரங்கி வெளிகள் அமைந்திருந்தன. கடலை நோக்கிய அரண்சுவரின் இரண்டு பெரிய கொத்தளங்களில் மும்மூன்று பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. 'ப' வடிவச் சிறு புடைப்புக் கொத்தளத்தில் மூன்று பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தன. இந்தத் தென்னரண்சுவரின் ஒன்பது பீரங்கிகளின் தாக்குதல்களுக்குத் தப்பி, எந்த எதிரிக் கலமும் கோட்டையை அணுகிவிடமுடியாது என ஒலிவேறா நம்பி இறுமாந்தான். மேற்குப்புற அரண்சுவரில் ஐந்து பீரங்கிகள் பொருத்துவதற்கான வெளிகளும், வடபுற அரண்சுவரில் நான்கு பீரங்கிகள் பொருத்தக்கூடிய வெளிகளும் காணப்பட்டன. கிழக்குப்புற அரண்சுவர் 10 பீரங்கிகளைக் கொண்டிருந்தது. இக்கிழக்குப் புறமே தரைப்புறமான கோட்டை வாயிலைக் கொண்டிருந்தது. கோட்டையைச் சுற்றி ஒருபுறம் கடலும், ஏனைய மூன்று பக்கங்களும் 20 அடி அகலமான அகழியைக் கொண்டிருந்தன. ஓர் இணைப்புப் பாலம் தேவைக்கேற்ப இறக்கி, தூக்கக்கூடிய விதமாகக் கிழக்கு அகழிக்கும் கோட்டை வாயிலிருக்கும் இடையிலிருந்தது.

கிழக்கு அரண்சுவரில் காவல்கோபுரங்கள் ஆறு அமைக்கப் பட்டிருந்தன. துப்பாக்கி ஏந்திய வீரர்கள் தரைப்புறமான கோட்டை வாயிலை எதிரிகளணுகாது காக்க இவை உதவின. கோட்டையினுள் காமாந்தோர், கப்பித்தான், வேன்ட்றிக்ஸ், கூப்மன்ஸ், ஒண்ட கூப்மன்ஸ், பிரிடிக்கன்ஸ் முதலான போர்த்துக்கேய அதிகாரிகளின் மாளிகைகள் அமைந்திருந்தன. கத்தோலிக்க தேவாலயம், படைவீரர் பாசறைகள் என்பனவும் அமைந்திருந்தன. கடல் நீரை அகழிக்குள் வெகு பக்குவமாக விட்டிருந்தார்கள். கடலிலிருந்து அகழிக்குள் எவரும் நுழைந்துவிடாதிருக்கப் பலமான கம்பிக் கிறாதிகளைத் தடுப்பிட்டிருந்தார்கள்.

மொத்தத்தில் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை பலமும் கம்பீரமும் கொண்ட அதியற்புதமான கட்டமைப்பைக் கொண்டிருந்தது பிலிப் தே ஒலிவேறா திருப்தியுடன் புன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தான். மாதிரி வடிவத்தின்படி கட்டிமுடிக்குமாறு கட்டளை பிறப்பித்தான். 'இது பத்தேவியாவிலுள்ள எல்லாந்தக் கோட்டையிலும் பார்க்கப் பெரியது' எனப் பின்னர் பால்தேயஸ் சுவாமிகள் வியக்கப்போகிறார்.

கோட்டை கட்டும் செயற்பாடு ஆரம்பமானது. வருடத்தில் ஒன்பது மாதங்களுக்குக் கோட்டை கட்டும் பணி நடந்தது. அகழியில் வெட்டிய மண்ணை அரண்சுவர்களுள் நிரப்பினர். மழை பெய்யத் தொடங்கியதும் கோட்டை கட்டுகின்ற பணி நிறுத்தப்படும். கோடை காலத்திலே ஏற்பட்ட வைசூரியும், மாரிகாலத்திலேற்பட்ட பேதி நோயும் சிலவேளைகளில் கோட்டை கட்டுவதைத் தடை செய்தன. எனினும், போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை 1625 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப் பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் 150 பறங்கி வீரர்களைக் கொண்ட மூன்று பட்டாளங்கள் இருந்தன. ஒவ்வொரு வீரனுக்கும் அவன் கலியாணமாகாதவனாயிருந்தால் மாதம் ஒன்றுக்கு பன்னிரண்டு பணமும், கலியாணமானவனாயிருந்தால் மாதமொன்றுக்கு 24 பணமும் வழங்கப்பட்டன. அவசியமான காலங்களில் தேவைப்படும் உணவுப்பொருட்கள் கோட்டைக்குள் வேண்டிய மட்டும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டன. கோட்டைக்குள் எப்போதும் 300 கண்டி நெல்லும் அரிசியும் சேமித்து வைக்கபபட்டிருந்தன. அறுவடைக்காலங்களில் சேமிக்கப்பட்டு, வருட முடிவில் விற்கப்பட்டு, பின் புது நெல்லும் அரிசியும் வாங்கி வைக்கப்பட்டன. அவ்வாறு சேமித்து வைப்பதற்குப் பந்தாயம் எனப்படும் நெற்கூடைகளைப் பயன்படுத்தினர்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டை போன்று வேறு பகுதிகளிலும் கோட்டைகளைக் கட்டியுள்ளனர். ஊர்காவற்றுறை (ஹெமன் ஹீல்), காங்கேசன்துறை, பருத்தித்துறை, வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, ஆனையிறவு முதலான பகுதிகளிலும் இவர்கள் கோட்டைகளை அமைத்தனர். ஆனால் இவை யாழ்ப்பாணக் கோட்டை போன்று பெரியனவல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலித் தே ஒலிவேறா, நல்லூரரை விட்டகன்று கோட்டை மாளிகைக்குள் தனது படையினரோடும், பரிவாரத்தோடும் குடியமர்ந்தான். கோட்டைக்குக் கிழக்கே பரந்து கிடந்த நிலத்தைத் தமிழ்க் கத்தோலிக்கர்களுக்கும், பறங்கியருக்கும் பகிர்ந்து கொடுத்தான். கோட்டை கட்டி எஞ்சிய கற்களைப் பயன்படுத்திப் புதியதொரு நகரம் அங்குருவானது. 'சீதாரி' என அந்நகரத்தைப் போர்த்துக்கேயர் அழைத்தனர். நல்லூரர் மக்கள் அதனைப் 'பறங்கித்தெரு' என்றழைத்தனர். அச்சீதாரியில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த கண்ணாடிப் பாதிரியார் என்றழைக்கப்பட்ட பேதுரு தே பெற்றன்சோ என்பவர் வெற்றி மாதா கோயிலை (அற்புத மாதா கோயிலை)க் கட்டிமுடித்தார். அவ்விடத்திலிருந்த முஸ்லிம் பள்ளிவாசலைத் தீக்கிரையாக்கி விட்டு, இத்தேவாலயத்தைக் கண்ணாடிப் பாதிரியார் கட்டியமைத்தார்.

யாழ்ப்பாணப் பட்டினத்தின் தேசாதிபதி கப்பித்தான் மேஜர் சில வேளைகளில் கோட்டைக்குள்ளிருந்து பரிவாரங்களுடன் சீதாரிக்கு வருவான். 80 லாஸ்கரின் வீரர்கள் அணிவகுத்து முன்னும் பின்னும் நடந்துவர, 4 ஆராய்ச்சிமார் மெய்க்காப்பாளராக இருபுறமும் வர, ஒலிவேறா குதிரையிற் பவனி வருவான். இவர்களைவிட 5 அடிமைச் சேவகர்கள் பணிவாக வர, 2 கேடயச்காரர் ஒருவர் மாறி ஒருவர் ஒலிவேறாவுக்குக் குடை பிடித்து வருவர். அவனது பவனியை முன்கூட்டியே அறிவிப்பன போன்று மூன்று தவிலடிப்போர் தமது மேளங்களைத் தட்டியவாறு நடப்பர்.

1627, மார்ச், 22ம் திகதி பிலிப் தே ஒலிவேறா தனது 53 ஆம் வயதில் மரணமடைந்தான். அவன் சடலம் அற்புதமாதா கோயிற் படிகளுக்கருகில் அடக்கம் செய்யப்பட்டது. அவனுக்குப் பின் யாழ்ப்பாணத்தின் கப்பித்தான் மேஜராக லாங்றோட் தே செயிக்ஸாஸ் காபிறேரா என்பவன் பதவியேற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

*1629 ஆம் ஆண்டு நடுக்கூறு.*

கண்டி இராச்சியத்தின் மன்னனாக விளங்கிய செனறத் என்பவன், போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்திலிருந்து துரத்தி விட்டு, யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றும் நோக்குடன் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிடுமாறு படையொன் றினை அனுப்பிவைத்தான். கண்டி அத்தப்பத்துமுதலியாரின் தலைமையில் 10 ஆயிரம் வீரரைக் கொண்ட படையணி யாழ்ப் பாணம் நோக்கி வந்தது. அதற்குதவியாகத் தஞ்சாவூர் அரச னின் வடக்கர் படையொன்றும் யாழ்ப்பாணம் நோக்கி வந்தது.

மணவினைத் தொடர்பால், யாழ்ப்பாணத்தின் ஆட்சியுரிமை தனக்குரியதெனக் கண்டி மன்னன் செனரத் நம்பினான். பிலிப் தே ஒலிவேறா யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, கடைசி மன்னன் சங்கிலியனைச் சிறைப்பிடித்துக் கோவாவுக்கு அனுப்பிவைத் தான். அரச குடும்பத்தைச் சேர்ந்த பலரைக் கத்தோலிக்கராக் கினான். மூன்று அரசகுமாரத்திகளில் ஒருத்தி, டொனா கதறினா என்ற ஞானஸ்நானப் பெயருடன் கத்தோலிக்க மதத் திற்கு மாற்றப்பட்டாள். வேறிரு அரசகுமாரிகளை சின்னமிகாப் பிள்ளை என்பான் தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்று அங்கு அடைக்கலம் பெற்றுக்கொடுத்தான்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரின் பொறுப்பிலிருந்த கதறீனா இளவரசியைத் தனது மகனுக்கு மணம் முடித்து வைக்குமாறு செனரத் மன்னன் தூதனுப்பி வைத்தான். பிலிப் தே ஒலிவேறா அவனது கோரிக்கையை மறுத்துவிட்டான். ஆனால் சென்ரத், தஞ்சாவூர் மன்னரிடம் அடைக்கலம் புகுந் திருந்த யாழ்ப்பாணத்து இளவரசிகள் இருவரையும் வரவழைத் துத் தன்னிரு மக்களுக்கும் மணம் முடித்துவைத்தான்.

எனவே, யாழ்ப்பாண அரசாட்சியுரிமை தனக்குரியதெனக் கண்டி மன்னன் அறைகூவிப் படையனுப்பி வைத்தான். அவ் வாறு வந்த படை புச்சிலைப்பள்ளியில் கத்தோலிக்க தேவால யம் ஒன்றினைத் தரைமட்டமாக்கியதோடு, அங்கிருந்த இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமாரையும் கொலை செய்தது யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்றவழியிலுள்ள சில கிறிஸ்தவ தேவாலயங்களை எரியூட்டி யழித்ததோடு, யாழ்ப்பாணக் கோட்டையையும் முற்றுகையிட்டது. கப்பித்தான் மேஜர் லாங்றொட் தே செயிக்லாஸ் காபிறேரா, கோட்டைக்குள்ளிருந்த பண்ட வலிமை காணா தெனக் கண்டு எதிர்த்துத் தாக்காது இருந்தான்

கண்டியரசனின் படை யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட செய்தியை அறிந்துகொண்ட போர்த்துக்கேயத் தேசாதிபதி கொன்ஸ்தாந்தினோ தே சா உடனடியாக லாஸ்கொறின்ஸ்க ளும், பறங்கிகளும் கொண்ட படையொன்றினைக் கடல் வழி யாக தொமிங்கோ கர்வல்லோ சாவ் என்பவனின் தலைமையில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தான்.

கண்டி மன்னனின் படை யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டிருந்தது. அவர்களால் கோட்டையை நெருங்க முடியவில்லை பீரங்கிக் குண்டுகளும், துவக்குச் சன்னங்களும் எட்டாத தூரத்தில் முற்றுகைப் படை முகாமிட்டிருந்தது. போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டையின் பலத்தையும், பாதுகாப்பையும், அந்தத் தொடர்ந்த முற்றுகை நிரூபித்தது. முற்றுகையின் பதின்மூன்றாம் நாள், கோட்டையின் தென்பக கத்தில் கொழும்பிலிருந்து வந்த போர்த்துக்கேயப் படையணி இறங்கியது.

எதிர்பாராத படையிறக்கம். இவ்வளவு விரைவில் தே சா வின் படை பாதுகாப்புக் கொடுக்க வரமுடியுமா? வந்திருந்தன.

கண்டி மன்னனின் சிங்களப் படை, தொமிங்கோ கர்வல்லோ சாவின் படையினால் நிர்மூலமாக்கப்பட்டன. அத்தபத்து முதலி யார் பயங்கரமாகக் கொல்லப்பட்டார். சிறைப்பட்டோர் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். பலர் அடிமைகளாக விற்கப் பட்டனர்.

போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை, எதுவுமே நுழையாததுபோல நிமிர்ந்து நின்றது. கடல் அலைகள் அதன் தென் அரண்சுவரின் கலத்துறையின் அடியை வருடின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

1657 ஆம் ஆண்டு மார்கழி, 17.

யாழ்ப்பாணக் கோட்டைக்கு முப்பத்திரண்டு வயதாகின்றது. அதனை யாழ்ப்பாண மக்கள் 'இராசவாசல்' என்று அழைத்தனர். ஏனெனில், சகல நிர்வாக நடவடிக்கைகளும் அந்தக் கோட்டையிலிருந்தே பிறந்தன இப்போது கோட்டையின் கொத்தளங்களில் திரித் துப்பாக்கி (மார்ச் லொக்) ஏந்திய மலபார் வீரர்கள் காவல் புரிந்தனர். கோட்டை அரண்சுவர்களில் பறங்கி வீரர்களுடன் காப்பிலி அடிமைகளும் காவலில் ஈடுபட்டிருந்தனர்.

கோட்டையின் கமாண்டராக லீடோர் தே பசெண்டாவும், வைஸ் கமாண்டராக கஸ்பார் பிகாறோவும் விளங்கினர். இராசவாசல் முதலியாராக நல்லூர் புவிநாயகமுதலியார் இருந்தார். அவரோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த முதலியார்களும், கச்சாய் வன்னிமையும் ஒருநாள் கோட்டைக் கமாண்டர் வழங்கிய விருந்தொன்றில் கலந்துகொண்டனர்.

டச்சுக்காரர்/ஒல்லாந்தர் இலங்கையில் ஆதிக்கம் பெற முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்ற சங்கதிகளைக் கமாண்டர் அனைவருக்கும் எடுத்து விபரித்தான். அவர்களை இந்த மண்ணில் காலூன்ற விடக்கூடாது; அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை அவன் கோரினான். 'அதற்குப் பிரதி உபகாரமாக எதையும் தருவேன்' என்றான். அந்த விருந்தில்தான் கச்சாய் வன்னிமை, தனக்கு மனைவியாக ஒரு போர்த்துக்கேயப் பெண் தேவையெனக் கேட்டு வைத்தான். போர்த்துக்கேயக் கமாண்டர் கச்சாய் வன்னிமையை அவமானப்படுத்துவதற்காகவும், தமது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும் பறங்கிப் பெட்டை நாய் ஒன்றினை' அனுப்பிவைத்தான்.

கச்சாய் வன்னிமை போர்த்துக்கேயரை யாழ்ப்பாண மண்ணிலிருந்து துரத்துவதாகச் சபதம் எடுத்து, மன்னார்க் கோட்டையைக் கைப்பற்ற வந்திருந்த ஒல்லாந்தத் தளபதியைக் காண விரைந்து சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

*1658, பெப்ரவரி, 22ஆம் திகதி.*

ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் கொழும்பு அடங்கியதன் பின்னரும் இரு ஆண்டுகள் வரை வட பிரதேசம் போர்த்துக் கேயரின் ஆட்சியின் கீழ் விளங்கியது. போர்த்துக்கேயரின் வட ஆள்புல அதிகாரத்துக்கு ஆதாரமாக விளங்கிய பலமான மூன்று கோட்டைகள் இன்னமும் ஒல்லாந்தரால் கைப்பற்றப்படாதிருந் தன. மன்னார்க் கோட்டையின் துணைவலியோடு போர்த்துக் கேயர், மன்னார் முத்துசலாபத்தில் இன்னமும் முத்துக் குளித் தனர். ஊர்காவற்றுறைக் கோட்டையின் நீர்வழித் தடுப்பு முகாமின் பலம் கொண்டு, வலிமையான யாழ்ப்பாணக் கோட் டைக்கு மேலதிக பலம் சேர்த்து, யானை வர்த்தகத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர். எனவே, போர்த்துக்கேயரின் ஆதிக் கத்தினுள் இருக்கும் வட ஆள்புலம் கைப்பற்றப்படவேண்டியது, என ஒல்லாந்தத் தேசாதிபதி விரும்பினான். அதனை நிறை வேற்றுவதற்குரிய தளபதியாக ஆட்மிறல் றைக்ளொவ் வன் ஹூஒன்ஸ் என்பவன் தெரிவானான். வன்ஹூஒன்ஸ்க்கு வயது 39.

1500 வீரர்களைக் கொண்ட படையுடனும் பத்தொன்பது யுத்த மரக்கலங்களுடனும் மன்னாரை நோக்கிப் புறப்பட்டான். அக்காலவேளையில் இந்து சமுத்திரத்தில் எதிரிப் போர்க்கலங்க ளுக்குப் பெரும் சிம்மசொப்பனமாக விளங்கிய நார்டென் என்ற யுத்தக் கப்பல் ஒல்லாந்தக் கப்பல்களுக்கு வழிகாட்டி வந்தது.

ஒல்லாந்தப் படைகள் மன்னார்க் கோட்டையைக் கைப் பற்றிக் கொண்டன. மன்னார்க் கோட்டையைக் கைப்பற்றிய தும், தனது படைவீரர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து, ஒன் றைக் கரையோர நிலப் பாதை வழியே பூநகரிக்கூடாக யாழ்ப் பாணத்திற்கு கச்சாய் வன்னிமை வழிகாட்ட வழிநடத்தி வந் தான்; அவனது கப்பல்கள் கடல் மார்க்கமாக ஊர்காவற்றுறைக் கோட்டையைக் கைப்பற்றுவதற்காக விரைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தப் படைகளை நடத்தி வந்த றைக்லோவ் வன்ஹூன்ஸ்சை யாழ்ப்பாணத்து மக்கள் வன்கோயன் எனக் குறிப்பிட்டனர். இன்னும் பெரிய ஒல்லாந்தேசு எனவும் அழைத்தனர்.

மார்ச் மாதம் 9 ஆம் திகதி ஒல்லாந்தப் படை யாழ்ப்பாணத்திலிருந்த யேசுசபைக் கல்லூரியையும், டொமினிக்கன் சபை ஆலயத்தையும், மடத்தையும் கைப்பற்றிக்கொண்டது. கோட்டைக்கு வெளியில் சிதாரியின் (பறங்கித்தெரு) இருந்த போர்த்துக்கேயர் அனைவரும் ஒல்லாந்தப் படைக்கு அஞ்சி யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்துகொண்டனர்.

யாழ்ப்பாணக் கோட்டையை ஒல்லாந்தர் முற்றுகையிட்டனர். அவர்கள் கோட்டையைச் சுற்றித் தரைப்புறமாகப் பாசறை அமைத்துக்கொண்டனர் ஊர்காவற்றுறைக் கோட்டையைக் கைப்பற்றியபின், யாழ்ப்பாணக் கடனீரேரிக்குள் பிரவேசித்த ஒல்லாந்தக் கப்பல்கள் கொமுசாறி (தளபதி) யின் கட்டளைக்காகக் காத்திருந்தன. மார்ச் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 21 ஆம் திகதி வரை ஒல்லாந்தரின் முற்றுகை தொடர்ந்தது.

போர்த்துக்கேயரின் பலம் வாய்ந்த யாழ்ப்பாணக் கோட்டையின் நாலாபக்கங்களிலும் ஒல்லாந்தப் படை சூழ்ந்து கொண்டது

அவ்வேளை யாழ்ப்பாண நகரம் ஒரு சிறிய பட்டினமாக விருந்தது. சத்திரம், பொதுக் கிணறு என்பன அமைந்திருந்தன. தாழ்ந்த கூரைகளைக் கொண்ட கற்கட்டிடங்கள் காணப்பட்டன. மக்களது வீடுகள் விறாந்தைகளையும், தலைவாசல்களையும் கொண்டிருந்தன, வீடுகளின் முன்பக்கங்கள், வீதிப்பக்கமாகவிருக்காது உட்பக்கமாகவிருந்தன. மண்சுவர்களையும் ஓலைக் கூரைகளையும் கொண்ட வீடுகள் அதிகமாகக் காணப்பட்டன.

ஒல்லாந்தர் முற்றிகையிட்டுள்ளனர்; பெரும் யுத்தம் நடக்கப்போகிறது எனக் கேள்விப்பட்டதும் வீடுகளுக்குள் ஒடுங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மக்கள் மூன்று நாட்களின் பின்னர் வழமைக்குத் திரும்பிக் கடைத்தெருவுக்கு வரத்தொடங்கினர். எவர் ஆண்டாலென்ன என்ற மனப்போக்கு அன்று யாழ்ப்பாண மக்களிடமிருந்தது போலும்.

முற்றவெளியில் முற்றுகையிட்டிருந்த ஒல்லாந்தப் படை வீரர் இடையிடையே கடைத்தெருவுக்கும் வந்தனர். பாசறையிலிருந்த வீரர்கள் பட்டினத்திற்கு வருவதும் வியாபாரிகளிடம் தமக்குத் தேவையான பொருட்களை அள்ளிக்கொள்வதும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தன.

யாழ்ப்பாண மக்களது ஆடையணிகள் ஒல்லாந்தருக்கு வியப்பினைத் தந்தன. வேட்டியை மடி வைத்துப் பஞ்சகச்சமாக ஒருசிலர் கட்டியிருந்தனர் அவர்களிற் சிலர் சால்வை தரித்திருந்தனர். வேறு சிலர் அரையில் சிறுதுண்டு மட்டும் கட்டியிருந்தனர். பெண்களில் பெரும்பாலானோர் ரவிக்கையணியாது சேலைத் தலைப்பால் மார்புகளை மூடியிருந்தனர். ஒரு பகுதிப் பெண்கள் இடுப்பில் சேலையை மட்டும் மடித்துக் கட்டியிருந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டும் தாக்காது கொமசாறி வன்ஹூன்ஸ் காலம் கடத்தி வருவது வியப்பாகவிருந்தது அவனது திட்டம் வேறாகவிருந்தது. கோட்டைக்குள் புகுந்திருக்கும் ஆயிரம் பேருக்கும் உணவுப் பஞ்சம் ஏற்படும், தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும், இருக்கின்ற உணவு முடிந்ததும் அவர்கள் வலுவிழந்து தாக்குதல்களைத் தொடங்குவார்கள். பட்டினி போடுவதுதான் அவர்களைப் பணியவைக்க அல்லது அழிக்கச் சரியான வழியெனக் கொமசாறி வன்ஹூன்ஸ் நம்பினான். அவனது எண்ணம் பொய்க்கவில்லை. கோட்டை கொத்தளங்களில் நின்றிருந்த போர்த்துக்கேயர்களிடம் அமைதியின்மை, சோர்வு என்பன ஏற்படுவதை அவதானித்தான்.

கோட்டைக்குள் பட்டினி நிலை தோன்றிவிட்டது. கோவாவிலிருந்து உதவிகள் வரும் எனப் போர்த்துக்கேயர் எதிர்பார்த்தது பொய்த்துவிட்டது. முற்றுகை தொடங்கி 107 நாட்கள். கோட்டைக்குள்ளிருந்த உணவுப்பொருட்கள் அனைத்தும் தீர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டன. கோட்டைக்குள்ளிருந்த நாய்களும், பூனைகளும் அங்கிருந்தோரின் ஆகாரங்களாகின. போர்த்துக்கேயர் கோட்டையுள்ளிருந்த பூனைகளை துரத்தியதால் அவை தறிகெட்டு ஓடிக் கோட்டை மதிற்சுவரைக் கடந்து அகழியினுட் பரிதாபமாக விழுந்தன. பூனையை இழந்த போர்த்துக்கேய வீரன் பரிதாபமாகத் திரும்ப நேர்ந்தது.

இனியும் பொறுக்கமுடியாது என்ற நிலை கோட்டைக்குள் உருவாகியது.

யாழ்ப்பாணக் கோட்டையின் கிழக்குப் பக்க உயர் கொத்தளத்திலிருந்து முதலாவது பீரங்கி ஒல்லாந்தப் படைவீரர்களை நோக்கி வெடித்தது. அதனைத் தொடர்ந்து வடக்குப் பக்கக் கொத்தளங்களிலிருந்தும் பீரங்கிகள் முழங்கின அகழியைத் தாண்டிப் பீரங்கிக் குண்டுகள் தீச்சுவாலைகளுடன் ஒல்லாந்தரை நோக்கிப் பாய்ந்தன.

ஒல்லாந்தக் கொமுசாறி கோட்டையைத் தாக்குமாறு தனது படைவீரர்களுக்கு உத்தரவிட்டான். ஒல்லாந்தரின் பீரங்கிகள் முழக்கமிட்டன. வடக்கிலிருந்து பாய்ந்த முதற் குண்டே வடபுறக் கொத்தளத்தைச் சிதைத்தது. தொடர்ந்து மழைபோலப் பீரங்கிக் குண்டுகள் பாய்ந்தன. கடனீரேரியில் தங்கி நின்ற நார்டொன் கப்பலிலிருந்து பாய்ந்த பீரங்கிக் குண்டு, தென்புற அரண்சுவரினைத் துளையிட முயன்றது. ஒல்லாந்தரின் எறிபொறிகள் பெருங்கற்களையும், தீப்பந்தங்களையும் கோட்டைக்குள் வீசியெறிந்தன. கோட்டைக்குள் கூக்குரல்கள் எழுந்தன.

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பீரங்கிக் குண்டுகள் முற்றாகச் செலவாகிவிட்டன. போர்த்துக்கேயர் இடுகாட்டில் புதைகுழிகளுக்கு மேலிருந்த கல்வெட்டுச் சிலைகளையுடைத்தும், கோயில்களிலிருந்த வெண்கலப் பாத்திரங்களைப் பொடி செய்தும் பீரங்கிகளிற் போட்டுக் குண்டுகளாக உபயோகித்தனர்.

ஆயிற்று; எல்லாம் முடிந்தன. □□□

# பகுதி: இரண்டு

# றைக்ளோப் வன் ஹூன்ஸ்

## 1

*21, ஜூன், 1658.*

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இருந்த போர்த்துக்கேயர் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தனர். கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. போர்த்துக்கேயரின் கொடி இறக்கப்பட்டு, ஒல்லாந்தரின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டது. கோட்டையிலிருந்து வெளியேறுவோர் அணிந்திருந்த உடைகளை மட்டுமன்றி வேறெதையும் எடுத்துச் செல்லக்கூடாது எனக் கொமுசாறி வன் ஹூன்ஸ் கட்டளையிட்டிருந்தான். கோட்டையை விட்டு வெளியேறிய ஆண், பெண் அனைவரும் நிர்வாணமாக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டனர். ஈவிரக்கமின்றி அவமானகரமான இச்செயலை ஒல்லாந்தர் செய்தனர். ஒரு சிறு பொருளைக் கூடச் சரணடைந்தவர்கள் தம்முடன் எடுத்துச் செல்ல ஒல்லாந்தர் அனுமதிக்கவில்லை.

சரணடைந்த போர்த்துக்கேய வீரர்களைக் கப்பல்களில் ஏற்றிக் கோவாவிற்கும் பத்தேயாவிற்கும் அனுப்பி வைத்தான். தண்டிக்கப்படவேண்டிய இராணுவ அதிகாரிகளை நார்டென் கப்பலில் ஏற்றிக் கைதிகளாக ஒல்லாந்த வைஸ்ரோயின் விசாரணைக்காகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தேயாவிற்கு அனுப்பி வைத்தனர். குடும்பமாக இருந்த போர்த்துக்கேய வீரர்கள் அவர்களது இந்தியாக் குடியேற்றமான கோவாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். போர்த்துக்கேயக் கன்னிகளையும், விதவைகளையும் ஒல்லாந்தா நம்முடன் தடுத்து வைத்துக் கொண்டனர்.

போர்த்துக்கேயப்படையில் வேலை செய்த பலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருக்க ஒத்துக்கொண்டனர். மலபார் வீரர்களில் பலரும் பறங்கிகளில் சிலரும் அவ்வாறு சேவையில் தொடர்ந்திருக்க ஒப்புதல் வழங்கினர்.

யாழ்ப்பாணக் கோட்டையின் வீழ்ச்சியுடன் போர்த்துக்கேயரின் சாம்ராச்சியம் இலங்கையில் அஸ்தமித்தது. கோட்டையின் வீழ்ச்சிக்குப் பல காரணங்களிருந்தன. கொமுசாறி வன் ஹூஒன்சின் முற்றுகை மார்ச் 16 ஆம் திகதியிலிருந்து ஜூன் 21 ந் திகதிவரை நீடித்ததால், கோட்டைக்குள் ஏற்பட்ட உணவுத்தட்டுப்பாடும் பரவிய நோய்களும் அவர்களைச் சரணடையத் தூண்டின. இலங்கையின் ஏனைய பகுதிகள் எல்லாவற்றிலும் கோட்டைகளை இழந்த நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையை மட்டும் தம்வசம் வைத்திப்பதில் பயனில்லை என்ற உணர்வு. தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாவும் ஒரேவேளையில் ஒல்லாந்தப்படை தாக்குமென அவர்கள் எதிர்பார்க்கவில்லை. நீண்டகால முற்றுகையின் பின்னர் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதலால் கொத்தளங்கள் சிதைந்தன. கோட்டை மதில்கள் தகர்ந்து போயின. துப்பாக்கி மருந்துக்கும் பீரங்கிக் குண்டுகளுக்கும் தட்டுப்பாடேற்பட்டது. உணவில்லாமையினால் இறந்தவர்களை விட ஒல்லாந்தரின் பயங்கரமான எறிபொறிகள் ஈவிரக்கமின்றி வீசிய கற்களுக்குப்பலியானவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இவையாவும் போர்த்துக்கேயரைச் சரணடைய வைத்தன.

யாழ்ப்பாணக் கோட்டை பிடிபட்டதும் ஒல்லாந்தத் தளபதி பத்தேவியாவிலுள்ள வைஸ்ரோயிக்குப் பின்வருமாறு அறிக்கை சமர்ப்பித்தான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இலங்கையின் இறுதிப்பிரதேசமான யாப்னாப் பட்டினத்தை இன்று கைப்பற்றினோம். ஊர்காவற்றுறைக் கடற் கோட்டையும், யாப்னாக் கோட்டையும் இலகுவில் எங்களால் கைப்பற்றப்பட்டன. இச்சண்டையில் எதிரிகள் பக்கத்தில் 117 பேர் கடற்கோட்டையிலும், 700 பேர் யாப்னாக் கோட்டையிலும் கொல்லப்பட்டனர். 800 பேரைக் கைதிகளாக்கியுள்ளோம். எங்கள் தரப்பில் 98 ஒல்லாந்தர் இறந்தனர். 100 பேர்வரையில் கூலிப்படையில் இறந்தனர். 23 பேர் கடும் காயமடைந்தனர்.

''யாப்னாப் பட்டினம் வளமானது. அரிசி, பருத்தி, சாயவேர், யானைகள், உப்பு என்பன இப்பட்டினத்திலுள்ளன. சுதேசிகள் சிறிய உருவத்தினர். பணிவானவர்கள். அவர்களில் பலர் விவசாயிகளாகவும் நெசவாளர்களாகவும் சாயம் போடுபவர்களாகவும் உள்ளனர் அடங்கி வாழப் பழக்கப்பட்டவர்கள்.

''கோட்டைக்குள் கைதானவர்கள் எப்பொருளையும் எடுத்துச் செல்ல நான் அனுமதிக்கவில்லை. கோட்டையைக் கைப்பற்றியபோது அகப்பட்ட பொருட்களை ஒல்லாந்தக் கம்பனிக்குரியனவாகப் பதிவேட்டில் பதிந்து பேணியுள்ளேன். சாயவேர் பல சாக்குகளில் அகப்பட்டன. 340 அடிமைகள் கிடைத்தனர். 30 ஆயிரம் பற்றாகோஸ் பெறுமதியான தங்கம் வெள்ளி ஆபரணங்கள் கொண்ட சிறுபுதையல் ஒன்றும் கோட்டைக்குள் அகப்பட்டது.

''முஸ்லிம் வர்த்தகர்களுக்கு விற்பதற்காக ஆனைப்பந்தியில் கட்டிவைக்கப்பட்டிருந்த 27 யானைகளையும் எமக்குரியதாக்கிவிட்டேன். இந்த யானைகளுக்குப் போர்த்துக்கேயர் மதித்திருக்கும் விலை குறைவு. இவற்றினை முஸ்லீம் வர்த்தகர்களுக்கு நல்ல விலையில் விற்கவுள்ளேன் அத்துடன் இவற்றுள் 10 யானைகளைச் சோழமண்டலக் கவனர் பிற்றிற்கு அனுப்பவுள்ளேன்.

''எங்களுக்குப் பீரங்கிக்குண்டுகள் தேவை. 12 தொட்டு 24 இறாத்தல் நிறையுள்ள குண்டுகளில் 3000 அனுப்பிவைக்கவும். 2 இறாத்தல் தொட்டு 4 இறாத்தல் நிறைவரையிலான குண்டுகளில் 2000 அனுப்பிவைக்கவும். பத்தேவியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட துப்பாக்கி மருந்துகள் சிறந்ததாகவிருந்தது. இனிமேல் யாப்னாப் பட்டினத்திலேயே கண்டவுடரைத் தயாரிக்கலாம் என நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பார்வைக்கு அழகான விதவைப் பெண்களையும் கலியாண மாகாத கன்னிப் பெண்களையும் இங்கு தடுத்து வைத்துள்ளோன். எங்களுடைய போர்வீரர்களுக்கு அவர்களைக் கலியாணம் செய்து கொடுக்கவுள்ளோன். குடும்பமாகவிருந்து அகப்பட்ட போர்வீரர் களை அவர்களின் கோவாவிற்கும், ஏனையோரை பத்தேவியா விற்கும் அனுப்பிவைக்கிறேன். அவர்களைச் சிறையில் வைப்பதோ, போர்த்துக்கல்லிற்கு அனுப்புவதோ உங்கள் சித்தத்தைப் பொறுத்தது......'' என்றவாறு றைக்ளோப் வன் ஹூன்சின் அறிக்கை அமைந்தது.

## 2

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஒல்லாந்தர் குடியேறினர். யுத்தத்தினால் சிதைந்த மாளிகைகள் தற்காலிகமாகத் திருத் தப்பட்டன. ஒல்லாந்தப் படையுடன் நார்டென் கப்பலில் வந்த பாதிரியார் பால் தேயஸ், போர்த்துக்கேயரின் கத்தோலிக்க தேவாலயத்திதைப் புரட்டஸ்தாந்துத் தேவாலயமாகச் சமயச் சுத்திகரிப்புச் செய்து முதலாவது நன்றிப் பிரார்த்தனையை நடாத்தினார்.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து போர்த்துக்கேயரும் ஒல் லாந்தரும் யாழ்ப்பாணத்தையும் அதனைச் சார்ந்த பகுதிகளை யும் தத்தம் ஆட்சிக் காலத்தில் நிர்வாகித்தனர். அதனால், யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்ப்பாண மக்கள் 'இராசவாசல்' என்றே அழைத்தனர். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணப் பிரதே சத்தை 32 கோயிற்பற்றுக்களாகப் பிரித்தனர் ஒவ்வொரு கிறிஸ் தவ தேவாலயமுள்ள பகுதியும் ஒவ்வொரு கோயிற் பற்றாகக் கருதப்பட்டது. நல்லூர், சுண்டுக்குழி, வண்ணார்பண்ணை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல் லிப்பழை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், உடுப் பிட்டி, கட்டைவேலி, பருத்தித்துறை, நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, முள்ளிப்பற்று முதலான 32 கோயிற் பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த ஒவ்வொரு கோர்விற்பற்றுக்கும் ஒவ்வொரு தமிழ்ப்பிரதிநிதி நிர்வாகத்திற்குத் துணைசெய்பவராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த அந்தக் கோயிற்பற்றில் உயர்குலத்தாலும், செல்வாக்காலும் நாட்டாண்மையாக விளங்கிய ஒருவர் இப்பதவியை வகித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டையினுள் இருந்த அடுக்களையில் பெரும் அவியில் நடக்கும். ஒல்லாந்தர் மாட்டிறைச்சி உண்பவர்களாதலால், கோட்டைக்குள் மாடுகளை அறுக்கும் ஓரிடத்தையும் கொண்டிருந்தனர். பசுவதை யாழ்ப்பாண மக்களால் ஒதுக்கப்பட்ட ஆசாரமாதலால், மாட்டிறைச்சியைச் சைவர்கள் அன்று உண்பதில்லை, அதனால் இறைச்சிக்கு மாடுகளை விற்கமாட்டார்கள். எனவே, ஒல்லாந்தர் பாலிற்கென மாடுகளை வாங்கி, யாழ்ப்பாணக் கோட்டையில் அடைத்து, தேவையான போது அவற்றினை வெட்டியுண்டனர். இந்த உண்மை வெளியில் தெரிந்ததும் ஒல்லாந்தருக்கு யாழ்ப்பாண மக்கள் மாடுகளை விற்க முன்வரவில்லை. அதனால் ஒரு வருடத்தில் ஒருவர் ஒரு மாடு வீதம் தங்களுக்கு இறை செலுத்த வேண்டுமென ஒல்லாந்தக் கொமுசாறி கட்டளையிட்டான்.

அவனது கட்டளைக்குப் பணிந்து யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவரும் வருடத்திற்கு ஒரு மாடு வீதம் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அனுப்பிவைத்தனர் இதற்கு இணங்காத பலர் தண்டனைக்குப் பயந்து இந்தியாவிற்குச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகம் பார்த்த சண்முகநாத முதலியார் என்பவரிடம் ஒல்லாந்தக் கொமுசாறி ஒருநாள், விருந்தொன்றிற்கு நல்லதொரு காளைக்கன்று வேண்டுமெனக் கேட்டான். அதனால் சண்முகநாத முதலியார் தனது பதவியை உதறியெறிந்தார். திருநெல்வேலியில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் என்ற சைவர், ஒல்லாந்தருக்குப் பசுவொன்றினை வழங்கும் முறை வந்தபோது, அனைத்தையும் துறந்து இந்தியாவிற்கு ஓடிச்சென்று சிதம்பரத்தில் துறவு பூண்டார். சிதம்பரத்தில் ஞானப்பிரகாசர் குளம் என்ற திருக்குளத்தை அமைப்பித்தவ

ரிலரே. வரணி இல்லைநாதர் என்பவரும் ஒல்லாந்தருக்கு மாடு கொடுக்க மறுத்துச் சிதம்பரத்துக்கு ஓடிச் சென்றார். இவ்வாறு பல சைவர்கள் ஒல்லாந்தரின் கட்டளைக்குப் பணியாது இந்தியாவிற்கு விலகிச் சென்றிருக்கின்றனர்.

ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய நிர்வாகப் பிரிவுகளில் மிகப் பெரியதாக யாழ்ப்பாணக் கொமாண்டரி விளங்கியது. கொழும்பு, காலி ஆகிய ஏனையிரு கொமாண்டரிகளும் பரப்பில் சிறிய ஆள்புலங்களாகவிருந்தன. கொழும்புப் பிரிவு மகாஓயாவிலிருந்து பெந்தோட்டை நதிவரை எட்டுக் கோறளைகளைக் கொண்டு விளங்கியது. யாழ்ப்பாணப் பிரிவு சிலாபத்திலிருந்து தொடங்கி மன்னாரை உள்ளடக்கி வன்னிப்பிரதேசம், யாழ்ப்பாணக்குடா நாடு என்பனவற்றைக் கொண்டதாக, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வரை பரந்தமைந்திருந்தது. இலங்கையின் வடபகுதி முழுவதையும் கொண்டதாகவும் கிழக்கு மாகாணம் முழுவதையும் கொண்டதாகவும் விளங்கியது. இவற்றின் நிர்வாகமையம் யாழ்ப்பாணக் கோட்டையாகவிருந்தது.

யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள (யாழ்ப்பாணக் குடா நாடு முழுவதும்) காணிகள் மக்களுக்குரிதான பரவணிக் காணிகளாகவிருந்தன; பரம்பரை பரம்பரையாக ஆண்டு அனுபவித்து வரும் காணிகள். ஆனால், வன்னிப் பிரதேசக் காணிகளில் பெரும் பகுதி அவ்வாறிருக்கவில்லை. அதனால் வன்னிக் காணிகளுக்கு ஒல்லாந்தக் கம்பனி உரிமை பாராட்டியது. ஒல்லாந்த ஆளுநரால் நியமிக்கப்பட்ட வன்னியர்கள் ஒல்லாந்தருக்குத் திறை செலுத்தி ஆண்டனர். வருடமொன்றுக்கு 30 யானைகள் திறை; அவற்றில் மூன்றிலிரண்டு ஆண் யானைகளாகவும் எஞ்சியவை பெண்யானைகளாகவும், ஒல்லாந்தருக்கு வன்னியரால் திறை செலுத்தப்பட்டன.

## 3

1662 ஆம் ஆண்டு, ஒல்லாந்தக் கொமுசாறி றைக்ளோப் வன்ஹூன்ஸ், இலங்கை முழுவதற்கும் ஆளுநராக வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்த ஆளுநராகக் கொழும்பிலிருந்த அட்றியான் வன்டேர் மேய்டன் என்பவனிடமிருந்து அதிகாரத்தைப் பொறுப்பேற்றான். அவ்வாறு இலங்கை முழுவதற்கும் ஆளுநராக வருவதற்கு முன், யாழ்ப்பாணக் கோட்டையில் ஒரு சதி நடந்தது

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஒல்லாந்தரைத் துரத்தி விட்டு, யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்ற ஒரு பெரும் சதி நடந்துள்ளது யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஒல்லாந்தப் படைவீரர்களில் ஒருபகுதியினரை இந்தியாவிற்கு, நாகபட்டினத்திற்கு அனுப்பிவைக்க நேர்ந்தது. நாகபட்டினத்தில் ஒல்லாந்தருக்குக்கெதிரான கிளர்ச்சியொன்றினை முறியடிப்பதற்காக ஒல்லாந்தப் படை அங்கு சென்றது. அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டையைக் கைபபற்றச் சதித்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது.

இச்சதித்திட்டத்தில் டொன் லூயிஸ் என்பவன் முதன்மை வகித்தான். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது, அங்கிருந்த போர்த்துக்கேயரில் சிலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருப்போமெனச் சத்தியம் செய்து கொடுத்திருந்தனர். அவர்களில் ஐந்து பறங்கிகள் இச்சதியில் சம்பந்தப்பட்டிருந்தனர். மன்னாரைச் சேர்ந்த ஒரு கோயிற் பற்றுத் தலைவனும் இதில் சேர்ந்திருந்தான். இவர்களோடு கல்தேறா என்ற கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவரும் கூட்டுச் சேர்ந்திருந்தார். ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து சமயத்தை இங்கு பரப்புவதற்காக கத்தோலிக்க தேவாலயங்களைத் தம் பொறுப்பில் பறிமுதல் செய்தும், கத்தோலிக்கரை நெருக்குவாரப்படுத்தியும் வந்ததால், கத்தோலிக்கரான கல்தேறா மனவேதனை அடைந்திருந்தார். இன்னும் பலர் இச்சதியில் பங்குகொண்டிருந்தனர்.

ஒல்லாந்தருக்கு எதிரான இந்தச் சதியில் நல்லூர் முதலியாராகவிருந்த பூதத்தம்பி என்பவரும் பங்கு பற்றியிருந்தார் என அறியப்படுகின்றது போர்த்துக்கேயர் காலத்தில் இராசவாசல் முதலியாராக விளங்கிய புவிநாயக முதலியின் மகனே இந்த பூதத்தம்பியாவார். புவிநாயகமுதலியாருக்குப் பின்னர் இவர் நல்லூரின் முதலியாக நியமிக்கப்பட்டிருந்தாலும் இராசவாசல் முதலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெரும் பட்டம் தந்தைக்குப்பின் இவருக்கு வழங்கப் படாமையால் இவர் சிறிது மனவருத்தமடைய நேரிட்டது ஒல் லாந்த மதகுருவான பால்தேயஸ் பாதிரியார், புரட்டஸ்தாந்து மதத்தலைவரான கண்டிக்குளி (சிதார்) முதலி அந்திராசிக்கு இராசவாசல் முதலிப் பட்டத்தை வழங்கக் காரணமாகவிருந்தார்.

நல்லூர் பூதத்தம்பி முதலியும் கண்டிக்குளி அந்திராசி முதலியும் உத்தியோக ரீதியில் நண்பர்கள். ஒருநாள் அந்திரா சிக்கு பூதத்தம்பியின் இல்லத்தில் ஒரு விருந்து நடந்தது. இராசவாசல் முதலியின் அன்பையும் ஆதரவையும் பெறுவதற் காகப் பூதத்தம்பி இந்த விருந்தை நடாத்தியிருக்கலாம். அந்த விருந்தில் உணவு பரிமாறிய பூதத்தம்பியின் மனைவி அழகவல்லி யின் பேரழகில் அந்திராசி மயங்கி, தகாத ஆசைகொண்டான். பல பரிசில்களை அனுப்பி அவள் இணக்கத்தைக் கேட்டபோது, அவள் அவனைத் தூசித்து அனுப்ப நேர்ந்தது. அதனால் ஆத் திரமுற்ற அந்திராசி சந்தர்ப்பம் வாய்த்தபோது பூதத்தம்பியை யும் ஒல்லாந்தருக்குகெதிரான சதியில் இணைத்து முடிச்சிட்டான் எனக் கருதப்படுகின்றது.

ஒல்லாந்தருக்குகெதிரான சதியின் தலைவன் டொன் லுயிஸ் என்பவன் ஆவான். இந்த டொன் லூயிஸ், பூதத்தம்பிதான் என வும் சிலர் கூறுகின்றனர்.

இச்சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது. இச் சதித்திட்டத்தில் பங்குகொள்ளச் சம்மதித்திருந்த கண்டியைச் சேர்ந்த மனுவேல் அந்திரேடா என்ற சிங்கள முதலி ஒருவன் கடைசி நேரத்தில் அனைவரையும் காட்டிக் கொடுக்க நேர்ந்தது.

கொமாண்டர் வன் ஹூன்ஸ் நாகபட்டினத்திற்கும், வைஸ் கொமாண்டர் ஜாக்கோப் வன்றீய் தன் படைவீரர்களுடன் பருத்தித்துறைக்கும் சென்றிருந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை; கோட்டைக்குள்ளிருந்த ஒல்லாந்தர் தேவாலயத்தில் குரு பால்தேயஸ்பாதிரியாரால் நடாத்தப்படும் பிரார்த்தனைக் கூட் டத்தில் கலந்து கொண்டிருக்கும் நாள் சதி நிறைவேற்றத்தக்க தருணமாகக் கருதப்பட்டது. தேவாலயத்தினுள் புகுந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்போரைச் சடலங்களாக்குகின்ற முயற்சி தடுக்கப்பட்டது அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு வழங்கிய தண்டனைகள் மிகமிகக் கொடூர மானவை.

சதித்திட்டத்தை உருவாக்க மூலகர்த்தாக்களாக விளங்கிய டொன்லுயிஸ், மன்னார் முதலி, போர்த்துக்கேயர் ஒருவர் ஆகிய மூவருக்கும் கொடூரமான தண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் மூவரும் தண்டனை வழங்கப் பயன்படுத்தப்படும் சிலுவைச்சட்டத்தில் பிணைக்கப்பட்டனர். பின்னர் யாழ்ப் பாணக் கோட்டையில் தண்டனை வழங்கவென நியமிக்கப் பட்டிருந்த அலுகோசுகளினால் (காம்பிரிகள்) கோடரிகளினால் முதலில் தொண்டையிலும், பின்னர் மார்பிலும் வெட்டிப் பிளக்கப்பட்டு அவர்களின் இருதயங்கள் வெளியில் எடுக்கப்பட்டு அவர்களின் முகங்களில் வைக்கப்பட்டன. பூதத்தம்பியின் தலை துண்டிக்கப்பட்டது ஏனையோர் பதினொருவர் தூக்கிலிடப்பட் டனர். அவர்களின் சடலங்கள் மரங்களில் தொங்கவிடப்பட்டு பறவைகளுக்கு இரையாக்கப்பட்டன.

ஒல்லாந்தரின் தண்டனைகள் மிகக் கொடூரமானவை. மட்டக்களப்பில் அவர்கள் கைது செய்தவர்களைக் கழுவேற்றிக் கொன்றிருக்கின்றனர். மரக்குற்றியொன்றில் பொருத்தப்பட்ட கூரான அலவாங்கு போன்ற வேல்முனையில் பிருஷ்டத்திற் கூடாக தலை உச்சிவரை செலுத்திக் கொள்ளப்படுகின்ற கொடூரம் கழுவேற்றலாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்ற எடுக் பட்ட உட்புறச்சதி முறியடிக்கப்பட்டது அதன் பின்னர் ஆங்கிலே யர் இலங்கைக்கு வரும்வரை யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந் தரின் ஆதிக்கத்தின் கீழ் விளங்கியது.

# 4

ஒல்லாந்தரினால் அமைக்கப்பட்ட கோட்டை கட்டமைப் பில் மிக அற்புதமானதாகும். கீழைத்தேசத்திலுள்ள கோட்டை கள் யாவற்றிலும் யாழ்ப்பாணக் கோட்டை மிகப் பலமானதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பானதும் என அனைத்து கட்டிடங்களை விற்பன்னர்களாலும் விதந்துரைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டை அமைக்கப்பட்ட கால கட்டத்தில் இந்துசமுத்திர நாடுகள் பலவற்றிலும் பலமான கோட்டைகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் அவை எதுவும் யாழ்ப்பாணக் கோட்டையின் முழுமைக்கும் நிறைவுக்கும் தொழில்நுட்பத்திறனுக்கும் நிகராகாது எனப் பலரும் போற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணக்குடா நாட்டின் தென் விளிம்பில் யாழ்ப்பாணக் கடனீரேரியின் கரையில் கம்பீரமாக யாழ்ப்பாணக் கோட்டை அமைந்திருந்தது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையை மீளப் புதிப்பித்துக் கட்டியபோது, ஐங்கோண வடிவில் (Pentagon) வடிவமைத்தனர். முதலில் உள் கோட்டையின் ஐங்கோண வடிவம் கட்டப்பட்டதாக அறியப்படுகின்றது. இதனை அவர்கள் 1680 ஆம் ஆண்டு கட்டிமுடித்தனர் என்பது கோட்டை வாயிற் கதவில் பொறிச்கப்பட்ட ஆண்டு குறிப்பிடுகின்றது. கோட்டையின் வெளியமைப்புச் சுற்றுக்கட்டமைப்புகள் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொடக்கப்பட்டு, 1792 ஆம் ஆண்டு நிறைவுற்றது என்பது கோட்டையின் வாசல் வளைவில் பொறிக்கப்பட்டிருக்கும் ஆண்டு குறித்து நிற்கின்றது. இதில் அவதானிக்க வேண்டிய பரிதாபம் யாதெனில், ஒல்லாந்தர் இந்த ஐங்கோணக் கோட்டையை 1792 இல் அதாவது பிரித்தானியரிடம் கோட்டையைப் பறிகொடுப்பதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்பே பூரணமானது என்பதாகும். இந்த மாபெரும் கோட்டையை ஒல்லாந்தர் 1795 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆந்திகதி பிரித்தானியரிடமிழந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டை ஐந்து கொத்தளங்களைக்(Bastians) கொண்டிருந்தது. கடனீரேரிப் பக்கமாக இரண்டு கொத்தளங்களையும், நிலப்புறமாக மூன்று கொத்தளங்களையும் கொண்டிருந்தது. இந்த ஐந்து கொத்தளங்களும் தெளிவாகப் பெயரிடப்பட்டிருந்தன கோட்டையின் வடபுறக் கொத்தளம் உற்றெச் (UTRECHT) என அழைக்கப்பட்டது. வட கிழக்குப் புறக் கொத்தளம் ஹெல்டர்லாந்து (GELDERLAND) என்றும், தென் கிழக்குப் புறக் கொத்தளம் ஒல்லாந்து (HOLAND) என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் மேற்குப் புறக்கொத்தளம் சிலாந்து (ZEELAND) என்றும், வடமேற்குப் புறக் கொத்தளம் பிறிஸ்லாந்து(FRIESLAND) என்றும் அழைக்கப்பட்டன. இந்த ஐந்து கொத்தளங்களும் நெடும் மதில்களினால் இணைக்கப்பட்டிருந்தன. கொத்தளங்களை இணைக்கின்ற மதில் ஒவ்வொன்றினதும் நீளம் ஏறத்தாழ 554 அடிகளாகும். கொத்தளங்களின் சுற்றளவைத் தவிர்த்து சுற்றுமதிலின் மொத்த நீளம் 3960 அடிகளாகும். முக்கோண வடிவினதான கொத்தளங்கள் ஐந்தினையும் உள்ளடக்கியதாக உட் கோட்டையின் சுற்றளவினைப் பார்க்கில் 6300 அடிகளாகவுள்ளது. கோட்டை மதிலிருந்து முக்கோண கூர் புடைக்கும் கொத்தளத்தின் ஒரு பக்க நீளம் 340 அடிகளாகவிருக்கின்றது.

யாழ்ப்பாணக் கோட்டை மதில் உச்சியில் இருபது அடி அகலமானது அடித்தளத்திற்கு அது நாற்பது அடிவரை அகன்று விரிந்து செல்கின்றது. வெகு அற்புதமாக அம்மதில்களை அமைத்துள்ளனர். மதிலின் வெளிப்பக்கம் ஏறத்தாழ ஆறு அடி அகலத்தில் முருகைக்கற்களினால் கட்டப்பட்டது. உட்பக்கம் நான்கு அடி அகலக்கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. இவ்விரு கட்டுக்களுக்கும் இடைப்பட்ட எட்டடி அகலப்பரப்பு மண்ணால் நிரவப்பட்டுள்ளது. இம்மதில்கள் அகழி மட்டத்திலிருந்து ஏறத்தாழ முப்பது அடிகள் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றன. உண்மையில் இவை பலமான அரண்களே. எவ்வளவு வலிமை வாய்ந்த பீரங்கிகளாலும் தகர்த்தெறியமுடியாத மதிற் சுவர்கள்.

உட்கோட்டையைச் சுற்றி அமைந்திருக்கும் சுரியும் நீரும் கொண்ட அகழி அற்புதமான அழகும், பாதுகாப்பும் கொண்டது உயர் கொத்தளப் பகுதியில் அகழியின் அகலம் 132 அடிகளாகவும், மதிலின் நடுப்பகுதியிலிருந்து நோக்கும்போது அகழியின் அகலம் 158 அடிகளாகவும் இருப்பதனைக் காணலாம். 3960 அடிகள் நீளமான கோட்டையின் சுற்றுமதிலைச் சூழ்ந்து, 6400 அடிகள் நீளமான அகழியின் வெளி சாய் சுவர் அமைந்திருக்கின்றது.

அகழிவெளிமதிற் சாய்சுவரோடு, தாழ் கொத்தளங்கள் நான்கு அமைந்துள்ளன. இந்தத் தாழ் கொத்தளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை மதில் ஒவ்வொன்றின் நடுப்பகுதிக்கு நேர் எதிரில் அகழிக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை வடிவில் சிறிய கோட்டையமைப்பின. அதனால் இவற்றினைச் 'சின்னக் கோட்டைகள்' எனவும் கூறுவர். முற்றவெளியின் முனியப்பர் கோயில் அருகில் இத்தகைய தாழ் கொத்தளக்கோட்டையுள்ளது. வடக்கில் வீரசிங்க மண்டபத்தினை நோக்கியும், மேற்கில் பண்ணைப்பொலிவு விடுதியை நோக்கியும் சின்னக்கோட்டைகள் எனப்படும் தாழ்கொத்தளங்கள் உள்ளன. இன்னொரு தாழ் கொத்தளம் பிரதான வாயிலின் நுழை பகுதியில் அமைக்கப் பட்டிருக்கின்றது. இத்தாழ்கொத்தளங்கள் முருகைக்கற்களினால் கட்டப்பட்டு உட்புற ஒடுங்கிய பாதைகளைக்கொண்டனவாகவும் முருகைக்கற்களினால் மூடப்பட்ட கூரை கொண்டனவாகவும் உள்ளன.

இத்தாழ்கொத்தளங்களில் ஒவ்வொரு காவலரண் கூடுகள் உள்ளன. உயர் கொத்தளங்களில் முக்கோணத்தின் முனைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாக மூன்று காவலரண்கள் இருந் தன. ஆக மொத்தமாக 19 காவலரண் கூடுகள் கோட்டை யில் இருந்தன. அகழி வெளிச் சுவரின் மத்தியில், முற்றவெளி யோடு அமைந்த பாதுகாப்பற்ற தாழ்கொத்தளங்கள் எதிரிகளின் வருகையை முதலில் தடுக்கும் நிலைகளாகும் இத்தாழ்கொத் தளங்களினால் எதிரிபடைகளைத் தடுக்க முடியாவிடில், உயர் கொத்தளங்கள் அடுத்துச் செயற்படும். தாழ்கொத்தளங்கள் நிலமட்டத்தோடு அமைந்தவை உயர் கொத்தளங்கள் அகழிக்கு அப்பால் முப்பதடி உயரமான இடத்தில் பாதுகாப்பாக அமைக் கப்பட்டிருப்பவையாகும். இவற்றைவிட மதிலில் பத்தடிக்கு ஒரு பீரங்கி பொருத்தக்கூடிய இடைவெளி அமைக்கப்பட்டிருந்தது.

போர்த்துக்கேயரினாலும் ஒல்லாந்தராலும் கட்டப்பட்ட கோட்டைகள் உண்மையில் பலம்வாய்ந்தவை. பெரும்பாலான கோட்டைகள் முருகைக்கற்களால் உருவாக்கப்பட்டன. முருகைக் கற்களைத் தாம் விரும்பிய வடிவதற்குச் சுற்தச்சர்களால் வெட்ட முடிந்தது. முருகைக்கற்கள் இலகுவில் நொருங்குந்தன்மையற் றவை; அழுத்த நெகிழ்ச்சி கொண்டவை. முருகைக்கற்களைச் சுவர்கற்களாக கனவடிவில் வெட்டுவது இலகுவாகவிருந்தது. பின்னர் சுவர்களில் பொருத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களால் அமைக்கப்பட்ட கோட்டைகள் அனைத்தும் கடற்கரையோரங்களில் அமைந்திருந்தன. அல்லது பாதைக் கடவைகளில் அமைந்திருந்தன. யாழ்ப்பாணக் கோட்டை, ஊர் காவற்றுறை ஹெமன்கில் கோட்டை, காங்கேசன்துறைக் கோட்டை, வெற்றிலைக்கேணியிலிருந்த பாஸ் பைல் கோட்டை (Parss Pyl) ஆகியன கடற்கரையோரங்களிலும், இயக்கச்சி பெஸ் சுட்டர் கோட்டை, ஆனையிறவுக் கோட்டை' பூநகரிக் கோட்டை என்பன பாதைக்கடவைகளிலும் அமைந்திருந்தன. இத்தகைய நிலைய முக்கியத்துவத்தினால் கடலிலிருந்தும் தரையிலிருந்தும் வரும் எதிரிகளின் தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடிப்பது எளிதாகவிருந்தது.

யாழ்ப்பாணக் கோட்டை சுண்ணக் கற்களினாலும் முருகைக் கற்களினாலும் அடுக்கிக் கட்டப்பட்டது. கொத்தளங்கள், (Bastion), அரண் சுவர்கள் (Rampart), அரண் சுவர்களிலிருந்து உள்ளிறங்கும் சரிவுப்படிகள் (Ramp) அனைத்தும் கட்டிமுடிக்கப் பட்டன ஐங்கோண வடிவில் யாழ்ப்பாணக் கோட்டை கம்பீர மாக உயர்ந்து நின்றது இராணுவப்பாதுகாப்பிற்கும், நிர்வாக நடவடிக்கைகளுக்கும் உரிய கட்டிடங்கள் கோட்டைக்குள் அமைந் திருந்தன. ஒல்லாந்தரின் வதிவிட நகரமாகக் கோட்டைக்கு வெளியே பறங்கித்தெரு அமைந்தது.

'இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் ஒல்லாந்தர் காலத்தில் பல கோட்டைகள் இராணுவ முக்கியத்துடன் விளங்கியிருந்தன. ஆனால், அவற்றில் எதுவும் யாழ்ப்பாணக்கோட்டையின் தொழில் நுட்ப நேர்த்திக்கும் முழுமைக்கும் ஈடாகாது' என டபிள்யூ. ஏ. நெல்சன் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டையின் வாயிற் கதவு ஆறு அங்குலங்களுக்கு மேற் தடிப்பான பாரிய மரக் கதவு ஆகும், அதில் போர் யானைகள் முட்டி மோதிப்பிளக்காதிருக்க வேண்டி, கூரான ஈட்டி முனை கள் பொருத்தப்பட்டிருந்தன. வில் வளைவான வாயிற் கடவையயிலிருந்து அகழியைக் கடப்பதற்கு தொங்கு பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இக்கதவில் கோட்டை கட்டி முடிக்கப்பட்ட ஆண்டாக '1680' குறிக்கப்பட்டிருந்தது. அத்

9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு ஒல்லாந்தக் கம்பனியின் 'VOC' யோடு கூடிய சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தது. கோட்டையின் வெளிச்சுற்று வேலைகள் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கட்டமைக்கப்பட்டு, 1792 இல் நிறைவுற்றன.

கோட்டைக்குள் ஒல்லாந்த பெர்ரினன்ற் கவனர்களின் பங்களா, பின்னர் ராணி மாளிகை (Queens House) அமைந்தவிடத்தில் கட்டப்பட்டது. போர்த்துக்கேயரின் கத்தோலிக்க தேவாலயம், ஒல்லாந்தரினால் புதுப்பிக்கப்பட்டதுடன், சதுரங் கப்பலகை வடிவத்தையும் பெற்றது. இத் தேவாலயம் கோட்டையினுள் வடபகுதியில் காணப்பட்டது. சிறைக்கூடங்கள், அதிகாரிகளின் நிர்வாகப்பகுதிகள் என்பன கோட்டையினுள் அமைந்திருந்தன. கோட்டையின் மையம் ஏறத்தாழ நான்கு ஏக்கர்ப் பரப்பினைக் கொண்ட மைதானமாகும்; அது படையணியினரின் பயிற்சிக்கும் நடைபவனிக்கும் உதவியது.

கோட்டை இரண்டு வாயில்களைக் கொண்டிருந்தது. ஒன்று நீர் வழி (Water Gate), மற்றையது நில வழி (Land Gate). கோட்டையின் தென் மதிற் சுவரில், நீர் வழி அமைந்திருந்தது. கடனீரேரியூடாக வரும் ஒருவர், கோட்டை மதிலினருகில் சிறு கலத்தை நிறுத்திவிட்டு, நீர் வழியூடாக, காவலர்கள் அனுமதித்தால், கோட்டைக்குள் நுழையமுடியும். (இந்த நீர் வழியூடாகத் தான் இரண்டாம் ஈழயுத்தம் ஆரம்பமானபோது, கோட்டைக்குள்ளிருந்த ஸ்ரீ லங்கா இராணுவம் வெளியேறித் தப்பியது.) நில வழி தொங்கு பாலத்தினால் இணைக்கப்பட்ட பிரதான வாயிற்புறமாகும். ஒல்லாந்தர் அப்பாலத்தை உள் மதிலோடு தூக்கிப் பாதையைத் துண்டிக்கவும் தேவையானபோது பாலத்தை இறக்கி இணைக்கவும் வசதிகளைக் கொண்டிருந்தனர். வாயில் சுவரின் மேல் மணிக்கோபுரம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதில் பிணைக்கப்பட்டிருந்த காண்டாமணி, தேவாலய வழிபாட்டு நேரத்தையும், கால நேரத்தையும் ஒலியெழுப்பி யறிவித்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைக்குள்ளிருந்த 'சதுரங்க' வடிவத் தேவலாயம் குறீஸ் கேர்க் (Kruys Kerk) எனப்பட்டது. சமவளவான பக்கங்களைக் கொண்ட கிரேக்கச் சிலுவை (Greek Cross) வடிவினது. இக் கிரேக்ககச் சிலுவை வடிவை 'குரீஸ்கேர்க்' என்பர். கோட்டையின் தென்-கிழக்குப் பகுதியில் இந்தத் தேவாலயம் அமைந்திருந்தது. இதன் பிரதான வாயில் மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்தது. வடக்கு வாயில் ஊடாகவும், தெற்கு வாயில் ஊடாகவும் ஆலயத்தினுள் பிரவேசிக்க முடியும். தேவலயத்தினுள்ளே 1660 ஆம் ஆண்டுக்குரிய கல்லறைக் கற்களைக் காணலாம். ஆனால், பிரதான வாயிலில் இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட 1706 ஆம் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேவாலயம் அடெம் வன் டேர் டுயின் (Adam Van Der Duyn) என்ற கம்மாந்தர் காலத்தில், மார்டின் (Martin Leusekam) என்ற கட்டிடக் கலைஞரால் கட்டி முடிக்கப்பட்டது. இத் தேவாலயம் இருபாலையில் இதற்கென அரிவிக்கப்பட்ட செங்கற்களையும் பயன்படுத்தியது. இச்செங்கற்களுக்கு ஆயிரத்துக்கு மூன்றரைப் பணம் கொடுக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

தேவாலயத்தில் இரு பாரிய மணிகள் பொருத்தப்பட்டிருந்தன. அவை போர்த்துக்கேயர் காலத்தவை என்பது அவற்றில் பொறிக்கப்பட்டிருக்கும் 'N. S. Dos Milagres De Jaffnapatao 1648' என்ற எழுத்துக்கள் சான்று பகருகின்றன.

ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட அற்புதமான யாழ்ப்பாணக் கோட்டை வாயிலில், ஒல்லாந்தர் கம்பனியைக் குறிக்கும் 'VOC' என்ற எழுத்தோடு கூடிய யாழ்ப்பாணக் கம்மந்தோரின் ஆள் புலத்திற்குரிய கேடயச் சின்னம் (Shield) பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கேடயச் சின்னத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பக தருவான பனை மரம் வரையப்பட்டிந்தது. இது இந்த ஆள் புலத்தின் சரியான குறியீடாக விளங்குவதை, பதினேழாம் நூற்றாண்டில் இந்த மண்ணில் கால்பதித்து நிலை கொண்ட ஒல்லாந்தர் உணர்ந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

21, ஜூன், 1658.

ஒல்லாந்தத் தளபதி றைக்லோப் வன் ஹூஉன்ஸ் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அவனுக்கு வயது 39 ஆகும். 1619 ஆம் ஆண்டு பிறந்த றைக்ளோப் வன் ஹூஉன்ஸ் டச் கம்பனியில் உயர் பதவிகளை வகித்துள்ளான். கம்பீரமான நெடிய உருவத்தைக் கொண்டவன்; சிறந்த போர் வீரன். அவனை அவனது சகாக்கள் 'உயரமான கப்ரின்' எனவும், யாழ்ப்பாணச் சுதேசிகள் 'பெரிய ஒல்லாந்தேசு' எனவும் அழைத்துள்ளனர். 1662 ஆம் ஆண்டு இலங்கை முழுவதற்குமான கவனராக நியமிக்கப்படும் வரை, யாழ்ப்பாணப் பட்டினக் கோட்டையின் கம்மாந்தராக விளங்கியுள்ளான் இடையில் சில வருடங்கள் பத்தேயாவிலிருந்து விட்டுத் திரும்பி இலங்கைக்கு வந்து 1675 வரை கவனராகக் கடமையாற்றினான். பின்னர் தனது மகனிடம் பதவியைக் கையளித்துவிட்டு பத்தேவியாவிற்குத் திரும்பினான்.

றைக்ளோப் வன் ஹூஉன்சினிடமிருந்து யாழ்ப்பாணக் கமாண்டரியின் ஆட்சிப் பொறுப்பை 1662 இல் லோறன்ஸ்பைல் (Laurens Pyl) என்பவன் ஏற்றான். றைக்ளோப் வன் ஹூஉன்ஸ் வகுத்த திட்டப்படி யாழ்ப்பாணக் கோட்டையை முழுமைப்படுத்தியதில் பைல்லிற்குப் பெரும் பங்குள்ளது. கண்டி மன்னனால் 1660 ஏப்பிரல் 4 ஆம் திகதி கைதாகிய றொபேட் நொக்ஸ் என்பவன் 19 வருடங்கள் சிறையில் வாடி, 1679, ஒக்டோபர் 18 ஆம் திகதி தப்பியோடி, காடுகள் கிராமங்களுடாக அரிப்பு எனுமிடத்தை வந்தடைந்து, ஒல்லாந்தரிடம் அடைக்கலம் புகுந்தான். அப்பரிதாபத்திற்குரிய றொபேட் நொக்சை கொழும்புக்கு அழைத்துச் சென்று பத்தேவியாவிற்கு அனுப்பிவைத்தவன் லோறன்ஸ் பைல் ஆவான்.

ஒல்லாந்தர் காலத்தில் அடிக்கடி யாழ்ப்பாணக் கோட்டைக்கு ஊழியம் (இராசகாரியம்) செய்வதற்கு யாழ்ப்பாண மக்கள் சென்று வந்தனர். கோட்டையின் பொக்கிஷக்காரனுக்கு வரிகளாகச் சேர்கின்ற செப்புக் காசுகளை எண்ணுவதற்கு கடைகளிலிருக்கும் சோனகர் சென்று வந்தனர் இவர்களோடு கடைகளில் வியாபாரம் செய்யும் செட்டிகளும் பரவர்களும் கோட்டைப் பொக்கிஷக்காரனுக்கு காசெண்ணுவதற்கு உதவி வந்தனர் சிவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் என்போர் கம்மாந்தர், உயர் அதிகாரிகளின் பல்லக்கு காவிகளாகவும், கோட்டை வீடுகளுக்கும், பறங்கித் தெரு, (சீதாரி – Pettah) வீடுகளுக்கும் நல்ல தண்ணீர் அளளி வழங்கும் ஊழியத்தையும் செய்து வந்தனர் பள்ளிவிலிகள் என்போர் கோட்டைக்குள்ளிருந்த கோயிலையும், வீடுகளையும் சுத்தி செய்து வெள்ளையடிக்கவும் கடமைப்பட்டிருந்தனர் பள்ளர் என்போர் மாதமொருதடவை ஒல்லாந்தக் கம்பனி யானைகளுக்கு தென்னையோலை கொண்டுவந்து கோட்டைக்குள் சேர்த்தனர் அத்தோடு வலிகாமம் பிரிவிலுள்ள டள்ளர் என்போர், மாதத்தில் 3 முதல் 6 நாள் வரை கோட்டைக்குள் வந்து திரிகைகளில் வெடிமருந்துகளை அரைத்துக் கொடுக்க வேண்டியவர்களாகவும் இருந்துள்ளனர் குதிரைகளுக்குப் புல் வழங்கும் கடமையும் இவர்களுடையதாக இருந்தது. சாண்டார் என்போர் கம்மாந்தர் கோட்டையிலிருந்து வெளியே புறப்படும் போது சாமான்களைச் சுமப்பவர்களாகவும், தீப்பந்தம் பிடிப்பவராகவும் விளங்கினர். வெற்றிலைக்காரர் என்போர் கோட்டைக் கம்மாந்தருடைய அடுக்களைக்கு முயல் வேட்டையாடிக் கொண்டுவந்து கொடுக்கும் ஊழியம் செய்தனர். கோட்டையில் வெள்ளாளரும் மடப்பள்ளியாரும் கம்மாந்தருடைய கணக்குப் பிள்ளைகளாக இருந்துள்ளனர். அரச ஊழியம் செய்யாது தவிர்க்கப்பட்டவர்கள் மாதம் தோறும் ஐந்து கூடை ஊமற்கரி சுட்டு ஒல்லாந்தக் கம்பனியின் கம்மாலைகளுக்கு வழங்கவேண்டியவர்களாகவிருந்தனர்.

ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் சர்வசாதாரணமாகச் சென்றுவரக்கூடிய உரிமை வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலை (வண்ணை வைத்தீசுவரன் கோயில்) நிர்மாணித்த வைத்திலிங்கச்செட்டியாருக்கு இருந்தது. 1751 ஆம் ஆண்டு, வைத்திலிங்கச் செட்டியாருக்கு வயது நான்கு. அழகும் கண்டோரைக் கவரும் கவர்ச்சியும் அவரிடமிருந்தன. தனது தந்தையார் கோபாலச் செட்டியாரின் கடையில் இருந்தவேளை, அங்கு கடைத் தெருவுக்கு வந்த கோட்டைக் கம்மாந்தரின் மனைவி அவரைக்கண்டு விருப்புற்று தன் வளர்ப்புப் பிள்ளையாகத் தத்தெடுத்துக் கொள்ள நேர்ந்தது. பதினெட்டு வயது வரை வைத்திலிங்கச் செட்டியார் கோட்டையில் கம்மாந்தரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகையிலும், தனது பெற்ற தந்தைதாயர் வீட்டிலும் மாறி மாறி வாழ்ந்துவந்துள்ளார். தமிழிலும் ஒல்லாந்த மொழியிலும் அவருக்கு நல்ல தேர்ச்சி இருந்தது.

வெளிநாட்டுப்பயணிகள் பலர் யாழ்ப்பாணக் கோட்டைக்குப் பயணிகளாக வந்துள்ளனர். 1710 ஆம் ஆண்டளவில் ஸ்ரெயிகர் (Steiger) என்பவரும், 1744 ஆம் ஆண்டளவில் ஹெயிட் (Hegdt) என்பவரும், 1726 ஆம் ஆண்டளவில் வலென்ரைன் (Valertyn) என்பவரும் கோட்டையைப் பார்வையிட்டு, விபரமாக எழுதியுள்ளதுடன் அக்காலக் கோட்டை பற்றிய ஓவியப்படங்களையும் வரைந்து தந்துள்ளனர். இவர்களது குறிப்புகளிலிருந்து அக்காலக் கோட்டையின் நிலமைகளை அறியமுடிகின்றது.

கோட்டைக்குள்ளிருந்த தேவலாயத்தில் இரு மணிகள் பிணைக்கப்பட்டிருந்தன. தோவலத்தின் உச்சியில் பிணைக்கப்பட்டிருந்த பெரியாலைய மணி ஒலித்து, நகரத்தில் குடியிருந்த பறங்கிகளை ஆராதனைக்கு வருமாறு அழைக்கும். பறங்கித் தெருவில் வாழ்ந்த சீமாட்டிகள் கதிரைப் பல்லக்குகளில் அமர்ந்து, பல்லக்குக் காவிகளால் தூக்கி வரப்படுவர். கதிரைப்பல்லக்குகளின் தாங்கு கம்புகளில் தோள் பதித்து யாழ்ப்பாணத்து அடிமைகள் காவிவந்தனர். தேவாலயத்தில் சீமாட்டிகளை ஆராதனைக்கு இறக்கிவிட்டு வழிபாடு முடியும் வரை வெளியில் கைகட்டிக் காத்திருந்தனர். தேவாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சிறிய காண்டா மணி ஒலித்து கோட்டைக்குள் குடியிருந்த அதிகாரிகளையும், படைவீரர்களையும் வழிபாட்டிற்கு அழைக்கும்.

கோட்டைக்குள்ளிருந்த சிலுவை வடிவத் தேவாலயத்தின் சுவர்கள் நான்கு அல்லது ஐந்து அடிகள் தடிப்பானவை. தரையில் 2 அடிச் சதுரப் பொழிகற்கள் அற்புதமாகப் பதிக்கப்பட்டிருந்தன. பொதுவாக ஒல்லாந்தரின் கட்டிடங்களில் இத்தகைய நில நேர்த்தியைக் காணமுடியும். மேலும் தூண்கள், வளைவுகள், கதவுகளின் சுற்று நிலைகள் என்பன மஞ்சள் நிறமான மெல்லிய செங்கற்களால் அழகுபடுத்தப்பட்டிருந்தன. இவை இறக்குமதி செய்யப்பட்ட செங்கற்களாகவிருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைத் தேவாலயத்தின் தென் பக்கப்பகுதியில், வேலைப்பாடு நிறைந்த சில நினைவுக் கற்பொறிவுகள் காணப் பட்டன. அவற்றில் ஒன்று 1769 இல் இக் கோட்டையின் ஒல்லாந்தக் கம்மாந்தரான பிரெடெரிக் வில்கெம் என்பவனுடையதாகும். தரையில் அவனுடையதும் வேறு பலரினதும் கல்லறைக் கற்கள் காணப்பட்டன. அவற்றில் சில 1666 ஆம் ஆண்டிற்குரியன.

4, நவம்பர், 1679.

கோட்டையின் கம்மாந்தர் தனது குதிரையில் ஏறி கோட்டைக்கு வெளியே உலாச் சென்றிருந்தான். அவனுக்கு முன்னும் பின்னும் அடிமைகளும் வீரர்களும் நடந்து சென்றனர். ஒல்லாந்தச் சீமாட்டிகள் இருவர் குதிரைகளில் அமர்ந்திருக்க, அவற்றோடு பல்லக்கமைப்பில் பொருத்தப்பட்டிருந்த தாங்கு கொம்புகளில் தோள்பதித்து யாழ்ப்பாணத்து அடிமைகள் காவி வந்தனர், அவர்கள் சீதாரி (பறங்கித்தெரு) யிலிருந்து கோட்டைத் தேவாலயத்திற்கு வழிபாட்டிற்காகச் சென்றுகொண்டிருந்தார்கள்.

பிற்பகல் 3 மணி இருக்கும்.

திடீரென காற்று சற்று அடங்கி, பின்னர் விர்ரெனக் கிளம்பியது. எதிர்பாராத விதமாகப் பலத்த காற்று, சூறாவளியாக உருவெடுத்தது. ஆம், யாழ்ப்பாணக் குடா நாட்டைப் பெரும் சூறாவளி ஒன்று தாக்கியது. முற்றவெளியில் குடைந்து, சுழன்று வீசியடித்தக் காற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல், குதிரைப் பல்லக்குகள் இரண்டும் தூக்கியெறியப்பட்டன ஒல்லாந்தச் சீமாட்டிகள் இருவரும் அலமலக்காகச் சரிந்துவிழுந்தனர். குதிரையில் பவனிவந்த கோட்டைக்கம்மாந்தர் நிலத்தில் தள்ளப்பட்டு குப்புற விழுந்தான். அடிமைகள் நிலத்தோடு படுத்துக் கொண்டனர் சூறாவளி தூக்கியெறிந்தமைக்காக, குதிரைப் பல்லக்குக் காவிகள் நால்வருக்கும், திருக்கை வாற் சவுக்கால் அலுகோசுகள் ஆறாறு அடிகள், தசை பிரிய வழங்கினார்கள்.

பண்ணைக்கடலில், கோட்டைக்கு எதிரில் நங்கூரமிட்டிருந்த மரக்கலங்கள் மூன்று ஒன்றுடன் மோதி நொறுங்குண்டன. கடல் நீர் மட்டம் உயர்ந்து கோட்டை அகழிக்குள் வேகமாக புகுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அதனால் தொங்குபாலம் உயர்த்தப்பட்டது. கோட்டைக்குளிருந்த தேவாலயத்தின் பீலி ஓடுகள் இலைச்சருகுகளாகப் பறந்து போயின. பாசறைகளின் கூரைகளும், அதிகாரிகளின் மாளிகைக் கூரைகளும் சிதைந்துபோயின. சூறாவளியின் தாக்கம் மறுநாளும், நவம்பர் 5, 1669, இருந்தது.

*28, செப்ரம்பர், 1795.*

யாழ்ப்பாணக் கோட்டை என்றுமில்லாத பரபரப்பிற்குள்ளாகியது. ஆங்கிலேயரின் படைக்கப்பல்கள் பருத்தித்துறையில் நங்கூரமிட்டு தரையிறங்கி அணி வகுத்துவிட்டன என்ற செய்தி கோட்டைக்குள்ளும் சீதாயிலும் வாழ்ந்த ஒல்லாந்தப் பறங்கிகளுக்குப் பேரிடியாக இறங்கியது. திருக்கோணமலைக் கோட்டையைக் கைப்பற்றிய ஆங்கிலேயப்படை பருத்தித்துறையில் வந்திறங்கியது. ஸ்ருவார்ட் என்பானின் தலைமையில் வந்திறங்கிய படையில் ஒரு பகுதியினர் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டை நோக்கியும், ஒரு பகுதியினர் கப்பல் மூலம் ஊர்காவற்றுறையூடாகக் கடனீரேரிக்குள்ளும் புகுந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டை மீண்டும் முற்றுகைக்குள்ளானது. ஆயிரக்கணக்கான ஆங்கிலேயரின் படை முன்பு, நூற்றுக்கணக்கான ஒல்லாந்தர்படை எம்மட்டு? ஒல்லாந்தர் கோட்டையை ஆங்கிலேயரிடம் யுத்தமின்றியே கையளித்து விட்டு வெளியேற நேர்ந்தது.

கோட்டைக்குள் ஆங்கிலேயர் குடி புகுந்தனர். □ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி: மூன்று

# ஆங்கிலேயர் ஆட்சி

## 1

*27, செப்டம்பர் 1795.*

ஆங்கிலேயக் கேர்னல் பீற்றர் றெயினர்ஸ் ஸ்ருவார்ட் தலைமையில் கப்பற்படைத் திரளொன்று பருத்தித்துறையில் இறங்கியது. வெகு இலகுவாகத் திருகோணமலை பிரடெரிக் கோட்டையையும், மட்டக்களப்புக் கோட்டையையும் கைப்பற்றிக் கொண்ட மகிழ்வோடும், ஆணவத்தோடும் ஸ்ருவார்ட்டின் படை பருத்தித்துறையிலிறங்கி அணிவகுத்து, யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி முன்னேறியது. 28, செப்டம்பர், 1795 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயப் படையால் முற்றுகையிடப்பட்டது. கேர்னல் ஸ்ருவார்ட், கோட்டைக்குள் இருப்போரைச் சரணடையுமாறு செய்தி அனுப்பினான்.

ஒல்லாந்த கம்மாந்தராக அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த கம்மாந்தர் றாசெட் (Raket) என்பவனால் எதுவும் செய்யமுடியவில்லை. சரணடைவதைத் தவிர வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில்லை கிழக்குக் கரையோரக் கோட்டைகள் அனைத்தும் ஆங்கிலேயரிடம் சரணடைந்த நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றுவதென்பது பயனற்றதென றாகெட் எண்ணினான். கோட்டைக்குள் இருந்த 39 ஒல்லாந்தரும், 98 இந்தியச்சிப்பாய்களும் (Sepays) வெள்ளைக் கொடி ஏந்தி வெளி வந்து சரணடைந்தனர்.

அவர்கள் வரிசையாக வெளிவந்தனர். வெளியில் வரும் போது கப்மாந்தர் றாகெட்டிற்கு, அவனது முன்னோன் கொமுசாறி வன் ஹூன்ஸ், சரணடைந்த போர்த்துக்கேயருக்குச் செய்த நடத்தைகள் நினைவு வந்திருக்கும். அனைத்துச் சொத்துக்களையும் பறிமுதல் செய்து, முழு நிர்வாணமாக்கிப் பரிசோதித்து, போர்த்துக்கேயரை வன் ஹூன்ஸ் கப்பலேற்றியனுப்பி வைத்தான். ஆங்கிலேயர் அவ்வாறு செய்யவில்லை ஒல்லாந்தர் தமது ஆயுதங்களை ஸ்ருவார்ட் முன் குவித்தனர். ஒல்லாந்த உயர் இராணுவ அதிகாரிகள் மட்டும் தம் அரை வாள்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டனர் அவர்களது தனிப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்ல ஸ்ருவார்ட் அனுமதித்தான். ஆனால் பொதுச் சொத்துக்கள், துப்பாக்கிகள், களஞ்சியப் பொருட்கள், காகிதங்கள் என்பவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை. சரணடைந்த ஒல்லாந்தர் தம்மைக் கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு கோரியபோதிலும், ஜேர்னல் ஸ்ருவார்ட் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களை யுத்தக் கைதிகளாக இந்தியாவிற்கு அனுப்பி வைத்தான்.

யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயர் வசமாகியது 14, பெப்ரவரி, 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடம் ஒல்லாந்தரின் கொழும்புக் கோட்டையும் சரணடைந்தது சேர்னல் ஜேம்ஸ் ஸ்ருவார்ட், திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களுக்கு கவனராக நியமிக்கப்பட்டான் மக்களது நம்பிக்கையைப் பெறும் நோக்கமாக மதக்கட்டுப்பாட்டை இவன் தளர்த்தி விட்டான். முதற் கட்டமாக, கத்தோலிக்கக் குருமார் தமது சமயப்பணியைத் தொடரலாமெனவும், மக்கள் தாம் விரும்பிய மதத்தை அனுட்டிக்கலாமெனவும் ஸ்ருவார்ட் சட்டத்தைத் தளர்த்தினான். எனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும், வருமானம் ஈட்டுவதற்கு உதவிய எச்சட்டத் தையும் ஆங்கிலேயர் தளர்த்தவில்லை.

யாழ்ப்பாணக் கோட்டை, யாழ்ப்பாண வரி சேகரிப்புப் பிராந்தியத்தின் நிர்வாக மையமாக மாறியது. யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி ஆகிய பகுதிகள் இந்த வரி சேகரிப்புப் பிராந்தியத்திலமைந்தன. சென்னையிலிருந்து வரி சேகரிப்பு உத்தியோகத்தர்கள் இங்கு கொண்டு வரப்பட்டனர். அவர்கள் இந்தியர்கள்; அவர்கள் கோட்டைக்குள் 'கலெக்டர் ஒபிஸ்' ஒன்றைக் கச்சேரி என்ற பெயரில் அமைத்தனர். 'கச்சேரி' என்பது ஹிந்திச் சொல்லாகும். அமில்தார் (வரி வசூலிப்பவர்), கொத்வால் (பொலீஸ்), குமாஸ்தா (லிகிதர்) என்ற பதவிகளைச் சென்னையிலிருந்து இங்கு வந்த உத்தியோகத்தர்களே வகித்தனர். சிப்பாய்களாகப் போர்த்துக்கேயர் படையிலும், ஒல்லாந்தர் படையிலும் கூலிக்கு வேலைபார்த்த இந்தியர்கள், ஆங்கிலேயர் காலத்தில் வரி வசூலிக்கும் உத்தியோகத்தர்களாக யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். மதராசி வரி வசூலிப்போர் தம் எதேச்சாதிகாரப் போக்கில் நடந்து கொண்டதால், பின்னர் இவர்களிடமிருந்து பொறுப்பு மீள எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஆங்கிலேய நிர்வாகிகள் மக்கள் மீது பல்வேறு வரிகளை விதித்தனர். மீன்வரி, உப்பு வரி, சாராய வரி, கள் வரி, தலை வரி எனப் பல வரிகள்; ஒரு கட்டத்தில், 1, செப்டம்பர் 1796 இல், தென்னை வரியையும் விதித்தனர். ஒவ்வொரு தென்னைக்கும் வருடத்திற்கு ஒரு வெள்ளிப்பணம் வரியாகச் செலுத்துமாறு மக்களைக் கேட்டனர். மக்களது எதிர்ப்பால் 1797, மார்ச் மாதத்தில் இந்த வரி நீக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையில் ஆங்கிலேயரின் கொடி பறந்த காலவேளைகளில் நிகழ்ந்த சம்பவங்கள் பலவகையாயினும், அவற்றில் முக்கியமான சிலவற்றை நோக்குவோம். ஆங்கிலேயரின் ஒன்றரை நூற்றாண்டாட்சியில் அடிமைத்தனமாக வாழ்ந்து மக்கள் பழகிவிட்டனர்.

யாழ்ப்பாணத்தின் கோட்டையின் தளபதியாக கேர்னல் பார்பெற் (Barbet) என்பவன் பொறுப்பேற்றான். (1796) ஒல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாந்தரிடமிருந்து கையேற்ற பல தேவாலயங்கள் ஆராதனை யில்லாது கைவிடப்பட்டன. சுண்டுக்குழித் தேவாலயமும் அவற்றில் ஒன்றாகும். இந்தத் தேவாலயத்தை கேர்னல் பார்பெற் தனது ஆட்டுப்பட்டியை அடைப்பதற்கான ஆட்டுக் கொட்டிலாகப் பயன்படுத்தினான் என அறியக்கிடக்கிறது. 1801 ஆம் ஆண்டு, டிசம்பர் 20 ஆம் திகதி வரை கிறிஸ்தியன் தாவீதுப் பாதிரியார் இத் தேவாலயத்தில் ஆராதனை நடாத்தும் வரை இது ஆட்டுக் கொட்டிலாக விளங்கியது.

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை முழுவதற்கும் ஒரு தேசாதிபதி நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். இலங்கை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு அரசாங்க ஏசண்டர் நியமிக்கப்பட்டார். வட மாகாணத்திற்கு முதன்முதல் அரசாங்க ஏசண்டராக நியமிக்கப்பட்டவர் மேற்சொன்ன கேர்னல் பார்பெற் ஆவார். 1801 ஆம் ஆண்டு பதவியேற்ற இவர் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து நிர்வாகத்தைக் கவனித்தார். 1804 ஆம் ஆண்டளவில் கோட்டை மாளிகையை விட்டு வெளியேறி, யாழ்ப்பாண கச்சேரி வளவான பழைய பூங்காவில் தனக்கென வீடு ஒன்றினை அமைத்துக் குடியேறினார். கோட்டை மாளிகையில் அவருக்கு அடுத்த தரத்திலிருந்த மேயர் ஒருவன் குடி புகுந்தான். அந்த வருடமே யாழ்ப்பாணக் கோட்டை தனது முக்கிய நிர்வாக மையம் என்ற அந்தஸ்தை இழந்தது.

1798 ஆம் ஆண்டு கண்டி மன்னன் ராஜசிங்கன் மரணமடைந்தான். அரசுரிமை போட்டி ஏற்பட்டது. கண்ணசாமி என்பவன் விக்கிரம ராஜசிங்கன் என்ற பட்டப் பெயரோடு மன்னனானான். அரசுரிமையாளனான முத்துச்சாமி என்பவன் தனது உறவினருடன் கொழும்புக்குத் தப்பியோடி, ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். ஆங்கிலேயர் முத்துச்சாமியையும் அவனோடு சேர்ந்தவர்களையும் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அனுப்பி அங்கு ஒரு மாளிகையில் தங்க வைத்திருந்துள்ளனர்.

1805 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் சேகரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த 1000 மூடை அரிசி, பெரியகடைக்கு அனுப்பப் பட்டு ஒரு மூடை 10 இறை சாலுக்கு விற்கப்பட்டது.

1806 ஆம் ஆண்டு இலங்கையின் தேசாதிபதியான நோர்த் என்பான் யாழ்ப்பாணத்திற்கு ஒரு சுற்றுப் பயணத்தை மேற் கொண்டு வந்தான்; அவனும் அவனது பரிவாரமும் கோட்டை மாளிகையில் தங்கியிருந்தனர். அவர்கள் சுற்றுப்பயணம் மேற் கொள்ள 14 தண்டிகைகளும், 100 தண்டிகைக் காவிகளும், 100 கூலியாட்களும் தேவைப்பட்டனர்.

1807 ஆம் ஆண்டு இலங்கையின் கவனராகவிருந்த சேர் தோமஸ் மெயிற்லாண்ட் என்பான் பசார்-வரி (Bazzar Tax) என்ற வியாபார வரி ஒன்றினை அறிமுகப்படுத்தினான் யாழ்ப் பாணத்தின் நிர்வாகிகளும் அதனை நடைமுறைப்படுத்தினர். சந்தைகள், கடைகள் என்பனவற்றில் விற்கப்படுகின்ற பொருட் களுக்கும், கொள்முதல் செய்யப்படுகின்ற பொருட்களுக்கும் வரி விதிக்கப்பட்டது தானியங்களுக்கு இரு சத வீத வரியும், ஏனைய பொருட்களுக்கு மூன்று சதவீத வரியும் விதிக்கப்பட்டன. இவை இறையல் (ஒரு சிலிங்குப் 6 பென்சும்), செப்புப்பணம் (1 பெனி), சல்லி, அரைச் சல்லி முதலான நாணயங்களாக வசூலிக்கப்பட்டன.

1816 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராகக் கண்டியில் கலகம் ஏற்பட்டது. அரசுக்கு விரோதமாகப் பலர் கிளர்ச்சி செய் தனர். அவ்வாறு கிளர்ச்சி செய்த உடகபடா நிலாமையையும், சில புத்தகுருமாரையும் கைது செய்த ஆங்கிலேயர், அவர்களை யாழ்ப்பாணக் கோட்டையில் சிறைவைத்தனர். 1817 ஆம் ஆண்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

1864 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டைக்குச் சுப்பிரீம் கோர்ட் நீதியாசரைப் பார்த்துப் பேசிச் செல்வதற்காக மல்லா கம், சாவகச்சேரி ஆகிய இருவிடத்து பொலீஸ் நீதிபதிகள் வந்திருந்தனர். அவர்கள் நீதியரசரைச் சந்தித்து விட்டு, கோச் வண்டியில் மல்லாகம் நோக்கி வரும்போது, அவர்கள் எதிரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை சிவன்கோயிலிருந்து சுவாமி ஊர்வலம் வந்துகொண் டிருந்தார். வீதியில் சனத்திரள் குவிந்து வந்தது. தீப்பந்தங்கள், தீவட்டிகள் ஒளியில் சுவாமி ஊர்வலம நிகழ்ந்தது அந்த ஊர் வலத்தை அலட்சியப்படுத்தியபடி, சனக் கும்பலைப் பிளந்தபடி பொலீஸ் நீதிபதிகள் வந்த கோச்சு வண்டி செல்ல முயன்றது. வண்டியோட்டி சவுக்கினை விசிறிக் குதிரைகளை நடத்த முயன்றபோது, சவுக்கின் முடிச்சுக்கயிறு ஊர்வலம் வந்து கொண்டிருந்த ஒருவரின் திறந்தமேனியில் சுளீரெனப் பட்டது. அவ்வளவு தான் சாரதியும், கோச்சு வண்டியில் அமர்ந்திருந்த ஆங்கிலப் பொலீசு நீதிபதிகளும் கீழே இழுக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டனர். பின்னர் யாழ்மாவட்ட நீதிபதி மோர்பியு தலையிட்டுச் சமாதானம் செய்து வைக்க நேர்ந்தது.

1872 இல் ஆங்கிலேயர் பெரியதொரு 'சேர்ச்சை' பறங்கித் தெருவில் கட்டிக் கொண்டனர். அதன்பின்னர் கோட்டைக்குள் ளிருந்த தேவாலயத்தின் முக்கியத்துவம் குன்றிப்போனது. எனினும், கோட்டைக்குள்ளிருந்த தேவாலயத்தின் மீது ஒல்லாந் தர் எக்காலத்தும் தமதென உரிமை கோரக்கூடாது என்பதற் காக, 1892 இல் கொழும்பிலியங்கிய வூல்வெண்டால் கொன்சிஸ் ரரி (Wolvendal Consistory) யினருக்கு ரூபா ஆறாயிரம் வழங்கி உரிமையை வாங்கிக் கொண்டனர்; அத்துடன் ரூபா எழுபத் தைந்தைச் செலுத்தி அதனுள்ளிருந்த அனைத்துத் தளபாடங் களையும் விலைக்கு வாங்கித் தமதுரிமையாக்கிக் கொண்டனர்.

தேவாலயத்திலிருந்த மிகப் பெரிய மணி ஒன்றை வூல்வெண் டல் கொன்சிஸ்ரரி அன்பளிப்பாக ஆங்கிலேயரிடமிருந்து வாங்கி, அதனை சென் மைக்கேல் சேர்ச்சிற்கு ரூபா இருநூறுக்கு விற்று விட்டது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிதாக உரு வாக்கப்பட்ட தொல் பொருள் ஆய்வுத் திணைக்களம், இத் தேவாலயத்தைப் பாதுகாக்கப்பட்ட தொல் கட்டிடம் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டது. எனினும், யாழ்ப்பாணத்திலி ருந்த புரட்டஸ்தாந்து சமயத்தினரின் மூன்று பிரிவினர், அர சாங்கத்தின் அனுமதியுடன் ஆண்டில் மூன்று நாட்கள் இத் தேவாலயத்தில் வழிபாடு இயற்றி வந்தனர் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் ராணிமாளிகை இரு மாடிக்கட்டிடமாக இருந்தது. பின்னரே ஒரு தளக்கட்டிடமாக ராணி மாளிகை அமைக்கப்பட்டது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கோட்டைக்குள்ளிருந்த 'ராணி மாளிகை' சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளினதும், அரசாங்க அமைச்சர்களினதும் பருவ தங்குமிடமாக விளங்கியது. யாழ்ப்பாணத்திற்கு வருகைதருகின்ற உயரதிகாரிகளும் ராணி மாளிகையில் தங்கிச் சென்றனர். ராணிமாளிகையில் விக்டோரியா மகாராணியின் முழு அளவிலான ஓவியப்படம் மாட்டப்பட்டிருந்தது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் சுப்பிரீம் கோர்ட் நீதிபதிகள் ராணி மாளிகையில் தங்கத்தொடங்கினர். அவர்களால் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை பெற்ற குற்றவாளிகள் யாழ்ப்பாணக் கோட்டையின் தூக்குமேடையில் தூக்கிலிடப்பட்டனர் அதற்கென யாழ்ப்பாணக் கோட்டையின் கிழக்குப்பகுதியில் உயர்பீடக் கொத்தளத்தில் தூக்குமாட்டும் கோபுரம் அமைக்கப்பட்டது நான்கு தூண்களும் கூரையும் கொண்ட அக்கோபுரத்தின் உச்சியில் பிணைக்கப்பட்ட வளையத்திலிருந்து தூக்குக்கயிறு தொங்கும். கீழே கால்கள் நிற்குமிடத்தில் தட்டுப் பலகை இடப்பட்டிருந்தது. தூக்கில் மாட்டுகின்ற தண்டனைகளை ஆங்கிலேயர் காலத்தில் ''அலுகோசுகள்'' எனப்பட்டவர்களே செய்தனர். ஒல்லாந்தர் காலத்தில் அலுகோசுகளாக இருந்தவர்கள் ஆபிரிக்கக் காப்பிரியர்களாவர். ஆங்கிலேயர் காலத்தில் அவ்வேலைகளைச் செய்வதற்கு நன்கு குடித்துச் சுய அறிவை இழக்கும் சுதேசிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்தத் தூக்கு மண்டபத்தை முற்றவெளியில் நின்று பார்க்கலாம். மக்கள் குழுமி நின்று பார்க்கத்தக்கதாகவே குற்றவாளிகளுக்கான தூக்குத் தண்டனையை அலுகோசுகள் நிறைவேற்றினர். நீதிபதிகளால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கோட்டையின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

ஒல்லாந்தரின் படை வீரர்கள் தங்கிய பாசறை வீடுகளை ஆங்கிலேயர் சிறைச்சாலைக்கான கட்டிடங்களாக மாற்றியமைத்தனர். அவற்றின் வலதுபக்கச் சுவரில் 'கடவுளே அதியுயர் நீதிபதி' (God is the Supreme Judge) என்ற வாக்கியங்களைப் பொறித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டையின் ஆங்கிலேயக் கமாண்டர் காற்றுவாங்குவதற் காகக் கோட்டைக்கு வெளியே உலா வருவான். ஒற்றைக் குதிரை பூட்டிய 'றிக்சோ' போன்ற 'கோச்' வண்டியிலேறிப் பவனி வருவான். அவன் பின்னால் கொடி தாங்கிய சிங்களவர் கள் சிலர் வர, அவன் வண்டியின் முன்னால் மேளங்களை இத மாக முழக்கியவாறு தமிழர்கள் சிலர் நடப்பார்கள். கோச் வண்டியின் இருபுறமும் துப்பாக்கி ஏந்தி குதிரை வீரர்கள் வரு வார்கள். படாடோபமாகவும் வெகு அமர்க்களமாகவும் கோட் டையின் கமாண்டர் வாழ்ந்தான்.

29, ஜூன், 1887.

யாழ்ப்பாணக் கோட்டை வெகு உற்சாகமாக விளங்கியது. கோட்டை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்து கோட்டையைச் சுற் றியுள்ள முற்றவெளியில் அன்று பிற்பகல் மக்கள் நிரம்பி வழிந் தனர் கோட்டை முனியப்பர்கோயிலுக்குச் சமீபமாக இடப் பட்டிருந்த பாரிய அலங்காரப் பந்தரிலே அரசாங்க ஏசண்டர் துவைனம், தனது பரிவாரங்களுடன் அமர்ந்திருந்தார்.

ஆம். அன்று பிரித்தானிய மகாராணி விக்டோரியாவின் ஐம்பதாவது வருட மகுடோற்சவக் கொண்டாட்டத்தை கொண் டாடிக் கொண்டிருந்தார்கள். அன்றிரவு ஏழரை மணிக்கு வாண விளையாட்டு நிகழவிருந்தது இங்கிலாந்திலிருந்தும் கொழும்பிலி ருந்தும் கொண்டு வரப்பட்ட வாணங்கள் (பட்டாசுகள்)வேடிக்கை காட்டவிருந்தன. முற்றவெளி கொள்ளாதபடி சனத்திரள் குவிந்து நின்றது.

வாணவிளையாட்டுஆரம்பமானது. பந்தரில் பலவகை வாண ங்கள் குவிந்திருந்தன, வாணங்கள் வெடித்தன. ஆகாயத்தைக் கிறிக்கொண்டு கிளம்பிப் பூப்பூவாகச் சிந்தின. திடீரென சீமை வாணமென்று வழிதவறி அலங்காரப்பந்தரின் வாணக்குவியலுட் புகுந்தது. பீரங்கியேன வெடித்தது. அருகில் நின்ற சிலர் பலி யாகினர். எங்கும் கூச்சல். மக்கள் திக்குத்திசை தெரியாது பாய்ந்தோடினார்கள். கூச்சல், கூக்குரல் முற்றவெளியெங்கும் நிறைந்தது. பொலீஸ் அதிகாரி றட்துரைக்கு அருகில் நின்றிருந்த சார்ஜன் சுப்பையாா மகனும் கடுங்காயமுற்று விழுந்தார். அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்க ஏசண்டர் துவைனமும் பொலிஸ் அதிகாரி றட்டும் வேக மாகப் பாதுகாப்புத்தேடி ஓடிப்போய் திரும்பி வந்தபோது, நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்திருந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

1897 ஆம் ஆண்டு அதேயிடத்தில் விக்டோரியா மகாராணி யின் அறுபதாவது ஆட்சி நிறைவு (வைச்சிரயூபிலி) கொண்டாடப் பட்டது. ஆனால், அவ்வேளை வடபுாகாண அரசாங்க ஏசண்ட ராகவிருந்த ஹோர்ஸ்பறோ வாணவேடிக்கைக்கு அனுமதியளிக்க வில்லை.

1940 ஆம் ஆண்டு வரை கோட்டையின் அரண்சுவர்களில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கிகள் நீக்கப்படாதிருந்தன. பின்னர் அவை அவ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட பீரங்கிகளும், பீரங்கிக் குண்டுகளும் காலகதியில் உருக்கப் பட்டன.

## 04, பெப்ரவரி, 1948.

ஆங்கிலேயரின் கொடி இலங்கை எங்கனும் இறக்கப்பட்டது. அவ்விடத்தில் ஸ்ரீலங்காவின் ஆதிக்கக் கொடி உயர்த்தப்பட்டது. தெளிவாகப் பிரிந்திருந்த தமிழரசையும், சிங்கள அரசையும் ஒன்றாகி பேரினவாதிகளின் கைகளில் தூக்கி வழங்கிவிட்டு, ஆங்கிலேயர் விருப்பின்றி விலகிச் சென்றனர். □ □ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி: நான்கு

# ஈழயுத்தம் — 1

## 1

*04, பெப்ரவரி, 1948.*

இலங்கையைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திய ஆங்கிலேயர், சிங்களப் பேரினவாதிகளிடம் கையளித்துவிட்டு அகன்றனர். அன்றிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அவிழ்த்துவிடப்பட்டன. 1948 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவழித் தமிழரின் பிரசாவுரிமை பறிக்கப்பட்டது. 1949 இல் அகில இலங்கைக் காங்கிரசிலிருந்து விலகிய, எஸ் ஜே வி. செல்வநாயகம் சமஷ்டிக் கட்சியைத் தொடக்கினார். 1951 இல் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிய எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டிரநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடன் ஆரம்பித்தார். 1952 இல் பிரதமர் டி. எஸ். சேனனாயக்க இறக்க, டட்லி சேனனாயக்க பிரதமரானார். 1953 இல் டட்லி சேனனாயக்க அரசியல் நெருக்கடி காரணமாகத் தனது பதவியை ராஜினாமா செய்ய, சேர். ஜோன் கொத்தலாவல பிரதமரானார். அவர் பிரதமரான. அடுத்த வருடமே (1954) யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகை தந்தார் கொக்குவிலில் நிகழ்ந்த கூட்டத்தில் ''சிங்கள மும் தமிழும் அரசமொழிகளாகும். தமிழுக்கு சம அந்தஸ்து'' என்று வாக்குறுதியளித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டை இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது. அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பொலீசாரின் விடுதிகளும் சிறைசாலையும் இயங்கிவந்தன. அரச விருந்தினர், உயர் அதிகாரிகள் வந்து தங்கும் மாளிகையாக 'குயின்ஸ் ஹவுஸ்' விளங்கியது. வேறெவ்வித முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் யாழ்ப்பாணக் கோட்டை ஆட்படவில்லை.

சேர். ஜோன் கொத்தலாவலவின் வாக்குறுதிக்கு மாறாக, SWRD பாண்டாரநாயக்க 'சிங்களமட்டும்' என்ற இனவாதக் கொள்கையை ஆட்சியைக் கைப்பற்றும் துரும்பாகப் பிடித்துக் கொண்டார். சேர். ஜோன் கொத்தலாவல கொக்குவில் வாக்குறுதியைக் கைகழுவியும், பண்டாரநாயக்கவை ஆட்சிக்கு வராது தடுத்துவிடமுடியவில்லை. 1956 இல் பண்டாரநாயக்க பிரதம மந்திரியாகப் பதவியேற்று, இருபத்திநான்கு மணி நேரத்துள் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை காலிமுகத்திடலில் சத்தியாக்கிரம் செய்த தமிழரின் இரத்தத்தின் சாட்சியத்தில் நிறைவேற்றினார் அதன் பயனாக தமிழருக்கு எதிரான வகுப்புவாதக் கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

1957 இல் 'பண்டாரநாயக்க — செல்வநாயகம்' ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதனை எதிர்த்து ஜே. ஆர். ஜயவர்த்தன கண்டிக்குப் பாதயாத்திரை நடாத்தினார். அதே வேளை பண்டாரநாயக்க ஆட்சியில் சுகாதார அமைச்சரர்கவிருந்த விமலா விஜயவர்த்தன, பௌத்த பிக்குகளோடு பிரதமரின் இல்லத்திற்கு ஊர்வலம் சென்று, அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியவைத்தார். 1958 இல் இலங்கையின் முன்னெப்போதுமில்லாத விதமாகத் தமிழருக்கு எதிரான வகுப்புவாதக் கலவரம் வெடித்தது. எல்லாமாகச் சேர்த்து திரண்டு 1959 இல் பண்டாரநாயக்க தான் உருவாக்கிய வன்முறைக் கலாசாரத்திற்கே பலியாகினார். பிரதமர் தனது இல்லத்தில் வைத்து பிக்கு ஒருவனால் சுடப்பட்டு இறந்தார். 1960 இல் இலங்கையின் முதலாவது விதவைப் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியிலேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு வரலாற்று நிகழ்ச்சிகளையும் யாழ்ப்பாணக் கோட்டை உள்வாங்கி நிமிர்ந்து மோனத்தில் நின்றது. அதன் அமைதியையும் யாழ்ப்பாண மக்களது நிம்மதியையும் குலைக்கின்ற நிகழ்ச்சி 1961 ஆம் ஆண்டு நிகழ்ந்தேறியது.

20, பெப்ரவரி, 196..

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டக் கச்சேரிகளின் முன் குழுமி நிர்வாகம் நடைபெறாது தடுத்து, சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். தமிழ்ப் பிரதேசத்தின் மக்களனைவரும் உணர்வு பூர்வமாக இதில் கலந்து கொண்டனர். தமிழ் மக்களின் சுய அரசாட்சியை வலியுறுத்தும் குறியீடாக தமிழரசு தபாற் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இச் சத்தியாக்கிரகம் 18, ஏப்பிரல் 1961 வரை பெரும் இயக்கமாக நிகழ்ந்தது. இதனை முறியடிப்பதற்காக இராணுவம் முதன் முதலாக வடக்கே அனுப்பப்பட்டு நிலை கொண்டது.

01, மார்ச், 1961 ஆம் திகதி, பலாலி விமான நிலையத்தில் ஸ்ரீலங்கா இராணுவ வீரர்கள் இறக்கப்பட்டனர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசு இரத்மலான விமானத் தளத்திலிருந்து இராணுவவீரர்களை அனுப்பிவைத்திருந்தது கடற்படைக் கப்ரின் ராஜன் கதிர்காமர் தலைமையிலும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் வன்டென்பேர்க் தலைமையிலும் கடற்படையினரும் பொலிசாரும் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டனர்

02, மார்ச், 1961 அதிகாலை, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மெயில் ரெயிலில் கேர்னல் உடுகம தலைமையில் இன்னொரு தொகுதி இராணுவம் வந்து இறங்கியது. இவர்கள் உடனடியாக யாழ்ப்பாணக் கோட்டைக்கு வந்து தங்கினர்.

17, ஏப்பிரல், 1961 காலை வேளையில் 350 இராணுவ வீரர்களையும், 15 இராணுவ அதிகாரிகளையும் சுமந்தபடி ஒரு விசேஷ புகையிரதம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. இவர்களோடு கோட்டையில் ஏறத்தாழ 600 இராணுவ வீரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்துவிட்டனர். 18, ஏப்பிரல் அதிகாலை சத்தியாக்கிரகிகள் அடித்து, உதைத்து, தாக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். அன்றிலிருந்து இரு நாட்கள் ஊரடங்குச் சட்டம் பிரகடணப் பட்டு, யாழ்ப்பாணப் பொதுமக்கள் பலர் தாக்கப்பட்டனர். சமஷ்டிக் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதிகளும், முக்கிய ஆதர வாளர்களும் இரவோடிரவாகக் கைது செய்யப்பட்டு, ஆறுமாதங் கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

அன்று யாழ்ப்பாணக் கோட்டைக்கு வந்த ஸ்ரீ லங்கா இரா ணுவம் பின்னர் தொடர்ந்து அங்கு அடிக்கடி முகாமிட்டுக் கொண்டது. சுதந்திர உணர்வு கொண்ட தமிழ் மக்களை என் றும் அடக்கிவைத்திருப்பதற்கு நிரந்தர இராணுவ முகாம்கள் அவசியமானவை எனச் சிங்கள அரசு கருதத்தொடங்கியது.

1962 ஆம் ஆண்டு அரசுக்கு எதிராக இராணுவ - பொலிஸ் சதி ஒன்று நிகழவிருந்தது. அச்சதி அம்பலமாகியதால், கைது செய்யப்பட்டவர்களில் ஒருசிலர் யாழ்ப்பாணக் கோட்டை மறியற் சாலையில் சிறைவைக்கப்பட்டனர்.

## 2

05. ஏப்பிரல், 1971.

நள்ளிரவு 11.30 மணி.

யாழ்ப்பாண நகரம் நல்ல உறக்கத்தின் தழுவலில் ஆழ்ந் திருந்த வேளையில். யாழ்ப்பாணம் கோட்டைப்பக்கம் இருந்து துப்பாக்கிகளிலிருந்து விடுபட்ட சன்னங்கள் வெடித்துச்சிதறு கின்ற சத்தம் எழுந்தது. அமைதியான யாழ்ப்பாணத்தின் மோனத்தூக்கத்தை அத்துப்பாக்கி வெடிச்சத்தம் சிதைத்தது ஆங் கிலேயர் காலத்திற்குப் பின்னர் அப்படியான தொடர்ச்சியான துப்பாக்கி வெடிச்சத்தத்தை யாழ்ப்பாணம் கேட்டதில்லை. சுதந்திரமடைந்தபின்னர் அது தான் முதன் முதல் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்ட துப்பாக்கிச் சத்தம். அது தான் முதன் முதல் யாழ்ப் பாணத்துமக்களின் நித்திரையைக் குழப்பிய துப்பாக்கிச்சத்தம்.

அதன் பின்னர் யாழ்ப்பாண மண்ணில் இன்னமும் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் ஓயவில்லை. நித்திரைக்கு ஒரு தாலாட்டு மாதிரி துப்பாக்கிவெடிச்சத்தம் அவசியம் போலாகிவிட்டது இன்று.

ஆம். யாழ்ப்பாணக்கோட்டைச் சிறைச்சாலையில் சிறை பட்டிருக்கும் தங்கள் இயக்கத்தின் மாபெருந்தலைவன் றோசன விஜயவீரவை, மீட்டுச்செல்வதற்காக தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்த ஜனதா எக்சத் பெரமுன என்ற ஜே. வி பி இயக் கத்தினரின் மீட்புத் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது. யாழ்ப் பாணம் பொலீஸ் நிலையத்தையும் யாழ்ப்பாணக் கோட்டைக் குள் புகுந்து சிறைச்சாலையும் ஜே வி பி. இயக்கத்தினர் முற் றுகையிட்டுத் தாக்கினர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் எந்நேரமும் சர்வசாதாரணமாக உட்சென்று வரலாம். மாலைவேளைகளில் நேரம் கிடைத்தால் கோட்டை உள் மைதானத்தில் விளையாடி விட்டும் வரலாம். ஆக சிறைச்சாலைப் பகுதியில் மட்டும் ஜெயி லர்கள் காவலிருப்பார்கள்.

இலங்கைச் சுதந்திரத்தின்பின் முதன் முதல் யாழ்ப்பாணக் கோட்டைத்தாக்குதல் நடந்தது ஏன்? எதற்கு?

ஸ்ரீ லங்காவில் முதலாளித்துவ ஆட்சியாளருக்கு எதிராக ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி மக்களாட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் கெரில்லா யுத்தத்தை ஜே.வி.பி. எக்சத் பெரமுன இளைஞர்களைச் சேர்த்து நடாத்தியது. அதன் தலைவர் றோசன விஜயவீரவின் கோட்பாடு மிகத் தெளிவானது இலகுவானது. ''எந்த ஒரு புரட்சியும் பாட்டாளிகளினால் ஆயுதம் எடுக்காமல் வெற்றியடைந்ததில்லை. ஆயுதப்போராட்டத்தில் முதலாளித் துவ வர்க்கம் அதிகாரத்தைச் சமாதானமாகக் கையளித்து மில்லை. அரச யந்திரங்கள் தாக்கப்படவேண்டும்.''

1971 இல் நாடாளாவிய புரட்சியொன்றினை தோற்று விக்க றோகன விஜயவீர முயன்றார் ஆனால், அதற்கு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13, மார்ச், 1971 இல் அம்பாறையில் வைத்துப் பொலீசா ரால் கைது செய்யப்பட்டார். அவருடன் அவரியக்கத்தைச் சேர்ந்த லால் சோமஸ்ரீ, பிரேமரத்ன, நிசங்க விஜயரத்ன, ஹெஸ்ஸி சேனனாயக்க ஆகியோரும் கைதாகினர். அவர்கள் முத லில் மட்டக்களப்புச்சிறையில் வைக்கப்பட்டனர். பின்னர் கொழும்பு மகசின் சிறையிலும் கொழும்பு றிமான்ட் சிறையி லும் வைக்கப்பட்டனர் அங்கு இவர்களை வைத்திருப்பதில் பாதுகாப்புக் கஷ்டங்கள் இருப்பதை அறிந்து, 14, மார்ச், இராணுவ வாகனங்களில் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச் சாலைக்கு இடம்மாற்றப்பட்டனர். அன்றே நாடு முழுவதும் அவசர காலநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. வெகு இர கசியமாக இது நடந்தாலும் சிறை இடமாற்றம் வெளியில் தெரிய வந்தது. 18 ஆம் திகதி றோகன விஜயவீரவின் தாயார் மகனைப்பார்த்துச்செல்ல, யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைக்கு வந்தார். 20 ஆந்திகதி எஸ் டி பண்டாரநாயக்கவும் மாத்தயா வும் (இது வேறு மாத்தயா. இவரின் பெயர் உயன்கொட) காரில் யாழ்பபாணம் வந்தனர். அவர்களால் கோட்டை சிறை யில் இருந்த விஜயவீரவைப் பார்க்க முடியவில்லை. அனுமதி கிடைக்கவில்லை. எஸ் டி பண்டாரநாயக்க, ஸ்ரீ லங்கா சுதந் திரக்கட்சியின் ஆரம்ப கால அங்கத்தவராக இருந்தவர். கம்பகாப் பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் விளங்கியவர். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டதும், பீக்கிங் கம்யூனிசக்கட்சி அங்கத்தவரானார். பின்னர் ஜே வி. பி. ஆதரவாளரானார்.

21, மார்ச் 1971 யாழ்ப்புாணக் கோட்டைச் சிறைச்சாலை யிலிருந்து, விஜயவீரவும் அவருடன் லால் சோம ஸ்ரீ, பிரேமரத்ன ஆகியோரும் கல்முனை நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லப் பட்டனர். நீதிமன்றத்து அடைப்புக்கூட்டினுள் இருக்கும்போது, விஜயவீர மற்றைய இருவருக்கும் தெளிவாக ஒரு தாக்குதலிற் கான விளக்கத்தைக் கொடுத்தார். 'என்னைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்கு 500 ஜே வி.பி. போராளிகள் யாழ்ப்பாணம் வர வேண்டும். சிறையைத் திட்டமிட்டு உடைத்து என்னை உடன் விடுவிக்க வேண்டும். அவ்வாறு வருபவர்களுடன் லால் சோம ஸ்ரீ அல்லது பிரேமரத்ன கூட வந்து நான் இருக்கும் சிறை அறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் காட்ட வேண்டும். இதனை இன்று ஜே.வி.பி.யின் அடுத்த தலைவர்களான சனத் என்பவரிடம் அல்லது பியதிலகவிடம் கூறுக' என விஜயவீர தகவல் அனுப்பினார். கல்முனை நீதி மன்றத்தில் சோம ஸ்ரீயும் பிரேமரத்னவும் எதிர்பார்த்தது மாதிரி விடுதலையாகினர். விஜயவீர மீண்டும் கோட்டைச்சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்.

விஜயவீரவின் தகவல் உரியவர்களிடம் சேர்க்கப்பட்டது. திட்டம் வகுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்குச் சிலர் அனுப்பப் பட்டனர்.

28 ஆந்திகதி எஸ். டி. பண்டாரநாயக்க கொழும்பிலிருந்து தொலைபேசிமூலம், யாழ்ப்பாணத்திலிருக்கும் தன் நண்பர் பாஸ்கரன் என்பவரை அழைத்தார். காலை யாழ்தேவியில் யாழ்ப்பாணம் வருவதாகவும் புகையிரதநிலையத்தில் சந்திக்கு மாறும் தகவல் கொடுத்தார். பாஸ்கரன் அவரை யாழ்ப் பாணப் புகையிரதநிலையத்தில் சந்தித்தார். பண்டாரநாயக்க வுடன் மஞ்சு என்பவரும் வந்திருந்தார். பாஸ்கரனின் காரில் ஏறி அவரின் வீடுசென்றனர். சுன்னாகத்தைச் சேர்ந்த நாகரத் தினம் என்பவரையும் சந்தித்தனர். மறுநாள் யாழ்ப்பாணக்கோட் டைச்சிறைச்சாலைக்குச் சென்று விஜயவீரவைச் சந்திக்க முயன் றனர். அனுமதி வழங்கப்படவில்லை. அதனால் பண்டாரநாயக்க கொழும்பு திரும்பிச்செல்ல நேர்ந்தது. ஏப்பிரல் 1 ஆந்திகதி மாத்தயா, யாழ்ப்பாணத்திற்கு வந்த காரை நகருக்குச்சென்று, திலகரத்ன என்ற கடற்படைவீரனைச் சந்தித்தார். கடற்படை வீரர்களில் சிலர் விஜயவீரவை விடுவிக்க உதவுவதாகக் கூறினர். ஏப்பிரல் 3 ஆந்திகதி, மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்த மஞ்சு, பாஸ்கரனைச் சந்தித்து தனக்கு கொஞ்சம் டைனமயிற் வெடி குண்டுகள் செய்யத் தேவை எனக் கேட்டார். அவரைப் பாஸ் கரன், வேலாயுதம் என்பவரிடன் அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தி வைத்தார். மஞ்சு கேட்ட டைனமயிற் கிடைக்கவில்லை. அவர் கொழும்புக்குத் திரும்பிச்சென்றார்.

விஜயவீரவைச் சிறையுடைத்து விடுவிப்பதற்காக யாழ்ப்பா ணத்தில் நிலைகொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நடந் தேறின. ஏப்பிரல் 5 ஆந்திகதி யாழ்ப்பாணக்கோட்டைச் சிறைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை தாக்குவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஏப்பிரல் 5 ஆந்திகதி, அதிகாலை கொழும்பிலிருந்து வித்தியோதய மாணவர்கள், ஆயுதங்களை மறைவாக்கியபடி, ஈபேட் சில்வா கம்பனியாரின் பஸ் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். 250 கைக்குண்டுகள் யாழ்தேவி வழி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. இந்தத் தாக்குதல் அணிக்குத் தலைமை தாங்கி லால் சோம ஸ்ரீ வந்தார். இன்னொரு பிரிவினர், பியதிலக தலைமையில், 100 பேர் கொண்ட குழுவாக பஸ்ஸில் வந்தனர். அவர்களால் புளியங்குளத்திற்கு இப்பால் வரமுடியாது போனது. பியதிலகாவின் தலைமையில் வந்த குழுவினர் புளியங்குளத்தில் தரித்துநிற்கின்ற சங்கதி, முதலில் யாழ்ப்பாணம் வந்தவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவர்கள் திட்டமிட்டபடி சரியாக நள்ளிரவு 11-30 மணிக்கு யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தையும் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையையும் தாக்கத்தொடங்கினர். கோட்டைக்குள் புகுந்த அவர்கள் சிறைச்சாலையை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் சிறைக்காவலர்கள் பதுங்கிக்கொண்டனர். விஜயவீரவின் சிறை அறைக்குக் காவலிருந்த ஜெயில்கார்ட் அப்புக்குட்டி இரத்தினம், பெண்கள் சிறைச்சாலைக்கு அருகிலிருந்த படிகளினூடாகக் கோட்டை மதிலிற்குப் போராளிகள் ஏறுவதைக் கண்டார். அவ்வாறு ஏறிச்செல்லும்போது ஒரு கைக்குண்டினைப் பெண்கள் சிறைச்சாலைக் கூரைமீது வேணுமென்றோ, தற்செயலாகவோ போட்டார்கள். அது கூரையைப் பிய்த்துக்கொண்டு விழுந்து பெண் வார்டர் செல்லம்மா என்பவரின் வலது காலைத் துண்டித்தது. இவரே முதன் முதல் வெடிகுண்டிற்குக் காலைக் காவுகொடுத்த யாழ்ப்பாணப் பெண். யாழ்ப்பாணப் பொலீசாரின் தாக்குதல் உக்கிரமாகவிருந்தது. லால் சோம ஸ்ரீ எதிர்பார்த்தமாதிரி, பியதிலகா குழுவினர் உதவிக்கு வரவில்லை. போராளிகள் பலர் காயமுற்றனர். கையிருப்பில் உள்ள சன்னங்களும் குண்டுகளும் முடிந்துவந்தன. யாழ்ப்பாணப் பொலீசார் எதிர்ப்பினை முறியடித்தபடி கோட்டைக்குள் பிரவேசித்தனர். அதனால் பின்வாங்கும்படி நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வாங்கி எங்கு ஓடுவது? எப்படி ஓடுவது?தென்னிலங்கையி லிருந்து வந்த யாழ்ப்பாணம் எப்படிப்பட்டது என்பதை அறியாத பல்கலைக்கழக மாணவர்களுக்கு வலம் இடம் தெரியவில்லை. மத்தியானம் போல யாழ்ப்பாணத்திற்கு வந்து இரவு தாக்கு தலைத் தொடக்கினால் அவர்கள் எங்கு எப்படி ஓடுவது? லால் சோம ஸ்ரீ மட்டும் தப்பி யாழ்ப்பாண நகரத்திற்கு ஓடி வர முடிந்தது. அவரும் அன்று அதிகாலையே கைது செய்யப்பட் டார். ஊர்காவற்றுறை ஹமன் ஹீல் கடற்கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்.

றோகண விஜயவீரவின் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறையு டைப்புமுயற்சி தோல்வியில் முடிநதது. இச்சிறையுடைப்பு முயற்சி சம்பந்தமாகப் பின்னர் பலர் கைதாகினர். யாழ்ப்பாணத்தில் பாஸ்கரன், நாகரத்தினம் ஆகியோர் கைதாகிப் பின்னர் விடு தலையாகினர்.

வடமாகாணப் பொலீஸ் மாஅதிபர் பின்னர் "ஒரு இயக்கத் தின் தலைவர் கைதாகி யாழ்ப்பாணம் கோட்டைச்சிறைச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார். தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் அவ ரைச் சிறையிலிருந்து தப்பவைக்க முயன்றனர். அவர்கள் தென் னிலங்கையிலிருந்து விசேஷ பஸ்களில் வந்திருந்தனர். அவர் களின் முயற்சி தோல்வி கண்டதற்குக் காரணம் அவர்களின் திடசங்கற்பமின்மைக்குறை மட்டுமன்று; உரிய நேரத்தில் அவர்களுக்கு உதவிகள் வந்து சேராமையுமாகும்" எனக் குறிப் பிட்டார்.

## 3

10, ஜூன். 1972.

காசி ஆனந்தனின் கைதோடு யாழ்ப்பாணக் கோட்டையின் ராணி மாளிகை, பொலீசாரின் விசாரணைத் தளமாகவும், சித் திரவதைக் களமாகவும் மாறத் தொடங்கியது. 1972 ஆம ஆண்டின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை எதிர்த்து தமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர் ஐக்கிய முன்னணி ஹர்த்தால் அனுட்டிக்குமாறு கோரியது. 24, மே, 1972 ஆம் திகதியன்று முற்றவெளியில் கூட்டணித் தலைவர் செல்வநாயகம் தலைமையில் மாபெரும் எதிர்ப்புக் கூட்டமொன்று நடந்தேறியது. அதில் கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கம், ''தமிழரும் படைக்கலம் ஏந்தும் நாள் வரும். ஆதலால், வெளிநாடுகளிலுள்ள குறித்த சில நிறுவனங்களுடன் அவர்கள் நட்புறவு வைத்துக் கொள்ளல் மிக அவசியமாகும்'' எனக் குறிப்பிட்டார். காசி. ஆனந்தன், ''புதிய அரசியலமைப் புச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஆறு தமிழ்ப் பிரதி நிதிகளும் சுகவீனத்தினாலோ, விபத்தினாலோ, இயற்கைக் காரணிகளினாலோ இறக்க மாட்டார்கள். ஆனால் ஏனையோ பிறவழிகளில் அவர்களுக்கு மரணம் சம்பவிக்கும்'' என உணர்ச்சியோடு குறிப்பிட்டார். அவ்வுரை நிகழ்த்தியதன் பின்னர் ஜூன் 10 ஆந்திகதி காசி ஆனாந்தன் கைது செய்யப் பட்டார்.

அரசாங்க சார்புடைய தமிழ் அரசியல் வாதிகளுக்கு எதி ரான நடடிக்கைகள், தீவிரவாதத் தமிழ் இளைஞர் குழுவொன் றால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நல்லூர் கிராமசபைத் தலை வரான குமாரகுலசிங்கம், வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. தியாகராஜா ஆகியோர் மீது துப்பாக்கிப் பிர யோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை முறையே 1972 ஜூன் 04 ஆந்திகதியும், 07 ஆம் திகதியும் நிகழ்ந்தன. 15, ஜனவரி, 1973 ஆம் திகதி அமைச்சர் குமாரசூரியர் வேலணை யில் ஒருதபாற்கந்தோரைத் திறந்து வைக்கச் சென்றார். அவர் செல்லும் பாதையிலுள்ள மதகு ஒன்றினைத் தகர்ப்பதற் கென டைனமைற்றுகளுடன் நின்ற ஞானசேகரன் (ரஞ்சன்), தாசன், திரைவீரசிங்கம் ஆகிய மூவர் கைதாகினர்.

இவை அனைத்துக்கும் அறிவுரை வழங்குபவராக மாணவர் பேரவைத் தலைவர் சத்தியசீலன் பொலிசாரால் சந்தேகிக்கப் பட்டார். பல்கலைக்கழகத் தரப்படுத்தலிற்கு எதிரான மாணவர் பேராவைக்குச் பி. சத்தியசீலன் தலைவராக விளங்கினர். அவர் தொழிலற்ற ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகவுமிருந்தார். 23, பெப்ரவரி, 1973 ஆம் திகதி பொலிஸ் சார்யன்ட் பேரம்பலத் தினால் கைதுசெய்யப்பட்டு, கோட்டை ராணிமாளிகைக்கு விசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணைக்காகக் கொண்டுவரப்பட்டார். அங்கு வைத்து ஏ.எஸ் பி, பி டபிள்யூ த.சில்வாவினால் விசாரிக்கப்பட்டார். நீண்ட காலத்தின் பின்னர் ராணி மாளிகையில் அவல ஓலம் ஒலிக்கத் தொடங்கியது சத்தியசிலன் ஆரம்ப விசாரணையின் பின்னர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சத்தியசீலனின் வாக்குமூலத்தின் விளைவாக ஏறத்தாழ நாற்பது இளைஞர்கள் தொடர்ந்து கைதாகினர்.

கொண்டலடி வைரவர் கோவில் மடைப்பள்ளியில் கூடி, வரவேற்புக் கூட்டமொன்றில் கலந்துகொள்ளவிருந்த அமைச்சர் குமாரசூரியர் மீது கைக்குண்டு வீசுவதற்காகச் சதியாலோசனை செய்தமைக்காகவும், கைக்குண்டு தயாரித்தமைக்காகவும் இளைஞர் சிலர் கைதுசெய்யப்பட்டு கோட்டையின் பங்களாவிற்குக் கொண்டுவரப்பட்டனர். மாவை சேனாதிராசா, சோதிலிங்கம், மதியாபரணம், சிவராஜா, ராஜகுலசூரியர், குவேந்திரராஜா ஆகிய இளைஞர்கள் கைதாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். வரலாற்றுக்காலத்திலிருந்து சித்திரவதைக்குப் புகழ்பெற்ற கோட்டையின் மேல் பங்களாவில் இந்த இளைஞர்கள் ஏ. எஸ். பி. சில்வா, இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை, பொலீஸ் சார்ஜன்ட் பேரம்பலம், சப் இன்ஸ்பெக்டர் விக்கினேஸ்வராஜா முதலானோரால விசாரிக்கபபட்டனர்.

முறிகண்டியிலுள்ள உயர் அழுத்த மின்கோபுரத்தைச் சரித்து விழுத்துவதன் மூலம் 22, மே, 1972 ஆம் திகதி துக்க தினத்தை யாழ்ப்பாணககுடாநாடு முழுவதையும இருளில மூழ்கடித்துக் கொண்டாடச் சதி செய்தமைக்காக இன்னொரு கூட்டம் இளைஞர்கள் கைதாகினர். ஆனந்தவிநாயகம், அமரசிங்கம், ஜெயம், சுப்பிரமணியம் (மணியம்), இராசலிங்கம் ஆகிய ஐவரும் கைதாகி, குயின் ஹவுசில் வைத்து இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையால் தனித்தனி விசாரிக்கப்பட்டனர்.

அரசாங்க ஆதரவாளர்களாக இருந்தவர்களின் வீடுகளுக்குக் கைக்குண்டு வீசினார்கள் என்பதற்காகச் சூரியகுமாரன், பெரியதம்பி, கனகரத்தினம், நித்தியானந்தன், கிருபைநாதன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். நல்லூர் கிராமசபைத் தலைவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தமைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக சி. தனபாலசிங்கம், சி. சபாரத்தினம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் தியாகராஜாவைச் சுட்டுக் கொல்ல முயன்றமைக்காக ரி. ஜீவராஜா, பூபதி பாலவடிவேற்கரசன், எஸ். சபாலிங்கம், பாலகிருஸ்ணன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுக் கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

*09 மார்ச் 1973* ஆம் திகதி மாவை சேனாதிராசா, கே. சிவராஜா, ரி. எம். குமாரசாமி, தனபாலசிங்கம் (செட்டி), சி. பத்மநாதன் (கண்ணாடி), சந்திரகுமார், ஆர். இரத்தின குமார், எம். பாலரத்தினம் ஆகிய எண்மர் கைது செய்யப்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து ரீ. சதாரத்தினம் (படா), ஏ. பாலவடிவேற்கரசன் (பூபதி) ரி. ராஜலிங்கம் ஆகியோர் கைதாகினர்.

*31 மார்ச் 1973*, ஆம் திகதி பருத்தித்துறைக்கு அண்மையில் 20000 டிற்றோனேற்றர்ஸ்களுடன் யோகச்சந்திரன் (குட்டிமணி), ஞானக்கமலம் ஆகிய இரு இளைஞர்கள் கைதாகினர். தீவிரவாதத் தமிழ் இளைஞர்களாகக் கருதப்பட்ட த. முத்துக்குமாரசுவாமி, புஸ்பராஜா வரதராஜா, ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

எனவே, ஆகஸ்ட் 1973, ஆம் திகதியளவில் நாற்பத்தொரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தனர் பத்தொன்பது வயது இளைஞர் ஒருவரைப் பொலீசார் சல்லடைபோட்டுக் கைது செய்யத் தேடித்திரிந்தனர். அவரே வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆவர்.

கைதாகிக் கோட்டை குயின்ஸ் ஹவுசுக்குக் கொண்டு வரப்பட்ட இளைஞர்கள் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை முதலான பொலீஸ் அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டனர். சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத கேவல முறைகளைப் பிரயோகித்துச் சந்தேக நபர்களை தொல்லைப்படுத்தி முறைப்பாடுகள் பெறப்பட்டன; நீண்ட நேரமோ, கடினமாகவோ, சித்திரவதை மூலமோ வினாத்தொடுத்து பொலீசார் சாட்சியம் பெறும் முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேர்ட் டிகிரி மெதட்ஸ்' (Third Degree Methods) எனப்படும். கைதாகிய இளைஞர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு விசாரிக்கப் பட்டனர் எனினும், அவர்கள் மீது சுமத்தப்பட்ட சம்பவங்கள் பொய்யானாவையல்ல.

கோட்டைக் குயின் றூவுசில் கைதாகிய இளைஞர்கள் பல தடவைகள் சித்திரவதைக்கும் விசாரணைக்குமுள்ளாகினர். 03, ஆகஸ்ட், 1973 ஆம் திகதியும, 04 ஆம் திகதியும் சி. குலேந்திர ராஜா இந்த மாளிகையில் வைத்து சப் இன்ஸ்பெக்டர் விக்னேஸ்வரராசாவால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். 31, ஜூன் 1973 ஆம் திகதியிலிருந்து சில நாட்கள் வே. சுப்பிர மணியம் (மணியம்) இன்ஸ்ப்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையால் இங்குவைத்து விசாரிக்கப்பட்டார். 10, மார்ச் 1973 ஆம திகதி சி. தனபாலசிங்கம் (செட்டி), இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளையால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். 23 மார்ச் 1973 ஆம் திகதி நா. அமரசிங்கம் ஏஎஸ்பி சில்வாவால் விசாரிக்கப் பட்டார். 03, மே, 1973 ஆம் திகதி ச. சபாலிங்கமும், 06 ஆம் திகதி பாலகிருஸ்ணனும் பஸ்தியாம்பிள்ளையால் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரிடமிருந்தும் தவ றொத்துக்கொள்ளும் வகையில் தவறேற்பு வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

21, ஆகஸ்ட், 1976.

யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலை வாயிலுக்கு, சிறையிலிருந்து விடுவிக்கப்படவிருந்த கிளிநொச்சி இளைஞர் களை வரவேற்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அமிர்தலிங்கம், திருமதி. அமிர்தலிங்கம், செல்லத்தம்பு, யோகேஸ்வரன் ஆகியோர் வேறு சில ஆதரவாளர்களுடன் வந்தனர். கோட்டைவாயிலிற் கடமைக்கிருந்த பொலீசார் அவர்களை உள்ளே விடாது தடுத்தனர். 'பொலீஸ் அத்தியட்ச கரின் அனுமதியின்றி எவரும் கோட்டைக்குள் நுழைய முடி யாது' என அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அமிர்தலிங்கம் குழுவினர் கோட்டை வாயிலிலிருந்து திரும்பி வரும்போது, கோட்டையின் வெளி வாயிலோடு இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸ் பெறக்சில் (சின்னக்கோட்டையில் இருந்தது) இருந்து காருக்குக் கற்கள் வீசப்பட்டன. அமிர்தலிங்கம் பொலீஸ் அத்தியட்சகரிடம் இக்கல்லெறிச் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்வதற்காகப் பொலீஸ் நிலையத்திற்குள் ஏனையோருடன் நுழைந்தபோது, வெளியே காரினுள் திருமதி அமிர்தலிங்கம் அமர்ந்திருந்தார்.

பொலீஸ் நிலையத்தில் அமிர்தலிங்கத்தின் முறைப்பாட்டையோ வரவையோ பொலீஸ் அத்தியட்சகர் செனேவிரத்ன கனம் பண்ணாது வேண்டா வெறுப்பாக நடந்து கொண்டார். றிசேவ் பொலீஸ் செல்லத்துரையை அழைத்து, அமிர்தலிங்கத்தின் முறைப்பாட்டைப் பதியுமாறு கூறிவிட்டு வெளியேறினார். அமிர்தலிங்கம் முறைப்பாடு செய்து கொண்டிருந்தபோது, பொலீஸ் பெறசிலிருந்தும், யாழ்ப்பாணம் ஸ்ரேடியத்திலிருந்தும் பொலீசார் வெளிவந்து, திருமதி அமர்தலிங்கம் அமர்ந்திருந்த காரைச் சூழ்ந்து கொண்டனர். தூஷணை வார்த்தைகளால் ஏசியதுடன் காரை அறைந்து உலுப்பினர். கலவரத்தை அறிந்து அமிர்தலிங்கம் வெளியில் விரைந்து வந்தபோது, அவர்களில் ஒருவனான ரணசிங்க காரின் முன் கண்ணாடியை அறைந்து நொறுக்கியதுடன், அமர்தலிங்கத்தையும் ஓங்கி அறைந்தான். இக்கலவரத்தைக் கண்ணுற்ற ஏஎஸ்பி ஒருவர் விரைந்து காரடிக்கு ஓடிவந்ததால், மேற்கொண்டு அசம்பாவிதங்கள் நேராது தவிர்க்கப்பட்டது.

பின்னர் 107 பொலீசாரைக் கொண்ட ஆளடையாள அணிவகுப்பு நடைபெற்றது. தாக்கியவனை அடையாளங்காட்டச் சாட்சிகளால் முடியவில்லை. ஆனால், பொலீஸ் நிலைய எழுதுவினைஞர் இருவர் ரணசிங்கவை அடையாளம் காட்டினர், விசாரணை நிகழ்ந்தது. இழுத்தடித்து ஒருவிதமாக 27 ஜனவரி, 1978 இல், பதினைந்து மாதங்களின் பின்னர், ரணசிங்க சேவை நீக்குஞ் செய்யப்பட்டான். அரச பாதுகாப்புப் படையினால் தமிழ் மக்கள் அவமானப்படுத்தப்படுவதும், இம்சைப்படுத்தப்படுவதும் புதிய சங்கதிகளல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளும், வெளியிலும் எண்ணி லடங்கா வேதனைகளையும் மன உளைச்சலகளையும் தமிழ் மக்கள் தொடர்ந்து அனுபவிக்க நேர்ந்தது.

12, ஜூலை, 1979.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மீது அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. பிரிகேடியர் வீரதுங்கவை அழைத்த ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தன, "பயங்கரவாதப் பயமுறுத்தலை இந்தத் தீவிலிருந்து, குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலி ருந்து, அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு துடைத்து விடுக" எனக் கட்டளை வழங்கினார். எவரையும் கைது செய்து விசாரிக்கவும், காலவரையின்றித் தடுத்துவைக்கவும், அழித்து விடவும் இந்தச் சட்டம் வழிவகுத்தது யாழ்ப்பாணத்தில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

பிரிகேடியர் வீரதுங்க ஜூலை 17 ஆந்திகதி யாழ்ப்பாணத் திற்கு வருகைதந்து பொறுப்பேற்கவிருந்தார். அதற்குமுன், ஜூலை 13, 14 ஆம் திகதிகளில் அரசபயங்கரவாதம் யாழ்ப் பாணத்தில் ஆரம்பமாகியது. 14 ஆம் திகதி அதிகாலை 1 மணிக்கு நவாலியைச் சேர்ந்த விஸ்வஜோதி இரத்தினம் (இன்பம்) என்ற இளைஞனை அவரோடு இருந்த அவரது மைததுனர் ச. செல்வரத்தினத்தோடு கைது செய்து கோட்டைக்குக் கொண்டு வந்தனர். அதே நாள் அதிகாலை இந்த இருவரின் சடலங்கள் பண்ணைப் பாலத்தில் கிடந்தன. துரையப்பா கொலை வழக்கில் சந்தேகத்தின் மீது கைதாகி, விடுதலையாகி யவர் இன்பமாவார். அச்சடலங்கள் சுட்டுக்காயங்களுடன் அடையாளம் தெரியாதவாறு சிதைக்கப்பட்டிருந்தன.

இன்பம் கைதான அதே இரவு/அதிகாலை வேறு நால்வர் வெவ்வேறிடங்களில் கைது செய்யப்பட்டனர். நவாலியில் ரி. எஸ். பாலேந்திரா, ராஜகிளி என்ற இளைஞர்களும், சட்ட நாதர் கோவில் வீதியில் எஸ் பரமேஸ்வரன், எல். ராஜேஸ்வரன் ஆகிய இருவர், பருத்தித்துறை வீதியில் ஐ. இந்திரராஜன் என் பவர் ட்ரக்குகளில் வந்த காவல்படையினரல் அழைத்துச் செல் லப்பட்டனர். ஐ. இந்திரராஜன் தவிர ஏனையோர் கோட்டைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் காணமல் போயினர். இந்திரராஜன் மட்டும் சித்திரவதைக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரின் இடுப்பிற்குக் கீழ் பலகாயங்களும், முகத்தில் சூட்டுக்காயங்களும், விரல் நகங்கள் பிடுங்கப்பட்டும் காணப்பட்டன.

ஜூலை 17, 1979 ஆம் திகதி பிரிகேடியர் வீரதுங்க, யாழ்ப்பாணம் வந்து, கோட்டை ராணி மாளிகையில் அமர்ந்தார். அன்றிலிருந்து கோட்டைக்குள் நிரந்தரமான இராணுவப் படையணி ஒன்று குடியேறியது.

# 4

*10, ஜூலை, 1984.*

யாழ்ப்பாணக் கோட்டை, ஈழத்தமிழ்ப் போராளிகளினால் முற்றுகையிடப்பட்டது. இது யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றும் நோக்கிலான முற்றுகையன்று ஸ்ரீ லங்கா இராணுவத்தை யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து வெளியேறாது தடுக்கும் முற்றுகையாகும். இந்த முற்றுகைக்கு ஈழத்தமிழ் விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாணக்குடா நாட்டுத் தளபதி கிட்டு தலைமை தாங்கினார். யாழ்ப்பாணக் கோட்டை வரலாற்றில் மிக நீண்ட கால முற்றுகையாக இது இருந்தது. 03, ஒகஸ்ட், 1987 இந்திய அமைதி காக்கும் படை, யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசிக்கும்வரை இந்த முற்றுகை தொடர்ந்திருந்தது. சரியாக மூன்றாண்டுகள் 23 நாட்கள் இந்த முற்றுகை நடந்தது.

யாழ்ப்பாணக் கோட்டை, கோட்டையை அடுத்துள்ள யாழ் பொலீஸ் விடுதிகள் என்பனவற்றில் ஸ்ரீ லங்கா இராணுவம் நிலை கொண்டிருந்தது. பின்னர் யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையக்கட்டிடத்திலும் சிறிய முகாம் ஒன்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துக்கொண்டது. யாழ்ப்பாணம் கோட்டைக்கு அப்பால் மண்டைதீவிலும் குருநகரிலும் இராணுவ முகாம்கள் இருந்தன. இவற்றிலிருந்து இராணுவத்தினர் வெளியேறாது விடுதலைப் புலிகள் அரண் அமைத்து காவல் காத்தனர்.

யாழ்ப்பாணம் கோட்டையின் புறச்சுற்று வீதியில் விடுதலைப் புலிகளின் அரண்களோடு, புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எப் இயக்கக்குழுக்களின் கண்காணிப்பு அரண்களும் ஆரம்பத்தில் இருந்தன. கொட்டடி, காங்கேசன்துறைவீதி, முனியப்பர் வீதி, நூல்நிலைய வீதி அந்த வீதிகளுக்கு இடையிலான அரச கட்டிடங்கள் என்பனவற்றில் எல்லாம் போராளிகள் நிலை கொண்டு யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறாது கண்காணித்தனர். கோட்டைக்குள்ளிருந்து ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் வெளியே வரமுயலும் வேளைகளில் பயங்கரமாக அவர்களைத் தாக்கி, யாழ்ப்பாணக் கோட்டைக்குள் அவர்களை முடங்க வைத்தனர். அதனால், ஸ்ரீ லங்கா அரசு யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து 1000 மீற்றர்ப் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாகப் பிரகடணப்படுத்தியது. முற்றவெளியெங்கும், வீதிகள் எங்கும் விடுதலைப்புலிகளால் விதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளும், மிதிவெடிகளும் ஸ்ரீ லங்கா இராணுவத்தை வெளியேற விடவில்லை.

அதனால் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் தொடர்ந்து கோட்டைக்குள்ளிருந்து ஷெல் தாக்குதல்களையும், வெகுதூரம் பாய்கின்ற ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் ஓயாது யாழ்ப்பாண நகரத்திற்கும் சுற்றுப்புறத்திற்கும் ஏவினர். 1987 ஆம் ஆண்டு முடிவுவரை ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்தன. 1987 ஆரம்பத்தில் ஷெல் தாக்குதல்களோடு, பொம்பர் குண்டு வீச்சு விமானங்களும் யாழ்ப்பாணப்பகுதியில் பெரும் தாக்குதல்களை மேற்கொண்டன.

21, மே, 1986 இல் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று கன்னாதிட்டியில் விழுந்து வெடித்ததில் 9 பேர் பலியாகினர். கடைகள் சில சேதமடைந்தன. 11, ஜூன் 1986 இல் மண்டைதீவுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 குருநகர் மீனவர்கள் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் குரூரமாக வெட்டியும் குத்தியும் சுட்டும் கொல்லப்பட்டனர். 30, ஜூலை, 1986 இல் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் அத்தியடி, ஆரியகுளம், கொட்டடி, ஆனைப்பந்தி, நாவலர் வீதி முதலான பகுதிகளில் விழுந்து வெடித்ததால் 3 பேர் பலியாகினர். 14 பேர் கடுங்காயங்களுக்குள்ளாகினர்.

24, ஒகஸ்ட், 1986 இல் நிகழ்ந்த கோட்டைச் ஷெல் தாக்குதல்கள் மிக மோசமானவை. ஆஸ்பத்திரி வீதியில் காலை மக்கள் நடமாட்டம் அதிகமாகவிருந்த வேளையில் விழுந்த ஷெல்கள், ஹற்றன் நாசனல் வங்கி முகாமையாளர் எஸ். சூரியகுமாரைப்புலியெடுத்தது. அவருடன் நான்கு பேர் மரணமாகினர். புத்தகக்கடையில் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த றெஜி பீரிஸ் என்ற 18 வயதுப்பெண் மரணத்தைத் தழுவ நேர்ந்தது. முத்துக்குமார் என்ற வயோதிபர் கணத்தில் பலியானார். ஏராளமான மக்கள் அன்று காயம் அடைந்தனர்.

யாழ் கோட்டையிலிருந்து 23, ஒகஸ்ட், 1986 இல் ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று வெகுதூரம் பயணம் செய்து ஐயனார் கோயிலடியில் திருமண வீடொன்றின் மேல் விழுந்தது. திருமணம் தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் கோவிலில் நிகழ்ந்தது. துர்க்கையம்மன் ஆலயத்தில் தாலிகட்டி முடிந்து, மணமகன் வீட்டிற்கு வருகை தந்திருந்த மணமக்கள் இருந்த வீட்டின் கூரைமீது விழுந்த ஷெல் கீழே இறங்கியது. மணமகன் உதயசூரியன் மணவறை உடைகளோடு இரத்த வெள்ளத்தில் பலியானார். அவர் அருகில் நின்றிருந்த இராசதுரை என்ற வயோதிபரும் பலியாக நேர்ந்தது. பலர் காயமடைந்தனர். புதிய வாழ்வின் ஆரம்பத்திலேயே கருகிப்போன மணமகள் சகுந்தலா தேவியின் கண்ணீர் யாழ்ப்பாணத்தைச் சோகத்திலாழ்த்தியது.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து துப்பாக்கிச்சூடுகளும் இடைக்கிடையே நிகழும். கண்மூடித்தனமாகப் துப்பாக்கிகள் முழங்கும். விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலுக்குப் பலியாகிக் கோட்டைக்குள் இராணுவத்தினரும் சரிந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டடிப்பகுதியில் ஷெல் தாக்கியதால், மாணவன் ஒரு வனும் ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்த பாக்கியம் என்ற பெண்ணும் அவ்விடத்தில் பலியாகினர். 12 பேர் வரையில் கடும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் பின்னர் மரணமடைந்தனர். அன்று காலையிலிருந்து மாலைவரை கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் நடந்தன.

10, ஓகஸ்ட், 1986 இல் யாழ்கோட்டைக்கு முன் காங்கே சன்துறை வீதியில் 15 அடி உயரமான அரண் ஒன்றினை புளொட் இயக்கத்தினர் அமைத்துக்கொண்டிருந்தனர். அவர் களை நோக்கிச் சரமாரியாகச் துப்பாக்கிச் சூடுகள் மேற் கொள்ளப்பட்டன. அவர்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் ஒன்று, யாழ்ப்பாணம் வாழைப்பழச்சந்தைப் பகுதியில் விழுந்து சிதறியதால், செ. ராமமூர்த்தி, ச. பாலச்சந்திரன், ச. ஞானலிங்கம் ஆகிய மூவரும் அவ்விடத்தில் கொல்லப்பட்ட னர். 11 பேர் வரையில் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

7, செப்டம்பர், 1986 அதிகாலையே யாழ்ப்பாணக் கோட் டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமாகின. கஸ்தூரி யார் வீதியில் விழுந்த ஷெல்லிற்குப் பலர் பலியாகினர். வீடுகள் சேதமடைந்தன. மத்திய கல்லூரிக்கட்டிடங்களும் வேம்படி மகளிர் கல்லூரிக்கட்டிடங்களும் சேதமுற்றன. போராளிகளின் றொக்கட் தாக்குதல்களால் இரு இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பலதடவைகள் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் தாக்கப்பட்டி ருக்கின்றது. 8, செப்டம்பர், 1986 இல் பெரும் சத்தத்துடன் குழந்தைகள் வார்ட்டின்மேல் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. குழந்தைகளை வைத்திருந்த தாய்மார்கள் தம் குழந்தைகளை அணைத்துக்கொண்டு, கீழே விரைந்து இறங்கிவிட்டதால் உயிர்ச் சேதம் தடுக்கப்பட்டது. அதற்கு ஒரு காரணம் தளபதி கிட்டுவின் முன்னெச்சரிக்கையான செயற்பாடாகும். யாழ்ப்பாணக் கோட் டையில் ஷெல் குத்தப்படுகிறது என்ற சத்தம் எழுந்ததும் உட னடியாக அபாய மணி - சைரன் ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்

டிருந்தது. அந்த ஒலி கேட்டதும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்செல்ல முடிந்தது. 29, ஒக்டோபர், 1986 இல் ஆஸ்பத்திரி முன்றலில் ஷெல் ஒன்று விழுந்தது. அதனால் நால்வர் உடனடியாகப் பலியாகினர் 3 பொலிஸ்காரர் உட்பட 32 பேர் காயங்களுக்குள்ளாகினர். மிக மோசமான ஷெல் தாக்குதல்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மீது கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்டது 30, மார்ச், 1987 அன்றாகும். 19 ஆம 20 ஆம் வார்ட்டுகளில் காயம் பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கட்டில்களில் காயங்களுடன் படுத்திருந்த வேளையில் கோட்டையிலிருந்து ஷெல் ஏவப்பட்டது. அது அந்த வார்ட்டுகளில் விழுந்து பயங்கரமாக வெடித்தது. ஒன்பது நோயாளிகள் உடல் சிதறி கருகி மரணமடைந்தனர். 6 வயதிலிருந்து 64 வயது வரையிலான சடலங்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. அந்த வார்ட்டுகளில் காயம அடைந்தவர்கள் அனைவரும் சரிந்து கிடந்தனர். பிணக்குவியலாக அந்தப்பிரதேசம் காணப்பட்டது. ''திட்டமிட்ட படுகொலைகள்'' என யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி தீர்ப்பு வழங்கினார். யாழ்ப்பாணக்கோட்டை இராணுவத்தினரின் மிகக் கொடூரமான செயல் இதுவாகும்.

30, ஒக்டோபர், 1986 இல் மத்திய கல்லூரிப்பக்கமாக, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலிருந்து இராணுவத்தினர் சுடும் துப்பாக்கி வெட்டுகளைத் தீர்த்தனர். சரமாரியாகத் துப்பாக்கிச் சன்னங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வெடித்தன பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பாகத் தரைகளில் படுத்துக்கொண்டனர். வகுப்பு மாணவர்களைப் பாதுகாப்பாகத் தரையில் படுக்குமாறு கூறிக்கொண்டிருந்த மாணவர் தலைவன் பொ. விபுலானந்தன், பாய்ந்து வந்த துப்பாக்கிச்சன்னத்திற்கு இரையாக நேர்ந்தது. விபுலானந்தனின் இடது பக்க முதுகில் பாய்ந்த சன்னம் அவர் உயிரைப் பலியெடுத்தது. 'காலை 7 மணியிலிருந்து 3 மணி வரை கல்லூரிகள் பக்கமாக எதுவித ஆயுதப்பிரயோகமும் நிகழ்த்தமாட்டோம்' என்றவாக் குறுதியை யாழ்ப்பாணக் கோட்டை இராணுவக் கப்டன் கொத்தலாவல தந்திருந்தார். அது மீறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகையின் போது யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தளபதி கிட்டுவும் கோட்டை முகாம் இராணுவ அதிகாரிகளும் இடைக்கிடையே பேசிக்கொள்வதுண்டு. யாழ்ப் பாணக் கோட்டைக்குரிய தண்ணீர் விநியோகம் குழாய் வழி யானது. அது நிறுத்தப்பட்ட போது கப்டன் கொத்தலாவல விடு தலைப்புலிகளின் தளபதி கிட்டுவுடன் பேசி, மனிதாபிமான ரீதியில் தண்ணீர் பெற்றுக்கொண்டார், ஒருதடவை 'வயர்லஸ்' மூலம் தங்களுக்கு இரு லொறி விறகும், மாம்பழங்களும் அனுப்பிவைக்கும்படி கோட்டை இராணுவத்தினர் இரந்தனர். விடுதலைப்புலிகளினால் ஒரு லொறி விறகு அனுப்பப்பட்டது. யாழ் கோட்டை இராணுவக் கப்டன் கொத்தலாவலயும் தளபதி கிட்டுவும் கோட்டை வாசலில் பேசிக்கொண்ட சம்பவங்கள் சில உள்ளன.

மன்னார் அடம்பனில் ஸ்ரீ லங்கா இராணுவத்திலிருக்கும் விடுதலைப்புலிகளுக்கு 15, ஒக்டோபர் 1986 இல் பயங்கரமான நேரடி மோதல் ஒன்று நிகழ்ந்தது அதில் விடுதலைப்புலிகள் பக்கத்தில் லெப்டினன்ட் விக்ரரும், இரண்டாவது லெப்டினன்ட் றோமும் களப்பலியாகினர். இராணுவத்தினரில் 24 பேர் பலி யாகினர். அவர்களில் ஒன்பது பேரின் சடலங்கள் யாழ்பா ணத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அந்தச் சண்டையில் இரு ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் உயிருடன் சிறைபிடிக்கப்பட்ட னர். அந்த ஒன்பது பேரின் சடலங்களையும் தம்மிடம் ஒப் படைக்குமாறு யாழ்ப்பாணக் கோட்டை இராணுவக் கப்டன் கொத்தலாவல தளபதி கிட்டுவிடம் கோரிக்கை விடுத்தார், விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்தனர். அன்று பாலை விலையுயர்ந்த சவப்பெட்டிகளில் அச்சடலங்கள் தனித்தனியாக இடப்பட்டு வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு யாழ். கோட்டை முன்றலிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. நிராயுதபாணிகளாக கோட்டையிலிருந்து வெளிவந்த கப்டன் கொத்தலாவல அச் சடலப் பேழைகளை நன்றியுடன் பெற்றுச்சென்றார்.

அடம்பனில் கைதான இரு ஸ்ரீ லங்கா இராணுவ வீரர்க ளையும் விடுவிக்கும் முயற்சியில் விஜேகுமாரணதுங்க ஈடுபட் டார் அவர் தளபதி கிட்டுவிடம் தொடர்பு கொண்டு யாழ்ப் பாணத்திற்கு வந்து அவரைச்சந்திக்க அனுமதி பெற்றார். 27, ஒக்டோபர், 1986 அன்று அவரும் ஒஸி, அபே குணசேகரவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானம் மூலம் பலாலி வந்தனர். பின்னர் ஹெலிக்கொப்டர் மூலம் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கிருந்து கப்டன் கொத்தலாவல, கப்டன் பெரேரா ஆகியோரால் கோட்டை வாசலுக்கு அழைத்து வரப்பட்டு, தளபதி கிட்டுவிடம் கையளிக்கப்பட்டனர். விஜே குழுவினர் விடுதலைப் புலிகளால் அவர்களது முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, கைதிகளுடன் அளவளாவ விடப்பட்டனர். 'அவர்களை விடுவிப்பதாயின் நாங்கள் கோரும் இரு விடுதலைப் புலிகளை இலங்கை அரசு விடுதலை செய்ய வேண்டும்' என்ற நிபந்தனையைத் தளபதி கிட்டு விதித்தார். அந்த நிபந்தனையை ஏற்று விஜே குழுவினர் கொழும்பு சென்றனர்.

கைதிகள் பரிமாற்றம் பற்றி அரசு சார்பில் கப்டன் கொத்தலாவலயும் சேணல் ஆனந்த சேகரவும் முன்னேற்பாட்டின் படி யாழ்ப்பாணக் கோட்டையைவிட்டு வெளியில் வந்தனர். அவர்களையும் அவர்களுடன் நிராயுதபாணிகளாக வெளியில் வந்த 12 இராணுவத்தினரையும் யாழ்ப்பாணக் கோட்டைவாசலில் வரவேற்ற கிட்டு, ரஹீம், திலீபன் ஆகியோர் தம் வாகனங்களில் ஏற்றி தம் முகாமிற்கு அழைத்துச்சென்றனர். கப்டன் கொத்தலாவல 19 பேரின் பெயர்களைத் தளபதி கிட்டுவிடம் கொடுத்தார். கைதாகியுள்ள விடுதலைப்புலிகளின் அப்பெயர்ப் பட்டியலிலிருந்து ஐவரை தளபதி கிட்டு தேர்ந்தெடுத்தார். இப் பேச்சு வார்த்தைகளில் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை, தென்மராட்சிப் பொறுப்பாளர் சேடில்ஸ், வலிகாமம் பொறுப்பாளர் ஜொனி ஆகியோரும் கலந்துகொண்டனர். விடுதலைப் புலிகளின் முகாமில் விடுதலைப்புலிகள் வைத்திருந்த ஆயுதங்களை வாங்கிப்பார்த்த கப்டன் கொத்தலாவல வியப்புத் தெரிவித்தார்.

04, டிசம்பர், 1986 இல் கொழும்பிலிருந்து விஜே குமாரதுங்கவுடன் 35 பௌத்த குருமார் உட்பட, 65 பேர் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பஸ்சில் புறப்பட்டு வந்தனர். அரசாங்கம் முதலில் இவர்களது பயணத்தைத் தடுத்த போதிலும் பின்னர் அனுமதித்தது. ஆனையிறவுககு இப்பால் அவர்களை விடுதலைப் புலிகள் தம்முடன் அழைத்து வந்தனர். கைதிகளுடன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவளாவினர். ''எமது நிபந்தனையிலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம். எவ்வளவு காலம் சென்றாலும் சிப்பாய்களைக் கொல்ல மாட்டோம்'' என அவர்களிடம் கிட்டுத் தெரிவித்தார். அவர்கள் திருப்பிச் சென்றனர். 27, டிசம்பர் அன்று காங்கேசன்துறையில் கைதிகள் பரிமாற்றம் பற்றி அரசுக்கும் புலிகளுக்கும் ஒரு பேச்சு வார்த்தை நடந்தது காங்கேசன்துறைப் பட்டின சபை மண்டபத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் வின்சன்ட் பெரேரா, கப்டன் கொத்தலாவல ஆகியோர் கலந்துகொண்டனர். தளபதி கிட்டு, அரசியற் பொறுப்பாளர் திலீபன், ரஹீம் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிபந்தனைப்படி கைதிகள் பரிமாற்றம் பின்னர் நிகழ்ந்தது.

1987 இன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகை தீவிரமாகியது, கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களுடன் பொம்பர் விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் யாழ்ப்பாண நகரத்தை அழிப்பதில் ஈடுபட்டன. ஏராளமான கட்டிடங்கள் அழிந்தன. கோட்டையைச் சுற்றியுள்ள கட்டிடங்கள் பலவும் அழிந்தன. பெரிய தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம், றீகல் தியேட்டர், நீதி மன்றங்கள், மாநகர சபை, சுப்பிரமணியம் பூங்கா என்பன கோட்டை இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டன. சேதமடைந்த பெரிய தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம் என்பன வற்றில் இராணுவம் சிலவேளை வந்து தங்கிவிடலாம் எனக் கருதப்பட்டதால், அக்கட்டிடங்கள் போராளிகளினால் தீயிட்டு அழிக்கப்பட்டன.

கோட்டையை சுற்றியுள்ள இரண்டு சிறிய இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை. கோட்டைக்கு மேற்குப்பக்கத்திலுள்ள பொலீஸ் விடுதிகளில் இராணுவம் மினி முகாம் ஒன்றினை அமைத்திருந்தது. 22 மார்ச் 1987 இல் அதிகாலை அந்த முகாமை விடுதலைப்புலிகள் தாக்கினர். பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கடும் காயமடைந்த 13 பேரில் ஐவரை அங்கேயே விட்டுவிட்டு 8 பேரைக் கைது செய்து அழைத்து வந்தனர். ஆயுதங்கள புலிகளுக்குக் கிடைத்தன. ஸ்ரீ லங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பறேசன் பூமாலை முடிந்

திருந்தவேளையில், 1, ஜூன், 1987 அன்று அதிகாலை யாழ்ப்பாணம் தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்த ஸ்ரீ லங்கா மினி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் பயங்கரமான தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டனர். சக்தி வாய்ந்த குண்டுகள் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று இந்த முகாமிற்குள் கொண்டு செல்லப்பட்டு வெடிக்கப்பட்டது. மூன்று இராணுவத்தினர் சரண் அடைந்தனர். ஏனையோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். முருகதாஸ் என்ற போராளி இந்தச் சண்டையில் மரணமடைய நேரிட்டது. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து நிகழ்த்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் யாழ்ப்பாணச் சுற்றாடலில் 73 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர் 464 பேர் கடுங்காயங்களுள்ளாகினர். பொம்பர் குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் 86 பொது மக்கள் பலியாகினர். 709 பேர் காயங்களுள்ளாகினர். பாதிப்புற்றோர் இவற்றிலும் கூடுதலாக இருக்கலாமே தவிரக் குறைய வாய்ப்பில்லை. யாழ் கோட்டையிலிருந்து நிகழ்ந்த தாக்குதல்களினால் 600 வீடுகள் வரையில் சேதமுற்றன. எட்டு அரச கட்டிடங்கள் முற்றாக அழிந்தன. 254 வர்த்தக நிலையங்களும் 6 ஆலயங்களும், 4 பாடசாலைகளும் சேதமுற்றன. சில முற்றாக அழிந்து போயின. இவற்றின் விளைவாக ஏறத்தாழ 692 மில்லியன் ரூபாய்கள் வரையில் சொத்துக்கள் அழிந்துள்ளன. இந்த முற்றுகைக்காலத்தில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் 136 பேர் கொல்லப்பட்டதுடன், 11 பேர் கைதாகினர். போராளிகள் தரப்பில் உயிரிழப்புக் குறைவு. முற்றுகைக்காலததிலும் மினி இரார்ணுவ முகாம் தாக்குதல்களிலும் 7 பேர் வரையில் களப்பலியாகினர்.

இந்த நிலையில் 29, ஜூலை, 1987 இல் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தது 3, ஓகஸ்ட் அன்று விடுதலைப்புலிகளின் அனுமதியுடன் இந்திய அமைதிப்படை, யாழ்ப்பாணம் கோட்டைக்குள் பிரவேசித்தது. இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறும் வரை யாழ்ப்பாணம் கோட்டை அவர்களின் முகாமாக விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

03. ஆகஸ்ட். 1987.

ஒல்லாந்த கொமுசாறி போல, விடுதலைப்புலிகளின் யாழ்ப் பாணக்குடா நாட்டுத்தளபதி கிட்டு இருந்ததால், பின்வருமாறு யாழ்ப்பாணக்கோட்டை முற்றுகைபற்றிய விபரங்களைத் தனது சுப்ரிம் கொமாண்ட்டிற்கு அறிவிப்பார்;

''.. அன்பான தலைவரே, இந்திய அமைதிப்படையின் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரவேசத்துடன், தாங்கள் எனக்கிட்ட பணியினை முடித்துக்கொள்கிறேன். மூன்று ஆண்டுகள் இருபத்தி மூன்று நாட்களான தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகையில் எமக்கிடப்பட்ட பணி செவ்வனே நிறை வேற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளிருந்து ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் வெளியேறாது முடக்கி வைத்திருந்துள் ளேன். 1986 காலகட்டம் வரை யாழ்ப்பாணக்கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் கூடுதலாக நிகழ்ந்தன. 1987 காலகட்டத்தில் பொம்பர் தாக்குதல்களின் துணையுடன் ஷெல் தாக்குதல்கள் நிகழ்ந்தன. ஷெல் தாக்குதல்களினால், யாழ் கோட்டையிலி ருந்து நிகழ்ந்தவற்றையே குறிப்பிடுகிறேன், 73 அப்பாவி மக்கள் பலியாகினர். 464 மக்கள் கடுங்காயங்களுள்ளாகினர். பொப்பர் குண்டு வீச்சுத்தாக்குதலினால் 86 அப்பாவி மக்கள் பலியாகினர். 709 பேர் கடுங்காயங்களுள்ளாகினர் இது என்னளவில் பதியப் பட்ட தகவல்களாகும். இவற்றிலும் கூடுதலாக இருக்கலாமே தவிர குறைய வாய்ப்பில்லை.

''...இதயத்தை நெகிழ வைத்த சில சம்பவங்கள் உள்ளன. இனமும் மாறாத துயரவடுக்களாகவுள்ளன ஐயனார்கோயிலில் திருமணநாளன்றே பலியான மணமகன், ஷெல் தாக்குதலால் ஆஸ்பத்திரியில் பலியான நோயாளர், மண்டைதீவுசகடலில் கொல்லப்பட்ட மீனவர், துப்பாக்கிச்சூட்டிற்கு இரையான மத் தியகல்லூரி மாணவத்தலைவன். இப்படிப் பல மரணங்கள் துயரமானவை தாம்.

''...நான் அறிந்தவரையில் 600 வீடுகள் வரை இத்தாக்குதல் களினால் சேதமுற்றுள்ளன. எட்டு அரச கட்டிடங்கள் முற்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்தன. 254 வர்த்தக நிலையங்களும் 6 ஆலயங்களும், 4 பாடசாலைகளும் யாழ் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்களால் சேதமுற்றன. ஏறக்குறைய 692 மில் லியன் ரூபாய்கள் வரையில் சொத்துக்கள் அழிந்துள்ளன. இதற்குக் கூடுமேயொழிய குறையாது. இந்த முற்றுகைக்காலத்தில் என் கணிப்பின்படி 136 ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் கொல்லப்பட் டனர். பொலீஸ் விடுதி மினி இராணுவத்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதுடன், 8 பேர் கைதாகினர். தொலைத்தொடர்பு நிலைய இராணுவத்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதுடன் 3 ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் சரணடைந்தனர். தற்போது எம்மிடம் 11 கைதிகளுள்ளனர். எம் தரப்பில் எல்லாமாக இந்த முற்றுகைக்காலத்தில் 7 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

''...யாழ் கோட்டை இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தின் மீது மிருகத்தனமான தாக்குதல்களைச் செய்தாலும் நாம் மனிதாபிமானமுறையில் நடந்துள்ளோம். கோட்டைக்குரிய தண் ணீரை அவர்கள் இரந்து கேட்டதால் வழங்கினோம். அடம் பணில் கொல்லப்பட்ட ஸ்ரீ லங்கா வீரரின் சடலங்களைத் தரும் படி கேட்டபோது கப்டன் கொத்தலாவலையிடம் கோட்டை வாசலில் வைத்து வழங்கினோம். அடம்பனின் கைதான கைதி களைப் பரிமாறிக் கொண்டோம்.

''...யாழ் கோட்டை முற்றுகைக்காலத்தில் என்னைக்கொல் வதற்குச் சதியொன்று நடந்தது. அச்சதியில் நான் தப்பிவிட் டேன். 30, மார்ச், 1987 அன்று இரவு என் வாகனத்தின் மீது கைக்குண்டு வீசப்பட்டது. அதில் எனது ஒரு காலை நான் இழக்க நேரிட்டுவிட்டது.

''...யுத்த முனையில் எதுவும் எனது உத்தரவின்படியே நடக்கும். அவசர முடிவுகளை எடுக்க அங்கேயுள்ள எனது தள பதிகளுக்கு அதிகாரமுள்ளது. அவர்கள் எல்லாரும் நான் எப்படிச் சிந்திப்பேனோ அப்படியே சிந்திக்கப்பயிற்சிப்பெற்றவர் என்ற தங்களது கூற்றை நான் மறக்கவில்லை. எனது முற்றுகைக்கடமை யைச் செவ்வனே நிறைவு செய்துள்ளேன். எனது முற்றுகையை நிறைவு செய்து இந்திய அமைதிப்படையிடம் யாழ் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கையளிக்கின்ற வேளையில், சாத்தானின் உதவி பெற்றாவது தீவிர வாதிகளை ஒழிப்பேன'' என்ற ஸ்ரீ லங்கா ஜனாதிபதியின் வார்த்தைகள் ஏனோ நினைவுவருகின்றன.''

இவ்வாறு தளபதி கிட்டுவின் அறிக்கை அமையும்.

# 6

29, ஜூலை, 1987.

நள்ளிரவு வேளையில் விமானங்கள் மூலம் இந்தியப்படை யாழ்ப்பாண மண்ணில் கொண்டுவந்து இறக்கப்பட்டது பின்னர் கப்பல்கள் மூலம் படை வீரர்களும், யுத்த கனரகத் தளபாடங் களும் தமிழ்ப்பகுதிகளில் குவிக்கப்பட்டன. 03, ஆகஸ்ட், 1987 ஆம் திகதி இந்தியத் துருப்பினரில் ஒரு சிறு பகுதியினர், யாழ்க் கோட்டைக்குள் பிரவேசித்தனர். கோட்டை வாசலில் அவர் களை எதிர்கொண்ட ஸ்ரீ லங்கா இராணுவப் பிரிகேடியர், கோட்டையின் பொறுப்பை இந்தியாப்படையிடம் கையளித்தார். யாழ்ப்பாணக் கோட்டை வாசலில் இந்திய இராணுவத்தினரின் பொறுப்பேற்பைப் படம்பிடித்த சிங்களப் பத்திரிகையாளர் ஒரு வர், இந்திய அமைதிப்படைக் கப்ரின் ஒருவரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

இந்தியப்படையினர் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இலங் கையைவிட்டு வெளியேறும் வரை நிலைகொண்டிருந்தனர். அக்காலவேளையில் ஒரு தடவை கோட்டைக்குள்ளிருந்து இந்திய இராணுவம் வெளிவரவிடாது பொது மக்கள் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். இந்திய அமைதிப்படை தமிழீழ மண்ணில் நிலைகொண்டதன் பின்னர் நிகழ்ந்த படுகொலைகள், குடியேற்றங்கள், ஒப்பந்தமீறல்கள் முதலானவை தமிழ் மக்களின சகய வாழ்வைப் பாதித்தன இந்திய அமைதிப் படையின் ஆட்பலமும் ஆயுதப்பலமும் நாளந்தம் அதிகரித்து வந்தமை தமிழ் மக்களிடையே ஐயத்தினைத் தோற்றுவிக்கத் தொடங்கியது. இயக்கப்படுகொலைகள் பரவலாக நடந்தேறின. இவற்றினை இந்திய இராணுவம் பார்த்துக் கொண்டு பாராமுக மாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயற்பாடுகளைக் கண்டித்து இந்திய இராணுவ முகாம்களின் முன்பாக ஏராளமான மக்கள் கூடி மறியல் போராட்டமொன்றினை நடாத்தினர். யாழ்ப்பாணக் கோட்டை முகாம் வாயிலிலும் பெருந்திரளான மக்கள் கூடி மறியல் போராட்டம் நடாத்தினர். 7, செப்டம்பர், 1987 ஆம் திகதி நிகழ்ந்த கோட்டை முன்பான மறியல் போராட்டத்திற்குத் திலீபன் தலைமை வகித்தார். அதில் திலீபன், 'நாளை எமது மக்கள் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டால் மீண்டும் ஆயுதங்களைத் தூக்குவோம். மக்களுக்குச் சுபிட்சமான சுதந்திரம் கிடைக்குமானால் நாம் மரணமாகத் தயாராக இருக்கிறோம். சர்வ வல்லமை பொருந்திய இந்திய இராணுவம் மக்கள் சக்திக்கு முன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.' என மக்கள்முன் குறிப்பிட்டார்.

10, ஒக்டோபர், 1987 ஆம் திகதி, நண்பகல், கோட்டை இராணுவ முகாமிலிருந்து இந்திய அமைதிப்படையினர் யாழ் நகருக்குள் பிரவேசிக்க முயன்றபோது, விடுதலைப்புலிகளால் தடுக்கப்பட்டனர் இந்திய இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் நிகழ்த்தியது விடுதலைப்புலிகளும் திருப்பிச் சுட்டனர். அன்றிலிருந்து போர் மூண்டது. இந்திய இராணுவம் பீரங்கி, டாங்கி போன்ற கனரக ஆயுதங்களுடன் குடியிருப்புகள் மீது சண்மூடித்தனமான தாக்குதலைச் செய்தது. 12 ஆம் திகதி கோட்டையிலிருந்த இந்தியப்படை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிமீது பீரங்கித் தாக்குதலை நடத்திப் பெரும சேதத்தை விளைவித்தது. 21, ஆம் திகதி கோட்டையிலிருந்து வெளிப்பட்டு, ஆஸ்பத்திரிக்குள் புகுந்து மூன்று டாக்டர்கள் உட்பட இருபத்தொரு ஆஸ்பத்திரிப் பணியாளர்களை மிருகத்தனமாகச் சுட்டழித்தது. நூற்றுக்கணக்கான நோயாளிகள் சுடப்பட்டு மரணத்தைத் தழுவினர்.

இந்திய இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்தம் ஆரம்பமானபோது, இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பலர் யாழ்க் கோட்டைக்குள் கொண்டு வரப்பட்டனர்; விசாரிக்கப்பட்டனர்; சிறைவைக்கப்பட்டனர்.

இறுதியில் இந்திய இராணுவம் இந்த மண்ணைவிட்டு வெளியேறும்போது, யாழ்ப்பாணக் கோட்டையைச் ஸ்ரீ லங்கா இராணுத்திடம் கையளித்துவிட்டு வெளியேறியது.

□ □ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி: ஐந்து

# ஈழயுத்தம் - 2

## 1

*11, ஜுன், 1990.*

கோட்டை இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் தமது முற்றுகைக்குள் கொண்டுவந்தனர். ஸ்ரீ லங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அரசியற் தீர்வு ஒன்றிற்கான பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தன இரு பகுதியினரும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பல்வேறு பகுதிகளிலும் மோதி கொண்டனர். விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களைத் தாக்கி கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். கிழக்கு மாகாணப் பொலிஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டு அவற்றிலிருந்த ஆயுதங்கள் புலிகளினால் பறிக்கப்பட்டன. வவுனியா, ஒட்டுசுட்டான், மன்னார் பொலிஸ் நிலையங்களும் தாக்கிக் கைப்பற்றப்பட்டன. யாழ்ப்பாணக்குடாநாட்டில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டன. இரண்டாவது ஈழ யுத்தம் கிழக்கில் தோன்றி வவுனியா, மன்னார், கிளிநொச்சி யூடாக யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தது.

யாழ்பாணக்கோட்டையைச் சுற்றி ஏற்கனவே விடுதலைப் புலிகள் பலமான காவரண்களை அமைத்துக்கொண்டிருந்தனர். கோட்டைக்கு மிக அருகிலேயே அக்காவலரண்கள் அமைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தன. அக்காவலரண்களிலிருந்து எலிவளைகள் போன்ற சுரங்கப் பாதைகள் பாதுகாப்பான கட்டிடங்களுக்கு அடியாகச் சென்றன. அவற்றின் ஊடாக இலகுவில் காவலரண்களை வந்தடையவும் பலப்படுத்தவும் முடிந்தது. அக்காவலரண்களும் அவற்றினை இணைக்கும் பங்கர்களும் பலமான காங்கிரீட் கலவையால் கட்டப்பட்டிருந்தன. பல உயிரிழப்புகளின் மத்தியில் இந்த அரண்களைப் புலிகள் காலத்திற்குக்காலம் பலப்படுத்தியிருந் தனர். ஸ்ரீ லங்கா-புலிகள் யுத்தம் ஆரம்பமானதும் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து எவரும் வெளிவரவோ, உட்செல்லவோ முடியாதளவிற்கு புலிகளால் தடை விதிக்க முடிந்தது.

12, ஜூன் பலாலியிலிருந்து வந்த ஹெலிகொப்டர் ஒன்று கோட்டைக்குள் இறங்க முயன்றது. வழமைபோல் அதற்குப் பாதுகாப்பளிக்க கோட்டை இராணுவத்தினர் வெளியில் வர முயன்றனர். வரவேண்டாமெனப் புலிகளால் சைகை மூலம் அவர்களுக்குப் பணிப்பு வழங்கப்பட்டது. அவர்கள் திரும்பிச் சென்றனர். ஹெலியும் தரை இறங்காது திரும்பிச்சென்றது. அன்று தான் இரு பகுதியினருக்குமிடையிலான யுத்தமேகம் கோட்டை அயலில் பரவிக்கவிந்தது.

அன்றிரவு யாழ்ப்பாணப்பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டு வந்ததையறிந்த தால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தினர் எப்பொழுதும் கைவிட்டு ஓடும் தயார் நிலையில் இருந்துள்ளனர். புலிகள் விலகு மாறு கூறியதும் பொலிசாரில் ஒருசிலர் தவிர மற்றவர்கள் அனைவரும் யாழ்ப்பாணக் கோட்டைப்பக்கமாக ஓடிக் கோட் டைக்குள் புகுந்து கொண்டனர். ஒருசிலர் யாழ்ப்பாணப் பக்க மாக ஓடிச்சென்றனர். எல்லாராலும் யாழ்ப்பாணப் பக்கமாக ஓடிச்செல்ல முடியவில்லை. ஏனெனில் அச்சுற்றாடலில் துப்பாக்கி வேட்டுக்களும் சன்னங்களின் பரவலும் காணப்பட்டன. நூறு தமிழ்பேசும் பொலிசார் வரையில் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். நடக்கப்போவது தெரிந்திருந்தால் சில வேளைகளில் அதற்குள் புகாது இருந்திருப்பர். கோட்டையின் பிரதான வாயில் அன்று மூடப்பட்டது. எரிப்பதற்காகக் கோட் டைக்குள் பறிக்கப்பட்டிருந்த இரண்டு லொறிச்சுமை விறகுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான வாயின் முன் அடுக்கப்பட்டு மூடப்பட்டது. வாகனங்கள் வாயிலோடு அரணாக நிறுத்தப்பட்டன.

16, ஜூன், யுத்த நிறுத்தம் அமுல் என ஸ்ரீ லங்கா அரசு அறிவித்த அன்றே யாழ்ப்பாணக்கோட்டையிலிருந்து கண்மூடித் தனமாக ஷெல் வீச்சுக்கள் பரவலாக இடம்பெற்றன. யாழ்ப் பாணம் நகரம் திகிலடைந்தது. மக்கள் சிதறி ஓடினர். கோட்டைச் சுற்றாடலில் நின்றிருந்த மூன்று போராளிகள் மரணமடைய நேர்ந்தது அத்துடன் டாக்டர் சபாரத்தினம் என்பவர் உட்பட மூன்று பொதுமக்களும் பலியாகினர். 25 பேர் வரையில் கடுங் காயங்களுள்ளாகினர். புலிகள் தமது ஏவுகணைகளை யாழ் கோட்டை நோக்கிச் செலுத்தினர்.

18, ஜூன். ஸ்ரீ லங்கா அரசு யுத்தப்பிரகடனத்தைச்செய்தது. அத்துடன் தளபதிகளுக்கு அதிக அதிகாரத்தையும் வழங்கியது, ஒவ்வொரு பிராந்திய ஸ்ரீ லங்கா இராணுவத்தளபதிகள் தாம் விரும்பியவாறு தீர்மானமெடுக்க அரசு அனுமதித்தது. ஸ்ரீ லங்கா அரசின் யுத்தப்பிரகடனத்தை அடுத்து விடுதலைப்புலிகள் யாழ் கோட்டை மீதான தாக்குதல்களை ஆரம்பித்தனர். அன்றிரவு 12-30 மணிக்கு யாழ்ப்பாண நகரத்தையும் அதன் சுற்றாடலை யும் அதிர வைத்து எல்லாரையும் விழிக்க வைத்த பெரும் குண்டுவெடிப்புச்சத்தம் கோட்டைப்பக்கமிருந்து எழுந்தது. கரும் புலிகள் மருந்து திணிக்கப்பட்ட லொறி ஒன்றினை கோட்டை யின் கடற்கரைப்பக்கமான, காங்கிறீட்கற்களால் பலமாக அடைக் கப்பட்ட கோட்டையின் நீர்வாயிலில் (Water Gate) மோதினர். (பின்னர் இந்த வாயிலை உடைத்துக்கொண்டுதான் ஸ்ரீ லங்கா இராணுவம் கோட்டையைவிட்டுத் தப்பி ஓடியது). லொறி சித றியது முயற்சி வெற்றியளிக்கவில்லை. கோட்டையிலிருந்து ஷெல்கள் பறந்தன. யாப்பாண மக்கள், ஆஸ்பத்திரி நோயாளர் அனைவரும் மூட்டை முடிச்சுக்களுடன் இடங்களைவிட்டு வெளி யேறினர்.

இந்நிகழ்வின் பின்னர் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத் தில் குண்டுவெடிப்புச் சத்தம் ஓயவில்லை. விடுதலைப்புலிகள் யாழ் கோட்டையைச் சுற்றி ஒன்பது காவலரண்களை அமைத் திருந்தனர். முதலாவது காவலரண் பண்ணைச் சந்தியில் திறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் துணிச்சலுடன் அமைக்கப்பட்டு, சுரங்கப்பாதை மூலம் பண்ணைப்பொலிஸ் நிலைய விடுதிகளுடன் இணைக்கப்பட்டிருந்தது. இரண்டாவது காவலரண் தொலைத்தொடர்பு நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இதனைப் பெண் புலிகள் நிர்வகித்தனர். மூன்றாவது காவலரண் கொட்டடி இடிகாட்டிலும், நான்காவது காவலரண் பெரிய தபாற்கந்தோர் கட்டிடத்திலும், ஐந்தாவது காவலரண் வீரசிங்க மண்டபக் கட்டிடத்திலும், ஆறாவது காவலரண் திறந்தவெளியரங்கிலும், ஏழாவது காவலரண் கோட்டைக்கு மிக அருகில் துரையப்பா ஸ்ரேடியத்திலும், ஒன்பதாவது காவலரண் யாழ் பொலிஸ் நிலையத்திலும் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றினைவிட கோட்டையைச் சுற்றியுள்ள அனைத்துக்கட்டிடங்களிலும் புலிகள் காவலிருந்தனர். வடக்குப் பக்க காவலரண்களிலிருந்து யாழ்ப்பாண நகரத்திற்கு நிலத்தினடியாக வரச்கூடியளவிற்கு எலிவளைகளான சுரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இக்காவலரண்களோடு சேர்ந்த முற்றுகையை யாழ்ப்பாண மாவட்டத்தளபதி பானு வழிநடத்தினார்.

போர்த்துக்கேயர் ஆயிரம் பேர் வரையில் கோட்டைக்குள் அகப்பட்டிருக்க ஒல்லாந்தப்படைகள் யாழ் கோட்டையை முற்றுகையிட்ட வரலாற்று நிகழ்வை விடுதலைப்புலிகளின் முற்றுகை நினைவூட்டியது. கோட்டைக்குள் இருப்போருக்கு வெளியிலிருந்து உணவு, மருந்து, ஆயுதங்கள் எதுவும் செல்லாது தடுப்பதன் மூலம் சரணடைய வைப்பதற்காக ஒல்லாந்தக் கொமுசாறி வன்கோயன் செய்த அதே யுக்தியை தளபதி பானு நடைமுறைப்படுத்தினார்.

யாழ் கோட்டை முற்றுகையை முறியடிப்பதற்காக ஸ்ரீ லங்கா இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளும் சேர்ந்து கூட்டாகத் தம் முழுப்பலத்தையும் பிரயோகித்தன. தினமும யாழ்ப்பாண நகரத்தின் மேல் வந்த விமானங்கள் ஓய்வு ஒழிச்சலின்றிக் குண்டு மாரி பொழிந்தன. புலிகளின் காவலரண்களைத் தகர்த்தெறிவதற்காக தம் முழுப்பலத்தையும் பிரயோகித்தன. ஆயிரக்கணக்கான தொன் குண்டுகள் இம் முயற்சியில் பயன்படுத்தப்பட்டன. புலிகளின் காவலரண்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினால் எதிர்பார்த்தளவு சேதப்படுத்த முடியவில்லை. கட்டிடங்கள் சிதைந்தன. யாழ்ப்பாண நகரம் இக்குண்டு வீச்சுக் களினால் முற்றாக நாசமாகியது. எந்த ஒரு கட்டிடமும் எஞ்சவில்லை அனைத்தும் தகர்ந்து போயின. குருநகர், பாஷையூர், மெயின் றோட் பகுதிகள் முற்றாகப் பாதிக்கப்பட் டன. குருநகரில் எந்த ஒரு கட்டிடமும் எஞ்சவில்லை. நகரத் திலிருந்து அரசடி வீதி வரையிலான பகுதிகள் அதிகம் குண்டு வீச்சுக்களுக்குள்ளாகின. ஏராளமான வீடுகள், பாடசாலைகள், சந்தைகள், தியேட்டர்கள், கோயில்கள், மசூதிகள், வைத்திய சாலைகள் எதுவும் இக்குண்டு வீச்சுக்களுக்குத் தப்பவில்லை சகடை என அழைக்கப்பட்ட வை-12 விமானம் வீசிய குண்டு கள் பாரிய கட்டிடச் சேதத்தைத் தோற்றுவித்தன. அவ்ரோ விமானங்கள் வீசிய பீப்பாக்குண்டுகள், பொம்பர்கள் வீசிய குண்டுகள், ஹெலி மூலம் நிகழ்த்திய றொக்கட் தாக்குதல்களால் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். விடுவாசல்களை இழந்து அனாதைகளாகினர். அவயவங்களை இழந்தனர்.

விமானக்குண்டு வீச்சுக்கள் பலவாறிருந்தன. நேபாம் குண்டுகளை ஒத்த குண்டுகளும், எரிகுண்டுகளும் வீசப்பட்டன. கண்மூடித்தனமாக வீசப்பட்டன. ஒரு சட்டத்தில் யாழ்ப்பாணத் தின் பல பகுதிகள் மீதும் மலக்குண்டுகள் வீசப்பட்டன. தம சார்பான தினசரிப் பத்திரிகைகளையும் விமானங்களிலிருந்து அவர்கள் கட்டுக்கட்டாக வீசினர். இறுதி நேரத்தில் பொம்பர் களிலிருந்து றொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. வீதிகளில் சென்று கொண்டிருந்த எதுவுமறியா அப்பாவி மக்கள் பலர் பலியாக நேர்ந்தது. விமானக் குண்டு வீச்சினால் நிகழ்ந்த பரிதாபகரமான துயர மரணங்கள் சில குறிப்பிடத்தக்கன.

கொக்குவிலில் விமானங்கள் நிகழ்த்திய குண்டு வீச்சினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் பலியாகினர். அவர்களது அனைத்து சடலங்களும் ஒரே குழியில் இடப்பட்டபோது அக் கிராமமே அழுதது. ஒரே நேரத்தில் பத்து வானூர்திகள் வரை யில் குண்டுகளை வீசியிருக்கின்றன. அக்குண்டுவீச்சினால் அம்பலவாணர் வீதியில் இருவர் உடல்கள் சிதறிப் பலியாகினர். யாழ் புகையிரதச்சந்தியில் குண்டு வீச்சினால் எட்டுப்பேர் உயிரிழந்தனர். கிளிநொச்சிக் குடியேற்ற உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. சதாசிவம் இக்குண்டு வீச்சில் மரணமடைந்தார். யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகில் நிகழ்ந்த குண்டு வீச்சில் நிலவளவை யாளர் திருஞானசம்பந்தர் பலியாக நேர்ந்தது. அரசடிவீதியில் நிகழ்ந்த றொக்கட் தாக்குதலில் பொன்னுத்துரை வத்சலா என்ற இளம் பெண்ணும், ஆறுமுகம் பரமேஸ்வரன் என்ற வங்கியாளரும் அவலமாகச் செத்தனர். நீராவியடியில் நிகழ்ந்த சகடைக்குண்டுவீச்சில் கோ. இராசப்பு என்ற தந்தையும் கனடாவிற்கு மறுநாள் மணமகளாகப் பயணப்படவிருந்த பெண் இ. சித்திராவும் அநியாயமாக இறந்தனர்.

விமானக்குண்டு வீச்சுக்களினால் கோட்டைச் சுற்றாடலில் மட்டுமன்றி வெளியிடங்களிலும் பல பாடசாலைக்கட்டிடங்கள் அழிந்தன. யாழ் மத்திய கல்லூரியின் பல கட்டிடங்கள் சிதைந்து போயின வேம்படி மகளிர் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, சேன் ஜோன்ஸ் கல்லூரி என்பன பாதிப்புற்றன. யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சில பகுதிகள் தரைமட்டமாகின. இந்துக்கல்லூரியின் ஒரு பகுதி சிதைந்துபோனது. யாழ்ப்பாண வைத்தியசாலையின் பல கட்டிடங்கள் பாதிக்கப்பட்டன. தேசியசேமிப்பு வங்கியும் மக்கள் வங்கியின் பிரதான அலுவலகமும் தரைமட்டமாகின. யாழ்ப்பாண மாநகரசபைக்கட்டிடங்கள் பல குண்டுவீச்சினால் தொடர்ந்து சிதைந்து போயின. வெலிங்டன், வின்சர், ரியோ, சாந்தி, றாணி ஆகிய தியேட்டர்கள் முற்றாக எரிந்து அழிந்தன. யாழ் ஆயர் இல்லம், ஆசனக்கோயில் என்பன குண்டு வீச்சினால் பலத்த சேதங்களுக்குள்ளாகின. பிலிப் நேசிங் ஹோம் முற்றாகத் தகர்ந்தது. ஆயிரக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகின. தொடர்ந்து நிகழ்ந்த குண்டு வீச்சுக்களின் அதிர்வினால் வெடிப் படையாத வீடுகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் இன்றில்லை.

தமிழ்ப்பகுதிகளில் யுத்தம் நிகழ்ந்து வரும் வேளையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா, ''அரசின் கட்டுப்பாட்டில் விமானப்படைகள் இல்லை'' என அறிவித்தார். மூர்க்கத்தனமான விமானக் குண்டுவீச்சினைக் கட்டுப்படுத்து மாறும் நிறுத்துமாறும் வெளிநாட்டு தாபனங்கள் கோரியபோது அவ்வாறான பதில் அவரால் அளிக்கப்பட்டது. யுத்த நிறுத்தத்தை உடன் கைக்கொள்ளுமாறு கேட்டபோது பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன ''கடைசிப் புலியைப்பிடிக்கும் வரை போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும்'' என்றார். இராணுவத் தீர்வை விடுத்துப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பியுங்கள் என்றபோது, ''ஆயுதங்களைக் கைவிட்டால் தான் புலிகளுடன் பேச்சு'' என்றும், ''கோட்டை முகாம் முற்றுகையைப் புலிகள் கைவிட்டால் புலிகளுடன் பேசத்தயார்'' என்றும் அறிவித்தார் இத்தனைக்கும் விடுதலைப்புலிகள் ''சுயநிர்ணய உரிமை, அரசியல் அதிகாரம் உடைய மாநிலசுயாட்சியை மட்டுமே இனிப் பரிசோதிக்க முடியும் என்றும், மாகாணநிர்வாகத்தை ஏற்க முடியாது'' என்றும் அறிவித்தனர்.

இவற்றிடையே யாழ் கோட்டை முற்றுகையும் கோட்டையைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளும் கோட்டை முற்றுகையிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளும் இருசாராராலும் மேற்கொள்ளப்பட்டன. யாழ் கோட்டைக்குள் சிக்கியுள்ள இராணுவத்தினருக்கும், அதற்குள் புகுந்துகொண்ட நூறு பொலிசாருக்கும் உணவு பெரும் பிரச்சனையாக மாறியது, புலிகளின் பசிலன் 2000 குண்டின் தாக்குதலும் ஏனைய ஏவுகணைகளின் தாக்குதலும் ஏற்படுத்திய மரணங்களும் காயமடைந்தோரும் பெரும் பிரச்சனையாக உருவெடுத்தன. பயம், பீதி, போதிய உணவின்மை, போதிய ஆயுதங்களின்மை, மருந்துகளின்மை, உறக்கமின்மை கோட்டைக்குள் அகப்பட்டவர்களை வெளியேறக்கச் செய்து வந்தன. அவர்களுக்குத் தேவையான உணவுப்பொதிகளை விமானங்களிலிருந்து போடுவதற்கு ஸ்ரீ லங்கா அரசு முயன்றது' வானத்திலிருந்து குறிப்பிட்ட உயரத்திற்கு அப்பாலிருந்து இப்பொதிகளைப் போட வேண்டியிருந்தது புலிகளின் கலிபர் தாக்குதலிற்குள்ளாகாத உயரத்தில் நின்றபடி பறந்தபடி உணவுப்பொதிகளையும் மருந்துப்பொதிகளையும் சிலவேளைகளில் சன்னப்பொதிகளையும் இட நேர்ந்தது. இடப்படுகின்ற பொதிகளில் சில கோட்டைக்கு வெளியில் விழுந்தன. சில கோட்டைக்குள் விழுந்தன தொலைத்தொடர்புக் கோபுரத்தின் உதவியுடன் இறுதி நாட்களில் விமானங்கள் உணவுப்பொதிகளை இலக்காக இட்டன. ஆனால் அதனைப் புரிந்துகொண்ட புலிகளின் தாக்குதலால் அத்தொலைத்தொடர்புக் கோபுரம் முற்றாகச் சரிந்து விழுந்தது. அதன் பின்னர் கோட்டைக்குள் உணவுப் பொதிகளை இடுவது சிரமமானதாக மாறியது. உணவுப்பற்றாக்

குறை ஏற்பட்டது. சிலகாலம் வெறும் சோறும் உப்பும் தான் அங்கிருந்தோருக்கு உணவாகக்கிடைத்தன. கோட்டைக்குள் புகுந்த 75 தமிழ்ப்பொலிசாரும் 25 முஸ்லீம் பொலிசாரும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் பணிக்கப்பட்ட வேலைகளைச் செய்ய வேண்டியவர்களாயினர் இப்பொலிசாரே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் காவலரண்களின் காவலிற்கு நிறுத்தப்பட்டனர்.

தமிழ்ப்பொலிசார் மீது இராணுவத்தினருக்கு நம்பிக்கை யற்ற நிலை இருந்தது. இவர்கள் இருவர் சந்தித்து நீண்டநேரம் கதைத்தால் போதும், இவர்களைப்பிரித்து வெவ்வேறு பகுதிகளில் உள்ள காவலரண்களுக்கு மாற்றிவிடுவார்கள். பல நாட்கள் பொலி சாரைக் காவலரண்களில் விடும்போது அவர்கள் அரண்களில் கடமைநேரத்தில் நித்திரை செய்வதும் உண்டு இது இராணு வத்தினருக்குத் தெரிய வந்தால் தண்டனை வழங்கப்பட்டு மேலும் பல நாட்கள் தொடர்ந்து காவலரண்களில் நிறுத்தப் படுவார்கள் மிகவுயர்ந்த தண்டனையாக கோட்டை மதிலின் மேல் ஏறிநிற்கும்படி பணிக்கப்படுவார்கள். இப்படி ஏறி நின்ற சில பொலிஸ்காரர் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் கொல்லப் பட்டனர். கொல்லப்படும் பொலிஸ், இராணுவத்தினரின் உடல்களை முகாமின் ஒதுக்குப்புறங்களில் புதைப்பார்கள். சிறு காயம் அடைந்தவர்களுக்கு மட்டும் இங்கு மருத்துவ சிகிச்சை யளிக்க வசதியிருந்தது.

போர் மூண்ட காலத்தில் கோட்டையின் உள்ளே தமிழ்ப் பொலீசாரால் ஓரளவு சுதந்திரமாக நடமாடமுடிந்தது. ஆனால் முகாம் மீது புலிகள் மேற்கொண்ட பசீலன் 2000 ஷெல் தாக்கு தல்களைத் தொடர்ந்து இராணுவத்தினர் நிலை தடுமாறி பதுங்குழிகளில் கூடியளவு நேரத்தைக் கழித்தனர். காவல் அரண்களில் இருப்பவர்களும் அந்தந்த இடங்களிலேயே பல நாட்கள் நிலை கொண்டனர். மலம் கழிப்பதற்காக மட்டும் அரண்களைவிட்டுக் கீழே இறங்குவர். இதனால் இவர்கள் குளிப் பதற்கோ ஓய்வெடுப்பதற்கோ நேரம் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் தாக்குதலால் கட்டிடங்கள் உடையும் சமயங்களில் கட்டிடக் கூரைப்பகுதி மரங்களை இராணுவத்தினர் சேகரித்துத் தமது பதுங்கு குழிகளைப் பலப்படுத்துவார்கள். விமானபடையின் அவ்ரோ வீசும் பீப்பா குண்டுகள் ஒரிரு தடவைகள் கோட்டை முகாமிற்குள்ளும் விழுந்தன. ஒருநாள் உள்ளே விழுந்த குண்டினால் இரு இராணுவத்தினரும் ஒரு பொலிசாரும் கொல்லப்பட்டனர். மீண்டும் ஒருநாள் பீப்பாக்குண்டு விழுந்து வெடித்ததில் ஒரு இராணுவவீரர் கொல்லப்பட்டார். இச்சந்தர்ப்பங்களில் ஏனைய இராணுவத்தினர் விமானப்படைமீது கோபம் அடைந்தனர். புலிகள் கோட்டைமீது தாக்குதலைத் தீவிரப்படுத்தியபோது பலாலி முகாமிலிருந்து கோட்டைப்பகுதி நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் குண்டுகள் கோட்டையின் உள்ளும் விழுந்து வெடித்ததால் இரு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் இதனால் சினங்கொண்ட இராணுவத்தினர் தகாத வார்த்தைகளால் பலாலி இராணுவத்தினரையும் கோட்டை முகாம் உயர் இராணுவ அதிகாரிகளையும் தூஷித்தனர்.

முற்றுகையின் இறுதிக்காலங்களில் கோட்டை முகாமில் துப்பாக்கி ரவைகள் ஓரளவு இருந்தபோதிலும் ஷெல் குண்டுகள் தீர்ந்துவிட்டன. 5 அல்லது 6 ஷெல்களை மட்டுமே அவசரதேவைக்காக வைத்திருந்தனர். போதிய உணவின்மையால் சில வேளைகளில் 4 அல்லது 5 நாட்கள் உணவு எதுவுமின்றி இராணுவத்தினரும் பொலிசாரும் இருந்தனர். உள்ளே விழும் உணவுப் பொதிகளில் உள்ள விசேட உணவு வகைகள் உயர் இராணுவ அதிகாரிகளால் எடுக்கப்பட்டன.

## 3

16, ஜூன், 1990.

கோட்டை முற்றுகை தொடர்ந்தது. கோட்டையின் ஐந்து கொத்தளங்களிலும் பாரிய சுடுபடைக்கலங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. கோட்டை மதிற் சுவரில் மண்மூடைகள் நெருக்

கமாக இடைவெளிகளின்றி அடுக்கி இறுக்கப்பட்டிருந்தன. மண்மூடைகளை அரணாகக் கொண்டு நூற்றுக்கணக்கான துப்பாக்கி சுடுந்தளங்கள் அமைந்திருந்தன.

கோட்டையின் தென்பக்கமான கடற்கரை வீதியைத் தவிர ஏனைய மூன்று பக்கங்களிலும் விடுதலைப்புலிகளின் காவலரண்கள் பலமாக அமைக்கப்பட்டிருந்தன. பண்ணைச்சந்தி, தொலைத்தொடர்பு நிலையம், கொட்டடி இடுகாடு, பெரியதபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம், திறந்தவெளி அரங்கு, பொது நூல் நிலையம், விளையாட்டரங்கு, பொலீஸ் நிலையம் ஆகிய ஒன்பது காவலரண்களில் புலிகள் நிலை கொண்டிருந்தனர். அத்தோடு கோட்டை முற்றுகையைப் பலப்படுத்துவதற்காக மண்டை தீவிலும் விடுதலைப்புலிகளின் படையணி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. கோட்டைக்குள்ளிருந்து இராணுவம் வெளிவராது காத்து நின்ற நிலைப்பாட்டிலிருந்து, கோட்டையைக் கைப்பற்றும் முதலாவது முயற்சி 16, ஜூன் 1990 அன்று நள்ளிரவு 12 மணிக்கு நிகழ்ந்தது. சக்கை நிரப்பப்பட்ட (வெடி மருந்து) லொறி ஒன்று கடற்கரைப்பக்கக் கோட்டை மதிலோடு மோதியது யாழ்ப்பாண நகரையே அந்த வெடிச்சத்தம் உலுக்கி எழுப்பியது. அதனைத் தொடர்ந்து போராளிகள் கோட்டையைக் கைப்பற்ற விரைந்து முன்னேறினர். மண்மூடைகள் நிரப்பப்பட்ட வாகனங்களின் துணையுடன் கோட்டை மதிலை வெற்றி கொள்ள முனைந்தனர். முயற்சி வெற்றி பெறவில்லை. அந்த முயற்சியில் அ. சத்தியசீலன் (கப்டன் அந்தோனி), கா. சேனாதிராசா (கப்டன் சேரன்), கு. குமாரசங்கர் (லெப். பூபதி), செ. உருத்திரதாஸ் (லெப். வக்கீல்), நந்தபாலன் (சுருளி) ஆகிய போராளிகள் களப்பலியாக நேர்ந்தது.

05, ஒகஸ்ட், 1990.

யாழ்ப்பாணக் கோட்டைமீதான பெரிதளவிலான தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் திட்டம் தீட்டினர். கோட்டையின் பலத்தையும் பலவீனத்தையும் முதலில் பரிசீலித்துக் கொண்டனர். அகழிகளுடன் கூடிய கோட்டையின் மூன்று பக்கங்களும் பலமானவை; ஆக கோட்டையின் கடற்கரை வீதிப்பக்கமே பலவீனமானதென மதிப்பிட்டனர். கோட்டையின் சுற்று மதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் நிலைகொண்டிருந்த ஸ்ரீ லங்கா இராணுவத்தினர், முற்ற வெளிக்குள் எவரையும் பிரவேசிக்காது குண்டுகளைப் பொழிந்து தள்ளினர். இவற்றை மீறிப் போராளிகளால் கோட்டைக்குள் ஏவப்பட்ட 'பசிலன் 2000' குண்டுகள் இராணுவத்தினருக்குப் பெருஞ் சேதத்தை ஏற்படுத்தியிருந்தன. கோட்டையின் கொத்தளங்களிலிருந்து பீரங்கிகள் அதற்குப் பதிலாக புலிகளின் காவலரண்களை நோக்கி ஏவப்பட்டன.

இரண்டாவது தாக்குதலிற்கு விடுதலைப்புலிகள் தாமே தயாரித்த டாங்கிகளைப் பயன்படுத்தினர். பாரந்தூக்கிகளையும், புல்டோசர்களையும் டாங்கிகளாக மாற்றினர் இவற்றைப் பயன்படுத்திக் கோட்டையை வெற்றிகொள்ளத் திட்டமிடப்பட்டது. யாழ்ப்பாணத்தளபதி பானு தலைமைதாங்கி இத் திட்டத்தைத் தயாரித்தார்.

*05, ஓகஸ்ட், 1990,* பின்னிரவு நேரம் தாக்குதல் ஆரம்பமானது. 'பசிலன் 2000' எறிகணைகள் கோட்டைக்குள் சரமாரியாக ஏவப்பட்டன. அவை கோட்டைக்குள் விழுந்து வெடித்த சத்தத்தால் அப்பிரதேசம் அதிர்ந்தது. கோட்டைக்குள் அவலக்குரல்கள் எழுந்தன. போராளிகளின் டாங்கிகள் இவற்றிடையே கோட்டை மதில்களை நோக்கி முன்னேறின. தொலைத்தொடர்பு நிலையப்பக்கமிருந்து பண்ணைச்சந்திக் கூடாகவும் பொலீஸ் நிலையப்பக்கமிருந்தும் போராளிகளின் டாங்கிகள் பலத்த சத்தத்துடன் கடற்கரை வீதியில் பிரவேசிக்க நகர்ந்தன. நூல்நிலையப் பக்கத்திலிருந்து பாரிய வாகனம் (கவசமிடப்பட்டது) ஒன்று முனியப்பர் கோயில் பக்கமாயும், காங்கேசன்துறை வீதியிலிருந்து இன்னொரு புல்டோசர் (கவசமிடப்பட்டது) வடக்குப்பக்கமாயும் கோட்டையை நோக்கி நகர்ந்தன. முனியப்பர் கோயில் பக்கமாயும், காங்கேசன்துறை வீதியிலிருந்து கோட்டையின் வடபக்கமாயும் பிரவேசித்த புல்

---

★ இனிவரும் விபரங்கள் விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' (குரல் 17) ஆவணி- புரட்டாதி 1990 - இதழிலிருந்தும், ஸ்ரீ லங்கா அரசின் அறிக்கைகளிலிருந்தும் கோர்த்துத் தரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோசர்களின் காற்றடைந்த டயர்கள் இலகுவில் இராணுவத் தினரின் தாக்குதலிற்குள்ளாகி நகர முடியாது போய்விட்டன.

இராணுவமும் போராளிகளும் துப்பாக்கிகளால் ஒருவரை ஒருவர் நோக்கிச் சுட்டுத்தள்ளினார்கள். போராளிகளின் கவச வாகனங்கள் கோட்டை மதிலை அண்மிக்குமுன்னரே குண்டு வீச்சு விமானங்களும் இராணுவத்தின் உதவிக்கு வந்துவிட்டன. கொத்தளப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட பீரங்கிக்குண்டுகளும், விமானங்கள் வீசிய ரொக்கட் குண்டுகளும் போராளிகளின் கவசவாகனங்களைக் குறிவைத்தன. எங்கும் ஒரே புகை மண்டலம். கடற்கரை வீதியில் நகர்ந்து கொண்டிருந்த கவச வாகனங்கள் (பாரந்தூக்கி) மெதுவாக நகர்ந்தன. பாரந்தூக்கி கள் மூலம் மேலே சென்று மதிலேறப் போராளிகள் தயாராக விருந்தார்கள். ஆனால், அது சாத்தியப்படாது போனது.

விமானக் குண்டுவீச்சினால், பண்ணைச்சந்திக்கு அருகே வீதியின் நடுவில் ஏற்பட்ட பாரிய குழி ஒன்றினுள், முன்னேறிச் சென்ற சிறிய பாரந்தூக்கி விழுந்து போனது. அதன் பின்னால் வந்த பெரியபாரந்தூக்கி அதனை இடித்துத்தள்ளியபடி முன்னேறியது. பண்ணைச்சந்திப்பக்கமிருந்த கொத்தளத்தைத் தாண்டி, கோட்டையின் சுடற்பக்க நீர்வழி இருக்கும் மதிலை நெருங்கியது. இந்த நீர்வழி கொங்கிறீட்கற்களால் அடைக்கப்பட் டிருந்தது. 16, ஜூன், 1990, நள்ளிரவு வேளையில் இந்த நீர்வழிப்பாதையோடு வெடிமருந்துகளுடன் மோதிய லொறி மதிலைத் தகர்க்க முடியாது போனது. அக்குண்டு வெடிப்பினால் ஏற்பட்டிருந்த மிகப்பெரிய பள்ளம் ஒன்றினுள் இரண்டாவது பெரியபாரந்தூக்கியும் வீழ்ந்துபோனது.

பாரந்தூக்கிகள் மூலம் மதிலேறப் போராளிகள் எண்ணியிருந் தார்கள். அந்தத்திட்டம் கைக்கொள்ளாமல் போனதும், பெரிய தொரு ஏணி மூலம் மதிலேறிக் கோட்டைக்குள் புகத் தீர்மானித் தார்கள். பெரிய ஏணியை மதிலோடு சார்த்தி ஏறத்தொடங்கினர். கொத்தளப்பகுதியிலிருந்து துப்பாக்கிச் சன்னங்கள் இவர்களை நோக்கிச் சரமாரியாகப் பாய்ந்தன. மேலிருந்து கைக்குண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசப்பட்டன. அவற்றால் போராளிகள் காயமடைந்ததுடன், ஏணியும் உடைந்து விழுந்தது. உடைந்த ஏணி பொருத்தப்பட்டு மதிலோடு சார்த்திய போது ஏணியின் உயரம் மதில் உச்சியை எட்டவில்லை. போராளிகள் சிலர் அருகிலுள்ள அகழிக்கருகிலும், கடற்கரையிலும் நிலையெடுத்து மதில் மேலுள்ள இராணுவத்துடன் போரிட்டுக்கொண்டிருக்க, மதிலின் மேற்பகுதிக்குச்சில அடிகள் கீழே சுவரைப் பிளந்தபடி முளைத்திருந்த அரச மரத்தில் ஏணியை அசையாது பொருத்துவதில் வெற்றி கண்டனர். இயந்திரத்துப்பாக்கியை இயக்கியபடி கொத்தளத்தில் ஏறிய டயஸ், சீலன் ஆகியோர் அருகில் ஷெல்லொன்று வெடித்தது. சீலன் இருகால்களையும் இழந்து வீழ, டயஸ் சற்று முன்னேறி மடிய நேரிட்டது. கொத்தளப்பகுதியில் ஏறிய போராளிகளுக்கு உதவச்சென்ற கண்ணாடி, ஜொனி, புரட்சிமாறன், நெல்சன், அனீபா, ஜேம்ஸ், வசிட்டன், சந்துரு, பீலிப்ஸ், நிசாந்தன் ஆகியோர் குண்டடிபட்டு மதிலடிவாரத்தில் வீழ்ந்தனர். கொத்தளத்தின் மேற்பகுதியில் நிலையெடுத்திருந்த லோகனும், அனிபாவும் மரணமடைய நேரிட்டது.

கடற்கரை வீதிப்பக்கமாகக் கோட்டை மதில்மீது ஏறி நிலையெடுக்க நிகழ்ந்த போராளிகளின் முயற்சி தோல்வியில் முடிந்தாலும், இராணுவத்தினருக்கு கோட்டையின் பலம், பாதுகாப்புக் குறித்து மறு சிந்தனைக்கு இடமளித்தது.

அன்றிரவு கோட்டையின் பிரதான வாயிலைக் கைப்பற்றும் பொறுப்பைப் பெண் போராளிகள் ஏற்றிருந்தனர். பொலீஸ் நிலையக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த காவலரணிலிருந்து இத்தாக்குதல் தொடர்ந்தது. கோட்டை வாசலுக்கும் இந்தக் காவலரணுக்கும் இடையில் 40 யார் தூரமேயிருந்தது. போராளிகள் கோட்டைவாயிலைக் கைப்பற்ற முயற்சிப்பார்கள் என்பதை இராணுவத்தினர் தெரிந்திருந்தமையால், கோட்டை வாயில் பலப்படுத்தப்பட்டிருந்தது. விமானங்களும் கோட்டைவாசலை யடுத்த பகுதியைத் தமது பிரதான இலக்காகக் கொண்டிருந்தன.

கோட்டை வாயிலை நோக்கிய பாதையானது ஒடுங்கியது. பாதையின் இருபக்க கரைகளினூடாக பெண் போராளி சங்கீதாவின் தலைமையில் பெண்கள் படையணி துணிவுடன் முன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியது. பெண்கள் படையணிக்கு உதவியாக மறுபக்கத்தில் ஆண்போராளிகள் கோட்டைவாயிலின் அருகிலும், மேலேயும் இருந்த இராணுவ அரண்களைத் தாக்கி அவர்களை திசை திருப்பிக் கொண்டிருந்தார்கள். எனினும், கோட்டை வாயிலைக் கைப்பற்ற முயன்ற லெப். சங்கீதா, மாதங்கி, அநுரா, மாதுரி ஆகியோர் கோட்டைவாயிலிலேயே மரணமடைந்தார்கள்.

கோட்டைவாயிலுக்கு அருகேயிருந்த கொத்தளத்தைக் கைப்பற்றும் முயற்சியிலிருந்த போராளிகள், டாங்கிபோன்று அமைக்கப்பட்ட புல்டோசர் ஒன்றில் தென் பகுதிக் கொத் தளத்தை நோக்கி நகர்ந்தனர். விமானத்திலிருந்து வீசப்பட்ட வெளிச்சக்குண்டுகளிலிருந்து இந்தப் புல்டோசரின் நகர்வை இராணுவம் கண்டுகொண்டது. விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டொன்று புல்டோசரின் முன் பகுதியைத் தாக்கியது. போராளிகள் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தபடி தென்புறக் கொத்தளத்தையடைந்தனர். அதில் பதின்மூன்று போராளிகள் களப்பலியாக நேர்ந்தது. சருணாநிதி, சரத்பாபு, விக்ரம், கெனடி, நிசாந்தன், அலீப், சபேசன், மோகன், எட்றிச் ஆகியோர் அக்களப்பலியானவர்களில் அடங்குவர்.

தொலைத்தொடர்பு நிலையப் பகுதியிலிருந்து வடமேற்குக் கொத்தளப் பகுதியைக் கைப்பற்றும் முயற்சியிலீடுபட்டவர்களில் யசோ, பில்லா ஆகிய போராளிகள் பலியாகினர். காயமடைந்து மயக்க நிலையில் உயிருடன் இருந்த பெண் போராளி ஒருவர் காலையில் மயக்கம் நீங்கியும் வெளியேற முடியாத நிலையில் அடுத்தநாள் இரவு, ஏறக்குறைய 15 மணி நேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.

16, ஜூன், 1990 ஆம் நாள் யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தரப்பில் 27 போரளிகள் களப்பலியாகினர்.

# 4

யாழ்ப்பாணக்கோட்டை முற்றுகை ஸ்ரீ லங்கா அரசிற்குப் பெருந்தலையிடியாக அமைந்தது. 'கோட்டையை யார் வைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கிறார்களோ அவர்களுக்கே யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் இருக்கும்' என்பது போன்ற தன்மானக் கருத்துக்களையும் அரசு சார்பில் அவர்கள் கூறிக்கொண்டனர். எனவே கோட்டை விடயம் ஒரு கௌரவப்பிரச்சினையாக மாறியது. கோட்டைக்குள் அகப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படையினரைப் போசிப்பதும். அதற்காக நாளந்தம் யாழ்ப்பாணப்பகுதியில் விமானக் குண்டுவீச்சைத் தொடர்ச்சியாகச் செய்வதும் பெருஞ் செலவினைத் தரும் நடவடிக்கையாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கோட்டைக்குள் அகப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் ஒரு கட்டத்தில் தம் இயலாமை காரணமாக புலிகளிடம் சரணடைந்து விடுவார்களோ என் அச்சமும் தலை தூக்கியதால் ஸ்ரீ லங்கா அரசு கோட்டை முற்றுகையைத் தகர்ப்பதற்குப் பெருந் திட்டமொன்றினை உருவாக்கியது.

அதுவே, ''ஒப்பறேசன் போர்ட்'' ஆகும்.

யாழ் கோட்டைக்கு நேரெதிரே மண்டைதீவு இருக்கிறது. கோட்டைக்கும் மண்டைதீவுக்குப் இடையில் சிறுதீவு எனப்படும் நிலப்பகுதியுள்ளது. யாழ்ப்பாணக்கடனீரேரி மண்டைதீவுக்கும் கோட்டைக்கும் இடையில் ஆழங்குறைந்த கடலாகவுள்ளது. கோட்டையின் கிழக்கு, மேற்கு, வடக்குப்பகுதிகளில் எதுவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத ஸ்ரீ லங்கா இராணுவம், கோட்டைக்குத் தென்புறமாகப் பரந்திருந்த மண்டைதீவு, வேலணைத்தீவு ஆகிய இரு நிலப்பரப்புக்களின்சமதரையையும், நன்கு அரண் செய்யப்படாத நிலமையையும் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள முயன்றது. அதனால் தனது இராணுவ நடவடிக்கையக் காரைநகரிலிருந்து (காரைதீவு) ஆரம்பித்தது.

22, ஒகஸ்ட், 1990.

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து கடற்படையினர் வெளியேறத் தயாரானார்கள். அன்று அதிகாலையே ஹெலிக்கொப்டர்களும் சீபிளேன்களும் காரைதீவை வட்டமிடத் தொடங்கின. தாழப்பறந்து நோட்டமிட்டன சிறிது வேளையில் ஹெலிக்கொப்டர்கள் நிலத்தை நோக்கிச் சுடத்தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர்க் கடற்படை முகாமிற்கு அருகில் வாழ்ந்த மக்கள் இடம்பெயரத்தொடங்கினர். அதேவேளை ஊர்காவற்றுறைக் கடலில் கடற்படைக்கப்பல் ஒன்று விசைப்படகுகளில் இராணுவத்தினரை ஏற்றி ஊர்காவற்றுறையிலும் உருண்டி முனையிலும் குவிக்கத் தொடங்கியது. ஹெலி மூலம் ஊர்காவற்றுறையில் இராணுவம் இறக்கப்பட்டது. கண்மூடித்தனமாகச் சுட்டபடி இராணுவம் முன்னேறி நிலைகொண்டது. பொன்னாலை ஊடாகப் புலிகளுக்கு உதவிகள் வராது தடுப்பதற்காக ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் காரைநகரில் சிலவிடங்களில் முன்னேறிக் காவலரண்களை அமைத்துக்கொண்டனர். கடற்படை முகாமிலிருந்து வரும் வழியில் மக்கள் பலரை கைதுசெய்து தம்முடன் அழைத்து வந்தனர். கைதுசெய்த மக்களை தம்முன் மனிதக்கேடயமாகச் செல்லவிட்டு அவர்கள் முன்னேறி வந்தனர்.

ஊர்காவற்றுறையில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் முகாமிட்டனர். முப்பது வரையிலான கனரக வாகனங்கள் அவ்விடத்தில் குவிக்கப்பட்டன. ஊர்காவற்றுறையைவிட்டு மக்கள் வெளியேறி அயற்கிராமங்களுக்கு இடம்பெயரத்தொடங்கினர். விமானத்தாக்குதல்களும் ஹெலிச் சூடுகளும் ஷெல் தாக்குதல்களும் ஊர்காவற்றுறையிலிருந்து மேற்கொள்ளப்பட்டன. 24 ஆந் திகதி ஸ்ரீ லங்கா இராணுவம் மண்டைதீவை இலக்காக வைத்து முன்னேறத்தொடங்கியது. ஊர்காவற்றுறையிலிருந்து இருபிரிவுகளாகப் பிரிந்து வடக்கு வீதி வழியாகவும் தெற்கு வீதி வழியாகவும் விமானங்கள் குண்டுவீசிப் பாதுகாப்பளிக்க இராணுவம் முன்னேறியது. வழிகளில் அழிவுகளைச் செய்தபடி அராலிச்சந்தி, மண்கும்பான் சந்தி, அல்லைப்பிட்டிசந்தி என்பனவூடாக அல்லைப்பிட்டி அலுமினியத்தொழிற்சாலையை வந்தடைந்தது. மற்றப்பிரிவினர் வேலணை, சாட்டி ஊடாக மண்கும்பானை வந்தடைந்தனர். மண்கும்பானிலிருந்து இரண்டாகப்பிரிந்து கடற்கரையோரமாக ஒரு பிரிவினர் சிறிமுனைப் பகுதியூடாக மண்டைதீவை அடைந்தனர். மறுபகுதியினர் வீதியூடாக மண்டைதீவை அடைந்தனர். இராணுவம் சென்ற பகுதிகளில் உயிர்ச்சேதங்களும் சொத்தழிவுகளும் ஏற்பட்டன. நாரந்தனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணை, ஊர்காவற்றுறை மக்களை சுருவில் சென். மேரிஸ் தேவாலயத்திற்கு அகதிகளாகச் சென்று தங்குமாறு இராணுவத்தினர் ஹெலிமூலம் துண்டுப்பிரசுரங்கள் போட்டனர். மக்கள் அங்கு சென்று தங்கப்பயந்து உடுத்த உடுப்புக்களுடன் சாட்டி மாதாகோயிலில் அடைக்கலம் புகுந்தனர் மக்களில் சிலர் நாரந்தனைத் தேவாலயத்தில் தங்கினர். அவ்விடத்தில் பொம்பர் குண்டு வீச்சு நிகழ்ந்ததால் அங்கிருந்து அகன்று சுருவிலிற்குச் சென்றனர். சாட்டி மாதாகோயிலில் முப்பதாயிரம் மக்கள் வரையில் அகதிகளாகத் தங்கியிருந்தனர்.

இராணுவம் கண்ணில் கண்ட மக்களைச் சுட்டுக்கொண்டும் வெட்டிச்சரித்துக்கொண்டும் முன்னேறி வருகின்றது என்ற வதந்தி, ஓரளவு உண்மையும் விஷ ஜுரமாகப்பரவியதால் மண்கும்பானுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்தோடினர். சாட்டி மாதாகோயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகத் தங்கியிருந்தபோது, ஹெலி சுட்டதில் ஆறு பேர் வரையில் அவ்விடத்தில் பலியாக நேர்ந்தது. அதனால் இயலுமானவர்கள் பலர் இரவோடிரவாக வள்ளங்களில் ஏறி அராலித்துறையூடாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றனர்.

25 ஆந்திகதி பொம்பர்கள் தீவுப்பகுதிக் கட்டிடங்களை அழிப்பதில் ஈடுபட்டன. வேலணைத்தீவிலிருந்த சொற்ப கட்டிடங்களும் விமானக்குண்டு வீச்சினால் தரைமட்டமாக்கின. மண்கும்பான் பிள்ளையார் கோயில் தாக்கப்பட்டு சேதமடைந்தது.

மண்டைதீவை அடைவதில் பலத்த சிரமங்களை ஸ்ரீ லங்கா இராணுவம் எதிர்நோக்கியது. மிதிவெடிகளும் நிலக்கண்ணிகளும் அவர்களுக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தின. புலிகளின் பலத்த எதிர்ப்பினையும் சமாளிக்க நேர்ந்தது. எனினும் இராணுவத்தினர் மூர்க்கமாக மண்டைதீவுக்குள் புகுந்தனர். வடபுறமான பாதையூடாகவும், தென் புறமான கடற்கரையூடாகவும், மத்திய பரவையூடாகவும் இராணுவம் மண்டைதீவிற்குள் சுட்டுக்கொண்டு புகுந்தது. மண்டைதீவுக் கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருந்த கடற் கப்பல்கள் பிரங்கிகளைக் கக்க, விமானங்

கள் குண்டுகளைப் பொழிய இராணுவம் மண்டைதீவிற்குள் பிரவேசித்தது. மண்டைதீவு மக்கள் பொறிக்குள் அகப்பட்ட நிலையினை ஏய்தினர். பண்ணைத்தாம்போதியூடாகவோ, வள்ளங்கள் ஊடாக குருநகர், பாஷையூருக்கோ செல்ல முடியாத வாறு வியூகத்தினுள் அகப்பட்டுக்கொண்டனர். சின்னத் தீவிற்கு அப்பால் நின்றிருந்த கடற்கப்பல் உமிழ்ந்துகொண்டிருந்த பீரங்கிகள், யாழ்ப்பாணப்பரவைக்கடலை வள்ளங்களால் கடக்க இடமளிக்கவில்லை. கோட்டைப்பக்கமிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பண்ணைத்தாம்போதியில் கால்வைக்கவிடவில்லை.

மண்டைதீவைச்சேர்ந்த 1100 குடும்பங்களும் அல்லற்பட்டன. ஒருவிதமாக அல்லைப்பிட்டி பரவைக்கடலைக்கடந்து குழந்தைகள், பிள்ளைகள், பெண்கள், ஆண்கள் எனத் துணிந்தவர்கள் வேலணைத்தீவிற்குள் புகுந்தனர். மண்கும்பானில் அடைக்கலம் புகுந்தனர். நோயாளர், வயோதிபர், இடம்பெயர விரும்பாதவர்கள், சொத்து சுகம் என அவற்றினைவிட்டு வெளியேற விரும்பாதவர்கள் மண்டைதீவில் தங்கி, இராணுவத்தினரின் துப்பாக்கிகளுக்கு இரையாகினர். மண்டைதீவிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள், மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பாபா பள்ளிவாசல், பெரிய பள்ளிவாசல், சாட்டி மாதா கோயில் என்பனவற்றில் அகதிகளாகத்தஞ்சம் புகுந்தனர்.

மண்டைதீவுக்குள் பிரவேசித்த இராணுவத்தினர் மண்டைதீவுப் பிள்ளையார் கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த மக்களில் 6 ஆயிரம் மக்களை வரிசையாக நிற்க வைத்தனர். ஏசினர். சிலரைத் தாக்கினர். 50 ஆண்களைக் கைது செய்து அழைத்துச்சென்றனர். மண்டைதீவிலுள்ள பல வீடுகள் தகர்க்கப்பட்டன. குடிசைகள் அனைத்தும் எரியூட்டப்பட்டன. வீடுகளிலிருந்து பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. வாகனங்கள் எரிக்கப் பட்டன. மோட்டார்சயிக்கிள்கள் களவாடப்பட்டன. பங்கர்களுக்குள் இருந்த பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மண்டைதீவில் ஏறத்தாழ 50 பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அல்லைப் பிட்டிப்பகுதியில் 20 பேர் வரையில் கொல்லப்பட்டனர். மண்டைதீவின் தெற்குப்பகுதி வீடுகள் அதிகம் எரிக்கப்பட்டன. வேலிகள், மதில்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டன. எரிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லைப்பிட்டி மகாவித்தியாலயப் பிரதேசம் புல்டோசரினால் இடித்துத் தகர்க்கப்பட்டது. மண்டைதீவுக் கத்தோலிக்க தேவாலயப் பகுதி, அதனைச் சுற்றியிருந்த வீடுகள் கட்டிடங்கள் என்பன விமானக்குண்டுவீச்சினால் நிர்மூலமாக்கப்பட்டன.

26 ஆந்திகதி மண்டைதீவு சித்திவினாயகர் கோயில் கொடியேற்றம் நிகழவிருந்தது. இராணுவம் வந்ததால் திருவிழா நடைபெறவில்லை. இராணுவ ஆக்கிரமிப்பால் அங்கு சங்காரம் நிகழ்ந்தது. கோயிலின் குடையை இராணுவத்தினர் சௌறி நிழலாகப் பாவித்தனர். செத்துப்போன ஆடு, மாடுகளை திருமஞ்சனக்கிணற்றில் தூக்கிப்போட்டனர் கோயில் தேர்த் திருப்பணி மரங்கள் எரிக்கப்பட்டன. திருவிழாவிற்காக வாங்கிய பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயம் விமானத்தாக்குதலால் பலத்த சேதமடைந்தது. நற்கருணை நாதர் பெட்டி உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

அல்லைப்பிட்டி அலுமினியத்தொழிற்சாலைச் சுற்றாடலில் ஸ்ரீ லங்கா இராணுவம் பலமான முகாம் ஒன்றினை அமைத்திருந்தது. பனைமரங்கள், மின்சாரக்கம்பங்கள் என்பன தறிக்கப்பட்டு உயரமான சென்றிகள் அமைக்கப்பட்டன. அன்று மாலையே அவ்விடத்தில் ஹெலிவந்திறங்கிக்கூடியளவிற்கு முகாம் விஸ்தரிக்கப்பட்டது. அல்லைப்பிட்டிக்கிராமத்தின் எல்லைவரை அதாவது செட்டிக்கா வரை இராணுவ சென்றிகள் அமைக்கப்பட்டன. மண்டைதீவு மகாவித்தியாலயமும், றோமன் கத்தோலிக்கப்பாடசாலையும் இராணுவ முகாம்களாகப் பாவிக்கப்பட்டன. மாகவித்தியாலயம் பிரதான முகாமாகவிருந்தது. அவ்வித்தியாசாலையின் முன்னுள்ள பனங்கூடலிருந்த அத்தனை பனை மரங்களும் தறிக்கப்பட்டு சென்றிகள் இடப்பட்டன. புல்டோசர்களினால் முன்காணிகள் மட்டமாக்கப்பட்டன. அதனால் இந்த முகாமிலிருந்து கோட்டையைப் பார்க்க முடிந்தது. 3000 இராணுவத்தினர் வரையில் இங்கு தங்கியிருந்தனர் எனக்கூறப்படுகின்றது.

மண்டைதீவில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பயங்கரமான நேரடி மோதல் நிகழ்ந்தது. இம்மோதலில் 44 போராளிகள் களப்பலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினர். முகாம் சுற்றாடலில் வாழ்ந்த பொது மக்கள் பலர் காணமல் போயினர். பத்துப்பேரின் சடலங்கள் காணப்பட்டன. ஒரு கிணற்றில் சுட்டுக்கொல்லப்பட்ட 43 பேரின் சடலங்கள் இடப்பட்டு அவற்றின் மேல் எரு வண்டியோடு கவிழ்த்துவிடப்பட்டது. வீடுகள் இடிக்கப்பட்டன. ஒரு வீட்டில் தாய், சிறிய தாய், ஒருமகள் ஆகியோர் இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனால் மனமுடைந்த தந்தையும் இன்னோரு மகளும் நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டனர். வீடுகளில் இருந்த சேலைகள் அனைத்தும் கிழிக்கப்பட்டன. படுக்கைகளாகப் பாவிக்கப்பட்டன. நெல்மூடைகள் கிழிக்கப்பட்டு சிந்தப்பட்டிருந்தன. புத்தகங்கள் பரவலாக வீசப்பட்டிருந்தன. வீடுகளில் தொங்கிய பெண்பிள்ளைகளின் படங்களில் குங்குமத்தால் திலகம் இடப்பட்டிருந்தது. பராசக்தி வித்தியாசாலை இருந்தவிடம் தெரியாமல் புல்டோசரால் தகர்த்து நீக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, புளியங்கூடல், பள்ளப்பலம், வேலணை ஆகிய இடங்களில் முதல் மூன்று நாட்களில் மாத்திரம் 60க்கு மேற்பட்டோர் இராணுவத்தின் நடவடிக்கைகளால் கொலையுண்டனர். நூற்றுக்கு மேறபட்டோர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட மக்களின் சடலங்கள் ஆங்காங்கு காணப்பட்டன. சில வைக்கோலிட்டு எரிக்கப்பட்டிருந்தன. பலர் வெட்டுக்காயங்களுக்குள்ளாகினர் வேலணை மேற்கில் செ. செல்வந்திநாதன், அவரது மனைவி சொருபா, மகன் அமபிகாபதி ஆகியோர் பொம்பர் தாக்குதலினால் மரணமானார்கள். நாரந்தனையில் செ. பாலன், எஸ். மணவன், பே. சிவகுமார், பி. அன்ரனி ஆகியோர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்பகுதியில் மா வசந்தகுமார், ச அமுதலிங்கம், எஸ். கிருஸ்ணபிள்ளை ஆகியோரும் கொலையுண்டவர்களாவர். காரைநகரில் கைகள் கட்டப்பட்டநிலையில் ஒரு வயோதிபர் ஆறுநாட்களின் பின்னர் மீட்கப்பட்டார்.

ஒப்பறேசன் போர்ட் என்ற இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஜெனரல் கொப்பேகடுவ தலைமை தாங்கினார்.

இவற்றிற்கு மத்தியில் மண்டைதீவில் நிலைகொண்ட இராணுவம யாழ் கோட்டையை நோக்கி நகர்வதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

13, செப்டம்பர், 1990.

யாழ்ப்பாண நகரப்பகுதிக்கு மேலாக வலம் வந்த 'வை 12' விமானம் காலை 5 மணிக்கே பீப்பாக் குண்டுகளை வீசத்தொடங்கியது சிறிது நேரத்தில் மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி நகரவிருந்த இராணுவத்திற்கு உதவியாகப் புலிகளின் நிலை எனக் கருதிய இடங்களில் கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசியது.

இரண்டு கடற்படைப் பீரங்கிப் படகுகள் மண்டைதீவிற்குக் கிழக்குக் கரையில், சிறுதீவிற்கு அருகில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன. கோட்டைக் கரையை நோக்கி அவை குண்டுகளைக் கக்கத் தயார் நிலையில் இருந்தன.

காலை 5.55 மணி. கோட்டையின் காவலரண்கள், கொத்தளங்கள் என்பனவற்றிலிருந்து புலிகளின் காவல் அரண்களை நோக்கித் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் ஆரம்பமாகியது. கோட்டையின் மூன்று பக்கங்களிலிருந்தும் வழமைக்கு மாறாகத் துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தப்பட்டமை, போராளிகளின் கவனத்தை மண்டைதீவுப் பக்கமிருந்து திசை திருப்புவதற்காகவே என்பதைக் கணத்தில் புலிகள் புரிந்து கொண்டனர்.

சிறுதீவிலிருந்து பல விசைப்படகுகள் இராணுவ வீரர்களை நிரப்பிக்கொண்டு கோட்டையை நோக்கி வேகமாகப் புறப்பட்டு வருவதைப் போராளிகள் அவதானித்துவிட்டனர். உடனடியாக எல்லாக் காவலரண்களுக்கும் தகவல் பரிமாறப்பட்டது. போராளிகளின் துப்பாக்கிகள் கடல் பக்கமாக விரைந்து வரும் விசைப்படகுகளை நோக்கித் திருப்பித் தயாராகின. படகுகள் புறப்பட்ட அதே நேரம் சிறுதீவுக் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு பீரங்கிப் படகுகளும் குண்டுகளைப் பொழிந்தன. பொலீஸ் நிலையக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த காவலரணும், பண்ணைச் சந்திக் காவலரணும் ஸ்ரீ லங்கா விமானப்படையினதும் கடற்படையினதும் பிரதான இலக்குகளாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைக்குள்ளிருந்தும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இடைவெளியின்றிப் பீரங்கிக் குண்டுகளும், எறிகணைகளும் போராளிகளின் காவலரண்கள் மீது வீசப்பட்டன. நிமிடத்திற்கு ஆயிரம் துப்பாக்கி ரவைகள் சரமாரியாகப் பாய்ந்தன. போராளிகளின் சில காவலரண்கள் சரிந்தன. போராளிகள் சிலர் செத்து விழுந்தனர். சிலர் காயமடைந்தபடி சரிந்தனர். எனினும் போராளிகளின் மனவலிமை குன்றவில்லை. கடலேரியூடாகக் கோட்டையை நோக்கி விரைந்து வரும் விசைப்படகுகளை நோக்கிப் புலிகளின் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. துப்பாக்கிச் சன்னங்கள் பாயக் கூடிய எல்லைக்கு வந்ததும் ஒரே நேரத்தில் தம்மை நோக்கிச் சரம் தொடுத்த போராளிகளின் துப்பாக்கிச் சன்னங்கள் இராணுவத்தினரை நிலைகுலைய வைத்தன.

ஒப்பறேசன் போர்ட் இராணுவ நடவடிக்கையில் கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் கஜபாகு றெஜிமென்ட்டைச் சேர்ந்த 1, 4, 6 படைப்பிரிவினரும், சிங்கறெஜிமென்ட்டைச் சேர்ந்த 1 படைப்பிரிவினரும், கெமுனு படைப்பிரிவினரும் பங்கு கொண்டனர். மண்டைதீவிலிருந்தும் சிறுதீவிலிருந்தும் பரவைக் கடலைக்கடந்து கோட்டைக்கரையை அடைவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவர்களுக்கு விமான, கடற்படைகள் உதவின. 2000 இராணுவ வீரர்கள் பரவைக்கடலைக் கடக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். 30 விசைப்படகுகள் ஆழமற்ற கடற்பரப்பில் பயன்படுத்துவதற்கென விசேஷமாகத் தயாரிக்கப்பட்டன. பயன்படுத்தப்பட்டன. இவற்றில் ஏறிய இராணுவத்தினர் கோட்டையை நோக்கி வந்தனர். கோட்டையைச் சூழ்ந்திருந்த புலிகளின் காவலரண்கள் அனைத்தும் விமானக் குண்டு வீச்சுக்களால் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன என்ற நம்பிக்கையுடன் விரைந்து வந்தனர். முதல் வந்த ஆறு விசைப்படகுகள் புலிகளின் தாக்குதலிற்குள்ளாகிச் சிதறின. பலபடகுகளிலிருந்து இராணுவத்தினர் கடலிற்குள் குதித்துவிட்டனர். சில படகுகள் வந்த வேகத்தில் திரும்பிச்சென்றன. இச்சந்தர்ப்பத்தில் பண்ணைச் சந்தியிலிருந்த புலிகளின் பலமான காவலரண் விமானத்தாக்குதலால் உடைக்கப்பட்டதை பயன்படுத்தி மூன்று விசைப்படகுகள் வரையில் அப்பகுதியில் கரையேறின. ஏறிய வேகத்தில் அதிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து குதித்த ஸ்ரீ லங்கா இராணுவ வீரர்கள் சிலர், பண்ணை வீதியை அடுத்து மேற்குப்புற அகழிக்கு வெளியில் அகழி மதிலோடு இருந்த தாழ்காவலரணில் (சின்னக்கோட்டையில்) புகுந்து கொண்டனர். புகுந்து தம்மை மறைத்துக்கொண்டு, சென்ரி நிலை எடுத்துக்கொண்டனர் சின்னசகோட்டைக்குள் புகுந்தவர்கள் மறைவெடுத்திருந்ததால் புலிகளால் தாக்க முடியாது போனது.

யாழ் கோட்டையை அடைய எடுத்த முயற்சியில் 25 இராஜெவத்தினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீ லங்கா அரசு கூறியது. 106 பேர் சடுங்காயமடைந்ததாகவும் குறிப்பிட்டது. இந்த எண்ணிக்கையை விட மிக அதிகமாகவே பலியாகியோர் தொகை இருக்க முடியும்.

யாழ்ப்பாணக் கோட்டையின் மேற்குப்பக்கமாக அகழியை அடுத்து அமைந்திருந்த சின்னச்கோட்டைக்குள் புகுந்து கொண்ட இராணுவத்தினர் அங்கிருந்து நிலையெடுத்து பண்ணைச்சந்தியிலிருந்த புலிகளின் காவலரண்களைக் கைப்பற்ற முயன்றனர். பண்ணைச்சந்தியில் திறந்த வெளியில் போராளிகளின் பலமான அரண் ஒன்றிருந்தது தண்டவாளங்கள், மண்மூடைகள், ரயர்கள் கொண்டு அமைந்த பலமான அரணாக அது விளங்கிது. இதனையும் தொலைத்தொடர்பு நிலையத்தையும் இணைக்கும் வகையில் எலிவளை போன்ற சுருங்கைகள் அமைந்திருந்தன.

தனித்திருந்த பண்ணைச்சந்திக் காவலரணை விமானங்கள் தாக்கின. ஆர்பிஜி மூலம றொக்கட் தாக்குதல் நடாததப்பட்டது. கோட்டை மதிலின் மீதிருந்தும் பீரங்கித்தாக்குதல்கள் நிகழ்ந்தன. இவற்றிற்கு எதிராக அக்காவலரணால் தாக்குப்பிடிக்க முடியாது போனது. தண்டவாளங்கள் உடைந்து போயின. மண்மூடைகள் சிதறின. காயமடைந்த போராளிகளைப் பங்கர்களூடாக அப்புறப்படுத்திவிட்டு, அவ்விடத்தில் புதிய போராளிகள நிலையெடுத்துத் தாக்கினர். எனினும, பண்ணைச்சந்திக் காவலரண் முற்றாகத் தகர்ந்துபோனதும், புலிகள் அதனைக் கைவிட்டு நகர நேர்ந்தது.

தொலைத்தொடர்புக் காவலரணிலிருந்து பண்ணைச்சந்திக் காவலரணிற்கு உதவிகள் செல்வதைத் தடுப்பதற்காக மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் விமானங்கள் தொலைத்தொடர்பு நிலையப் பகுதியில் மாறிமாறிக் குண்டுகளை வீசத்தொடங்கின. அதேவேளை சின்னக்கோட்டைக்குள் அரண் எடுத்திருந்த இராணுவத்தினரில் ஒருபகுதியினர் மெதுவாகப் பண்ணைச்சந்திக் காவலரணை நோக்கி நகர்ந்தபோது, மண்மூடைகளற்ற, பாதுகாப்பற்ற பங்கருக்குள் நின்றிருந்த போராளிகளின் துப்பாக்கிகள் முழங்கின. முன்னேறிய இராணுவத்தினர் குண்டடிபட்டுச் சரிய, ஏனையோர் பின்வாங்கிச் சின்னக்கோட்டைக்குள் புகுந்து கொண்டனர்.

பண்ணைக் கரையில் போராளிகளின் துப்பாக்கிச்சன்ன மழையிடையே புகுந்து தப்பிவந்து கரையேறிய இராணுவத்தினர் சிலர், பொலிஸ் நிலையக் கட்டிடங்களைக் கைப்பற்றும் நோக்குடன் கடற்கரை வீதியில் நகர்ந்தனர். பொலிஸ் நிலையக் காவலரணிலிருந்தும், விளையாட்டரங்குக் காவலரணிலிருந்தும் முழங்கிய துப்பாக்கி வேட்டுகளுக்கு அவர்கள் பலியாகி நிலத்தில் சரிந்தனர்.

எனினும், மண்டைதீவிலிருந்தும், கடலிலிருந்தும், கோட்டையிலிருந்தும் ஏவப்பட்ட குண்டுகளால் பொலிஸ் நிலையக் காவலரண்கள் உடைந்தன. உடைந்து குவிந்த அந்தக் காவலரண்களையே காப்பரண்களாக்கிப் போராளிகள் "போரிட்டனர்.

# 6

## அன்று பகல் 11–15 மணி

மண்டைதீவிலிருந்து பண்ணைக் கரையில் இறங்க முயன்ற இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் ஏற்படுத்திய ஆற்றாமை, விமானப் படைகளின் மூர்க்கமான தாக்குதலாக மாறியது. மூன்று போர் விமானங்கள் யாழ்ப்பாண நகரைச் சுற்றி வந்து, போராளிகளின் நிலைகள் மீது குண்டு வீசுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் வீசின, ஒரு போர் விமானம், பண்ணைச்சந்திக் காவலரணைத் தகர்த்தெறியும் நோக்குடன் சில தடவைகள் வேகமாகக் குத்தெனச் சரிந்து சாய்வாக எழுந்து குண்டுகளை வீசியது உயர்ந்து எழுந்து, காற்றில் சரிந்தபடி விர்ரென இறங்கி ஏறுகின்ற அந்தக்கணப்பொழுதைக் கணித்த ஒரு போராளியின் விமான எதிர்ப்புத் துப்பாக்கி முழங்கிய சரமாரியான குண்டுகள் விமானத்தைத் துளையிட்டன. பதிந்து தாக்கிவிட்டு உறுமியபடி எழுந்த அந்தப் போர் விமானம், தடுமாறித் தள்ளாடி பண்ணைக் கடலுக்குள் குப்புற விழுந்தது. பண்ணை வீதிக்குக் கிழக்குப் பகுதியில், கோட்டைக்கு நேரே முன்னால் சுமார் 1000 யார் தொலைவில் அது விழுந்து சிதறியது. கோட்டை யுத்தத்தில் ஸ்ரீ லங்கா இராணுவம் சந்தித்த பாரிய இழப்பு இதுவாகும்.

போராளிகளின் பொலீஸ் நிலையக் காவலரணும், பண்ணைச்சந்திக் காவலரணும் சரிந்து சிதறிப் போயின. அதே வேளை பண்ணைக் கடலில் சுட்டு வீழ்த்தப்பட்ட போர் விமானம் ஏற்படுத்திய இரைச்சல் சுற்றாடலை ஒரு சில கணங்கள் அமைதியில் ஆழ்த்தியது. அந்த நேரம் சின்னக்கோட்டைக்குள் புகுந்திருந்த இராணுவத்தினர் அகழியில் இறங்கி நடந்து கடந்து கோட்டையின் மேற்குப்பக்க மதிலடிவாரச் சுரியில் ஒதுங்கி நின்றனர். அதேவேளை கோட்டை மதிலுச்சியிலிருந்து கயிற்றின் மூலம் ஏணி ஒன்று இறக்கப்பட்டது. அதில் ஏறி இராணுவத்தினர் கோட்டைக்குள் புகுந்துகொண்டனர்.

கோட்டைக்குள் புகுந்த இராணுவத்தினர் முற்றுகை முறியடிப்பு எனக் கூறியதால், கோட்டைக்குள் இருந்தவர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தனர். ஸ்ரீ லங்கா அரசு வானொலியில் அறிவித்தவாறு யாழ் நகரின் ஸ்ரான்லிவீதிவரை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது என நம்பினார்கள். கடல் வழியாக வந்த இராணுவத்தினர் குருநகர் தொடர்மாடியில் முகாம் அமைத்துள்ளனர் என்றும், இப்போது புலிகள் மீது இரு தரைப்பகுதிகளிலிருந்தும் தாக்குதல் நடைபெறுகிறது என்றும், விரைவில் கோட்டையை மீட்டு எடுத்து விடுவார்கள் என்றும் மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து அறிவிக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. இந்த அறிவிப்பினாலும், மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து பரவைக்கடலைக் கடந்து கோட்டைக்குள் நுழைந்துவிட்டோம் என்ற உணர்ச்சியாலும் உந்தப்பட்ட சில இராணுவ வீரர்கள் கவசவாகனம் ஒன்றில் ஏறிக் கோட்டையின் பிரதான வாயில் வழியாக வெளியேற ஆயத்தமாயினர்.

நேரம் நண்பகல் 1 மணி.

கோட்டைக்குள்ளிருந்து இராணுவக் கவச வாகனம் ஒன்று கம்பீரமாக வெளிவந்தது. மண் மூடைகள் அடுக்கப்பட்டு உள்ளே சுமார் பத்து இராணுவத்தினரை ஏற்றியபடி வெளிவந்த கவச வாகனம் எதுவித எதிர்ப்புமின்றி உடைந்து கிடந்த போராளிகளின் பொலீஸ் நிலையக் காவலரணைத் தாண்டிச் சென்று நின்றது. போராளிகளின் சடலங்கள் அவர்களின் கண்களில் பட்டன. உடைந்து சரிந்து கிடந்த இந்தக்கட்டிட இடிபாடுகளுள் எவரும் இருக்க முடியாது என இராணுவத்தினர் கருதினர்.

உடைந்து கிடந்த கட்டிடச் சிதைவுகளிடையேயிருந்து எழுந்த போராளி சுரேஸ், தனது ஒற்றைக் கையில் தூக்கி இயக்கிய ஏகே 47 இலிருந்து பாய்ந்த குண்டுகள் கவச வாகனத்தில் வந்தவர்களைப் பீதிகொள்ள வைத்தன. அதனைத் தொடர்ந்து இடிபாடுகளிடையேயிருந்து எழுந்த போராளிகளின் துப்பாக்கிகள் முழக்கமிட்டபோது தாம் பொறிக்குள் சிக்கிக் கொண்டமையைப்புரிந்து கொண்டனர். கவச வாகனத்திலிருந்து குதித்தோட முற்பட்டபோது பொலீஸ் நிலைய வாசலிலேயே ஏழு இராணுவத்தினர் சடலமாகச் சரிந்தனர். போரளி சுரேஸ் காயமடைந்து விழுந்தான். தப்பியோடிய இராணுவத்தினர் ஓடிக் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் இறுதி முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

நேரம் பிற்பகல், மூன்றுமணி.

வானில் குண்டுவீச்சு விமானங்கள் தோன்றி, கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசிச் சிதைக்கத் தொடங்கின. அன்று தொடக்கம் 25 செப்டம்பர் 1990 வரை குண்டு வீச்சுக்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. கோட்டையை மீட்க வந்த இராணுவம் கோட்டைக்குள் மாட்டிக்கொண்டு தவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டையைச் சுற்றிப் போராளிகளின் காவலரண்கள் மீண்டும் படிப்படியாக அமைக்கப்பட்டன; பலப்படுத்தப்பட்டன. அதே வேளை இடையிடையே வெளியிலிருந்து கோட்டைக்குள் ஏவப்பட்ட பசிலன் குண்டுகள் கோட்டைக்குள் சிக்கிக் கொண்ட இராணுவத்தினரைச் கலங்க வைத்தன. அத்தோடு காயமடைந்தோர், உணவுதட்டுப்பாடு, வெடிப்பொருட் தட்டுப்பாடு அனைத்தும் சேர்ந்து 'சரணடைவதா, தப்பி ஓடுவதா' என்ற இறுதி முடிவு ஒன்றிற்கு வரவேண்டிய அழுத்தத்தை ஏற்படுத்தின.

26, செப்டம்பர், 1990.

அதிகாலை 12.15. மறுநாள் தியாகி திலீபனின் 3 வது நினைவு நாள். விடுதலைப்புலிகள் கோட்டையை விடுவிப்பதற்கான இறுதி முயற்சியில் இறங்கினர். நள்ளிரவுப் பயங்கரத்தில் கோட்டைக்குள் 'பசிலன் 2000' குண்டுகள் 50 வரையில் மழையாக இறங்கின. ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் எதிர் நிற்க முடியாது தப்பி ஓடி விடும் முயற்சியில் ஈடுபட்டனர். முன்னரே திலீபனின் நினைவு நாளில் நிச்சயம கோட்டை தாக்கப்படும் என்பதை அவர்கள் தீர்மானித்து வைத்திருந்தார்கள். அதனால் மக்கள் வங்கிக்குச் சொந்தமான நகைகள், வங்கிக்குச் சொந்தமான பணம் என்பன இருந்த இரும்புப்பெட்டிகள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டன. பழைய துவக்குகள் ஆயிரக்கணக்கில் தீயிடப்பட்டன. வாகனங்கள் பல தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இவ்வளவும் நிகழ்த்தி விட்டுத் தயாராக இருந்தனர்.


பெண்கள் சிறைச்சாலைக்கு அருகில் கோட்டை மதிலின் தென் பக்கத்தில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட நீர் வழி (Water Gate) இருந்தது. அது பின்னர் கழிவுகளை அகற்றுவதற்கான வாயிலாகப் பயன்பட்டது. கோட்டை சிறைச்சாலையாக மாறியபோது, அது பாதுகாப்பில்லை என எண்ணி வாயிலைக் காங்கிரீட் கற்களினால் அடைத்துக்கட்டியிருந்தனர். அந்த வாயிலை அடைத்த பலமற்ற காங்கிரீட்கற்களை அகற்றி விட்டு ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் அதன் ஊடாக இரவோடிரவாகத் தப்பி ஓடினர். 365 வருட ஆதிக்க நிலையை விட்டு அவர்கள் புறமுதுகிட்டுத் தப்பிச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org